# மாருதம்

சமூக, கல்வி, கலை, இலக்கிய சஞ்சிகை - தை - மார்கழி 2014 இதழ் - 15

ISSN 1800 - 4873

100/=




கலாபூஷணம்
கலாநிதி முல்லைமணி

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

# மாருதம்

தை - மார்கழி 2014 இதழ் 15


ஓயுதல் செய்யோம் - தலை
சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் - பல
வண்மைகள் செய்வோம்


**ஆசிரியர் குழு:**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன்
கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்

**உதவி:**

திரு.த.பிரதாபன்
செல்வி.து.நந்தீஸ்வரி(நந்தா)

**அச்சு:**

மல்ரிவிஷன் அச்சுக்கலையகம்
77, 1ம் குறுக்குத்தெரு, வவுனியா.
தொ.பே: 024 : 2223669

வடிவமைப்பு: க.சுவீதன்

இலச்சினை: ப.சிவஅன்பு

தலைப்பு: ஆ.இராசையா

**தொடர்புகட்கு:**

(1) 166, செல்வ பவனம்
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
021-225 5902

(2) 90, திருநாவற் குளம்
வவுனியா.
024 2221676

ISSN : 1800-4873

**வெளியீடு:**


## நண்பர்களுக்குமட்டும்

## உள்ளே


| | |
|---|---|
| அட்டைப் பட அதிதி | 3 |
| இலக்கியக் கொள்கை | 6 |
| சந்தனமும் சாக்கடையும் | 10 |
| கலை இலக்கயச் செல்வர் | 13 |
| கல்வி, கலை, இலக்கியம் | 18 |
| இயற்றமிழ்ச் செல்வர் | 23 |
| நானுமோர் களவோ | 25 |
| மணிவிழாக்கண்ட | 32 |
| ஆடற்கலைச் செல்வர் | 35 |
| வேலிகள் | 37 |
| கனவு மெய்ப்பட வேண்டும் | 42 |
| பல்வேறு ஆக்கங்களை | 61 |
| மழலை இன்பம் | 63 |
| வெற்றுத் தூறல் | 64 |
| இயற்கையின் அழகு | 65 |
| கலாகீர்த்தி | 66 |
| எங்கள் தோள்களில் | 69 |
| வாணியே வரம் அருள்வாய் | 72 |
| எழுந்து வாரீர் | 73 |
| தொல்லை வினைகள் | 74 |
| தமிழன் | 75 |
| ரீ.எம்.சௌந்தரராஜன் | 76 |
| தேர்தல் நட்பு | 80 |
| சிறுவர் கவிதை, எஞ்சியதும் என்ன | 81 |
| வெறுமை | 82 |
| மன்னார் மாதோட்டம் | 83 |
| இது புதினம் | 84 |
| பாலுமகேந்திரா | 86 |
| அரியான் பொய்கை | 87 |
| நட்சத்திரங்களும் நானும் | 89 |
| இலிங்கத்திருமேனி | 90 |
| வண்மைமிகு வவுனியா | 92 |
| கற்பூரம் | 93 |
| செல்வா கனகநாயகம் | 95 |
| விருதுகள், கௌரவங்கள் | 97 |
| முழுநிலா மாதாந்த | 102 |
| வவுனியா மாவட்டம் | 104 |



**வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**

பதிவிலக்கம் : வடமா/க.அ/பண்/வவு/வவு/2013/02

Published by : Circle of Arts and Literary Friends - Vavuniya, SriLanka. Estd: Feb.1997
Editors :Agalangan & Kandiah Shriganeshan email: kshriganeshan@yahoo.com

*மாருதம் வாசக அன்பர்களே!*

மாருதம் இதழ் 15 உடன் உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்வடைகிறோம். கடந்த ஆண்டிலும் வழமைபோல நிறைநிலாக் கருத்தாடல்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

வேறு எந்த ஆண்டிலும் இல்லாத அளவில் கடந்த ஆண்டில் எமது வட்டத்தின் வெளியீடுகளாக ஒன்பது நூல்கள் வெளிவந்துள்ளன.

இருட்டு மனிதர்கள் - நாவல் (முருகேசு நந்தகுமார்-26),
குட்டி முயலும் வேட்டை நாயும்-சிறுவர் நாடகங்கள் (கந்தையா ஸ்ரீகந்தவேள்-27)
கடவுளிடம் சில கேள்விகள்- கவிதைத் தொகுப்பு (வே.முல்லைத் தீபன்-28),
தமிழ்த்தூது வண.பிதா.தனிநாயகம்அடிகளார்-வரலாறு (கலாநிதி அகளங்கன்-29),
கூவாதே கூடுகட்டு - கவிதைத்தொகுப்பு (மாணிக்கம் ஜெகன்- 30)
வாழும் காலம் யாவிலும் - நாவல் (மைதிலி தயாபரன்- 31)
சொந்தங்களை வாழ்த்தி - நாவல் (மைதிலி தயாபரன்- 32)
துளிர்க்கும் தளிர்கள் - கவிதைத் தொகுப்பு (அ.கோபிகா- 33)
விஞ்சிடுமோ விஞ்ஞானம் - கவிதைத் தொகுப்பு (மைதிலி தயாபரன்- 34),

என மூன்று நாவல்கள், நான்கு கவிதைத் தொகுப்புக்கள், ஒரு சிறுவர் நாடகம், ஒரு வரலாறு என ஒன்பது நூல்களை வட்டம் வெளியிட்டது மகிழ்ச்சி தருகிறது. இவற்றை விட செட்டி குளம் பசுந்திரா சசியின் கட்டடக் காடு நாவலின் வெளியீட்டு விழாவையும் வட்டம் நடத்தியது.

18 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள வட்டம் இவ்வாண்டில் செல்வி மேரி அன்ரோனியா ஸ்ரனிஸ்லாஸ் அவர்களுக்கு கலை இலக்கியச் செல்வர் பட்டத்தையும், பண்டிதை செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம், அவர்களுக்கு இயற்றமிழ்ச் செல்வர் பட்டத்தையும், திருமதி சூரிய யாழினி வீரசிங்கம் அவர்களுக்கு ஆடற் கலைச் செல்வர் பட்டத்தையும் வழங்கி மகிழ்கிறது.

அடைமழை, வருடமுடிவு, ஜனாதிபதித் தேர்தல் முதலான பல காரணங்களால் 17 ஆண்டு நிறைவு விழாவும் மாருதம் 15 வெளிவருவதும் தாமதமாகி விட்டன. மன்னித்து ஏற்றுக்கொள்ளும் படி பணிவுடன் வேண்டுகின்றோம்.

மீண்டும் புதிய கலை இலக்கிய அம்சங்களுடன் அடுத்த இதழில் சந்திப்போம்...

நன்றி

-ஆசிரியர்கள்-

அட்டைப்பட அதிதி

# கலாநிதி முல்லைமணி வே.சுப்பிரமணியம்

- கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் -



வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வெளியிடும் மாருதம் சஞ்சிகையின் 15 வது இதழின் அட்டையை அலங்கரிப்பவர் கலாநிதி.முல்லைமணி வே.சுப்பிரமணியம் அவர்கள். வன்னிமண்ணின் அடையாளமாக, பண்பாட்டின், அரசியலின், இலக்கியத்தின் அடையாளமாகக் கொள்ளக்கூடிய 'பண்டாரவன்னியன்' நாடகத்தை எழுதிப் புகழ்க்கொடி நாட்டியவர்; ஏரோட்டும் சிற்றுழவனுக்கும் எழுத்தறியாத் தமிழ் மாது ஒருவருக்கும் பிறந்தவர் முல்லைமணி அவர்கள். உடன் பிறந்தோர் நான்கு சகோதரர்கள், ஒரு சகோதரி. முல்லைத்தீவு முள்ளியவளையை பிறப்பிடமாகக் கொண்டவர். நான்கு ஐந்து தலைமுறையாக முல்லைத்தீவைப் பூர்வீகமாகக் கொண்டவர்.

பெரும்பாலும் காட்டுவளத்தையே கொண்ட முல்லைத்தீவு மாவட்டம் கடற்பரப்பையும் நந்திக்கடல் முத்தையன்கட்டுக்குளம், விசுவமடு, வவுனிக்குளம் எனப்பல நீர் நிலைகளையும் கொண்ட பூமி. பெரும்பாலும் வயல் உழைப்பை நம்பிய சீவியம். முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளைக் கிராமத்தில் சபாபதி வேலுப்பிள்ளை மற்றும் கோணப்பர் மகள் பொன்னம்மா தம்பதியினரின் இரண்டாவது மகனாகவும் மூன்றாவது பிள்ளையாகவும் 03.05.1933 இல் பிறந்த முல்லைமணி வே.சுப்பிரமணியம் முல்லைத்தீவு மண்ணின்-வன்னி மண்ணின்-ஏன்-ஈழத்தமிழரின் பண்பாட்டு, இலக்கிய அரசியல் அடையாளமாக பரிணமித்தமை எமது மண்ணின் தவப்பயன் ஆகும்.

மண்ணின் வளங்களை ஏற்று அதன் மீது தமது உழைப்பை ஏற்றி வாழும் விவசாயக்குடும்பத்தில் பிறந்து, உழவு, கலப்பை, விதைப்பு, காவல், நீர்ப்பாசனம், அறுவடை, மாடு வளர்ப்பு, மேய்ப்பு, காட்டு வளங்களுடனான பிணைப்பும் வாழ்வு முறையும் கிராமியத் தெய்வ வழிபாடும் - காட்டா விநாயகர் வற்றாப்பளை அம்மன் தரிசனம் - என்கிற பண்பாட்டுச் சூழலில் வளர்ந்து கொண்டே தமிழ் சைவக்கல்வியும், நவீன விஞ்ஞான ஆங்கில, இலக்கிய கல்வியும் ஒருங்கு சேர பெற்றுக்கொண்டு ஒரு இலக்கியகர்த்தாவாக மிளிர்ந்த முல்லைமணியின் வாழ்வு எமக்கெல்லாம் ஒரு முன்னுதாரணம் ஆகும்.

முள்ளியவளை சைவப்பாடசாலையில் ஆரம்பக்கல்வியைத் தொடங்கி சிரேஷ்ட கல்வித்தராதரப்பத்திரப் பரீட்சையில் (தமிழ்)1948இல் சித்தி பெற்றார். 1949 இல் திருநெல்வேலி பண்டித கலாசாலையில் படிக்கும் வேளையில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் தொடர்பும் தரிசனமும் வாய்க்கின்றது. இயற்கையாகவே முல்லைமண்ணின் மக்கள் மத்தியில் காணப்பட்ட நாட்டார்கதைகள் முதல் கந்தபுராணம் கம்பராமாயாணம், பாரதக்கதைகள் என்பன முல்லைமணியின் உள்ளத்தை ஈர்த்திருந்த நிலைமையில் பண்டித கலாசாலை தமிழ்க்கல்வி அவரின் சிந்தையை கொள்ளை கொண்டது என்றால் மிகையாகாது.

தொடர்ந்து சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் சிரேஷ்ட தராதரப் பத்திரப்பரீட்சையில் (ஆங்கிலம்) சித்தியெய்தி மருத்துவக்கல்லூரியில் உதவிவைத்தியக் கல்வியை 1954 இல் தொடங்கிய போதும் மொழிக்கல்வி மீது கொண்ட நாட்டம் காரணம் ஆக 1955 முதல் 1956 வரை மகரகம ஆங்கில ஆசிரிய கலாசாலையில் விஞ்ஞானத்துடன் கூடிய பயிற்சிக்கல்வியைப் பெற்று 03.01.1957 முதல் ஆசிரியராக பதவி ஏற்றார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தொடங்கி பின்னர் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தொடர்ந்து ஆறு வருடங்கள் கற்பித்து வந்த வேளையில் தனது பட்டப்படிப்பையும் கற்று சிறப்படைந்து 1973 முதல் 1977 வரை மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக சேவையாற்றினார். தமிழ், வரலாறு, வடமொழி, மலையாளம் போன்ற பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்ற பயிற்சியும் முல்லைமணியின் பார்வையை அகலித்திருந்தது. இதனால் தமிழ் விரிவுரை ஆசிரியராகிய முல்லைமணி பண்பாட்டு அடையாளமாக மிளிரும் எழுத்தாளராகப் பரிணமிக்கும் சூழலும் கல்வி, கலை, பிரதேச உழைப்புப் பகைப்புலத்தில் இருந்து உருவாக்கம் பெறுகிறது; அது உத்வேகமும் கொடுக்கிறது. சுவாமி விபுலானந்தர் முதல், எப்.எக்ஸ்.சி நடராசா, வித்துவான் கமலநாதன், பண்டிதர் வி.சி.கந்தையா, புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை போன்றோர் தமிழ் வளர்த்த மட்டக்களப்பில் தமது தமிழ் சார்ந்த பணியை தொடங்கியதும் முல்லைமணியின் சவாலான இலக்கிய வாழ்வுக்கு உரம் கொடுத்தது எனலாம். பல்வேறு தமிழ் விழாக்களை ஒழுங்கு செய்து நடத்திய அனுபவம் பின்னாளில் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் தமது பணியை பிரபல கல்வி கலை இலக்கிய கர்த்தாக்களுடன் மேற்கொள்ள வழி சமைத்தது.

முத்தமிழ் அறிஞர் சொக்கன், இயலிசைவாரிதி வீரமணிஐயர், கலை வேந்தன் வேல் ஆனந்தன், வித்துவான் குமாரசாமி போன்றோருடன் செயற்பட்டு நின்றமையினால் தொடர்ந்து ஒரு காத்திரமான படைப்பாளியாக உருவாகிய கதையை நாம் காணலாம். 1968 இல் பண்டாரவன்னியன் நாடகம் எழுதப்பட்டு தயாரிக்கப்படுகின்றது. 1970இல் முதல் பிரசுரமும், 1972 இல் வீரகேசரி நிறுவனத்தால் மறு பிரசுரமும் செய்யப்படுகின்றது. இன்னும் அது பல பதிப்புக்களை தொடர்நது பெறுகின்றது. 1977 இல் 'அரசிகள் அழுவதில்லை' என்ற சிறுகதைத் தொகுப்பு இலங்கை அரச தேசிய சாகித்திய மண்டலப் பரிசை வென்று கொள்கிறது. தொடர்ந்து பல பாமாலைகளை எழுதி வெளியிட்டுள்ளார். ஓட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் பாமாலை, நெடுங்கேணி வில்வையடிப்பிள்ளையார் பாமாலை என எழுத்துப்பணி தொடர்கிறது. 1998 இல் வன்னியர் திலகம் நாவலை வவுனியா முத்தமிழ்க்கலாமன்றம் வெளியிட்டது. இந்நூல் இலங்கை அரச தேசிய சாகித்திய மண்டலப் பரிசைப்பெற்றது. ஏற்கனவே 'மல்லிகை வனம்' எனும் அவரது நாவலை சென்னை சோமு புத்தக நிலையம் 1985 இல் வெளியிட்டியிருந்தது.

நாட்டின் அரசியல் சூழல் முல்லைமணியின் வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக இருந்து தமிழ்ப்பணியுடன் இலக்கிய நாடகம், காத்தவராயன் நாடகம், கோவலன் கூத்து என ஆசிரிய மாணவர்களை ஆற்றுப்படுத்தி நின்றவர் அந்நியப்படைகளின் இருப்பின் காரணமாக முல்லைத்தீவு மண்ணை நோக்கி தன் கவனத்தை திருப்பினார். 1987 முதல் முல்லைத்தீவு மகா வித்தியாலய கொத்தணி அதிபராகவும் 1990 முதல் கல்வி திணைக்கள பிரதம கல்வி அதிகாரி ஆகவும் 01.01.1991 முதல் பிரதேச கல்விப்பணிப்பாளர் ஆகவும் கடமையாற்றி 1993 மே மாதம் 03 ம் திகதி ஓய்வு பெற்றார்.

ஓட்டுச்சுட்டான் சிவகுரு மகள் பரமேஸ்வரியை இலக்கிய கலாநிதி கணபதிப்பிள்ளை அவர்களே முல்லைமணிக்கு மணம் பேச, வரித்துக் கொண்ட வாழ்வுடன் ஐந்து பிள்ளைகள் பெற்று குடும்ப வாழ்விலும் சிறந்து விளங்கினார். மண்ணோடு சேர்ந்த பல்வேறு பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி சமூகத்தின் உயர்வுக்கும் பாடுபட்டமை அவரது வாழ்க்கை வரலாறு மூலம் அறியக்கூடியதாக உள்ளது. முள்ளியவளை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவராக 10 ஆண்டுகளும், முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி பெற்றார் ஆசிரியர் சங்க செயலாளராக 4 ஆண்டுகளும், பழைய மாணவர் சங்க கௌரவ தலைவராக 3 ஆண்டுகளும், முள்ளியவளை சனசமூக நிலைய தலைவராக 5 ஆண்டுகளும், முல்லை இலக்கியவட்டத் தலைவராகவும் பணியாற்றியமை அவரது பன்முகப்பட்ட பரந்த சமூகசேவையை சுட்டி நிற்கின்றது.

படித்தல், படிப்பித்தல், எழுதுதல், சமூகவேலை செய்தல் என தன் கடன் பணி செய்து நின்ற முல்லைமணி அவர்கள், தொடர்ந்து பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வன்னி வளநாடு மீது கொண்ட பற்றினால் மேற்கொள்ளலானார். 1999இல் இலக்கியப் பார்வை நூலும், 2000 ஆண்டளவில் "கமுகஞ்சோலை" எனும் நாவலும் முல்லை இலக்கியவட்ட வெளியீடாக வந்தன. 2001 இல் "வன்னியியற் சிந்தனை" நூலும், 2003 இல் "மழைக்கோலம்" நாவலும், 2005 இல் "கொண்டு வந்த சீதனம்" என்ற சிறுகதைத்தொகுதியும் 2005இல் நினைவுச்சரங்கள் என்ற நூலும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தால் வெளியிடப்பட்டன.

அப்பச்சி மகாலிங்கம், முருகையன், எஸ்.பொன்னுத்துரை ஆகியோரின் நாடகங்களையும் தனது நாடக எழுத்துருக்களையும் பல்வேறு களங்களில் மேடையேற்றிய முல்லைமணி அவர்கள் ஆங்கிலத்திலும் முல்லைத்தீவு பற்றியும் பண்டாரவன்னியன் பற்றியும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

முல்லைமணி அவர்களால் எழுதப்பட்ட பல்வேறு சமயக்கட்டுரைகள், விமர்சனக்கட்டுரைகள் தொகுக்கப்பட வேண்டி உள்ளன. குமரன் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட 'வன்னியின் கதை' பலராலும் பாராட்டுப் பெற்ற ஒன்று.

கலைஞர்திலகம், தமிழ்மணி, கலாபூஷணம், இலக்கியச்செல்வர் எனும் விருதுகளையும், வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் விருதையும் பெற்ற முல்லைமணி அவர்களின் கலை இலக்கிய சமூககல்விப்பணியை மெச்சி 2004 இல் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது. எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமது வாழ்வை மண்ணோடு பிணைத்து மற்றையவர்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக வாழ்ந்து வரும் கலாநிதி முல்லைமணி வே.சுப்பிரமணியம் அவர்களை நாமும் வாழ்த்துவோமாக.




நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம்

# இலக்கியக் கொள்கைகள்

- ந.பார்த்திபன் -

இலக்கியப் பொருள், வடிவம், அலங்காரம், மொழி, நடை, நம்பகத்தன்மை, ஏற்புடைமை முதலிய பல்வேறு அச்சங்கள் காலத்துக்குக் காலம் வெவ்வேறு வகையிலும் அளவிலும் முதன்மையும முக்கியத்துவமும் பெறுதல் வெறும் தற்செயலான நிகழ்வன்று ஒவ்வொரு காலப்பகுதியிலும் நடப்பில் இருக்கின்ற பொருளாதார, அரசியல், சமுதாய அமைப்புகளின் பிரதிபலிப்பாகத் தோன்றும் தத்துவக் கோட்பாடுகளுக்கு ஏற்பவே இலக்கியம் பற்றிய சிந்தனைகளும் அமைகின்றன. நவீன கவிதையின் பிதாமகர் என்று சிறப்பிக்கப்படுகின்ற மகாகவி பாரதியார்

"காலத்திற் கேற்ற வகைகள் - அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் - எந்த
நாளும் நிலைத்திடும் நூலான்றுமில்லை."

என்று குறிப்பிட்டுள்ளார். பாரதிக்குப் பின்னர் நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த முக்கியமான கவிஞர்களுள் ஒருவர் எனச் சிறப்பிக்கப்படும் மஹாகவி எனும் புனைபெயரைத் தனக்குச் சூட்டிக்கொண்ட உருத்திரமூர்த்தி

இன்றைய காலத் திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத் தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத் திழுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுகள்

என்பவற்றையே அதிகம் குறிப்பிடுகிறார். இலக்கியம் காலத்தின் கண்ணாடி, இலக்கியத்தைப் படைப்போன், பயன்படுத்துவோன் ஆகிய இரு சாராருக்கும் படைக்கும் செயற்பாங்கு, படைக்கப்பட்ட பொருள் என்பன குறித்துப் பொதுவாக விளங்கும் கருத்துக் கூறுகளே இலக்கியக் கொள்கையாகும். இக்கருத்து கூறுகள் பற்றிய விளக்கம் இரு சாராருக்கும் இருக்கும் என்பதற்கில்லை. ஒரு சாரரின் ஏற்புடமை அதிகம் வேறுபடுமாயின் இலக்கியக் கொள்கையில் மாற்றம் ஏற்படுகிறது. எனினும் பொதுவாகக் கூறுமிடத்து இரு சாராருக்கும் பொதுவாக அமையும் இலக்கியக் கொள்கையே குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் குறிப்பிட்ட வகை இலக்கியம் குறிப்பிட்ட தன்மைகளுடன் தோன்றுவதற்கு ஏதுவாயுள்ளது.

இலக்கியத்தின் தோற்றம், இயல்பு, பண்பு, பயன் ஆகியன பற்றிக் கருத்து விளக்க வடிவத்தில் அமைந்ததே இலக்கியக் கொள்கை, இலக்கியம் காலம், இடம் எனும் தளங்களையும், வாசகர்களின், அறிஞர்களின், ஏற்பு முறைகள் முதலியவற்றையும் எதிர்கொண்டு வாழ்கின்ற திறன் பெற்றது. இலக்கியத்தைப் படைப்போரும் இலக்கியக்கொள்கைகள் தொடர்பான விளக்கத்தை பெற்றிருந்தல் அவசியமாகும். இந்நிலையில் இலக்கியத் கொள்கைகளான அவயவிக்கொள்கை, அறவியற் கொள்கை, உணர்ச்சிக் கொள்ளை, அழகியல் கொள்கை, சமுதாயக் கொள்கை ஆகிய ஐந்தையும் வேறுபடுத்திப் பார்க்கும் ஆற்றலை நாம் பெற வேண்டும்.

அவயவிக் கொள்கை

பொருள் - வடிவம் என்ற பாகுபாடு இல்லாமல் இரண்டும் கூறுகளாக, உறுப்புக்களாக இசைவுபட்டே இலக்கியம் பிறக்கிறது என்பது இக்கொள்கை இதன் சிறப்பியல்பு என்னவெனில் பாடுவோர், கேட்போர், பொருள் - வடிவம் அறிவு, உணர்ச்சி, அழகு, பயன்பாடு, இலட்சியம், நடைமுறை, உண்மை, கற்பனை முதலியவற்றிடையே முரண்பாடு இல்லாதிருத்தல்.

சங்க காலக் கவிதைகள் இக்கொள்கையின் அடிப்படையிலேயே எழுந்தன. வாய்மொழி இலக்கியமாகத் தோன்றி வழங்கிய அச்செய்யுள்களைப் புலவர்கள் பயிற்சியினால் யாத்தனர்.

ஏனைய இலக்கியக் கொள்கைகள் ஏதாவது ஒரு விதத்தில் இவ்விருவகையில் (பொருள் - வடிவம்) ஒவ்வொன்றை முதன்மைப் படுத்துவன. அது சமுதாயத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளின் பிரதி பலிப்பாகும். இக்கொள்கையின் உயிர் ஒருமையாகும் அது எமக்குப் பல படிப்பினைகளைத் தருகின்றது.

இன்றும் உருவமா உள்ளடக்கமா என்ற சர்ச்சையில் பலரும் ஈடுபடும் போது அவை இரண்டும் வேறல்ல என்ற கருத்தை அவயவிக் கொள்கை தருகின்றது.

நாட்டார் பாடல்களில் இவ் வேறுபாட்டைப் பிரித்துக் பார்க்க முடியாதிருக்கும். பிரித்துப் பார்ப்பது நியாயமில்லை என்பது இக்கொள்கையின் வாதமாகும்.

அறவியற் கொள்கை

அறம், ஒழுக்கம் பற்றி அக்கறை கொண்டுள்ளது இக்கொள்கை. அறத்தையே மனிதரது வாழ்க்கை இலட்சியமாகக் கூறுவதால் இது நோக்குக் கொள்கையின் மற்றொரு வடிவமாகவும் அமைந்திருக்கிறது. இக் கொள்கையின் பொருள் (போதனை) முதன்மை பெறுகிறது. இப்போதனை தர்க்க ரீதியான விளைவாக இலக்கியத்தின் தோற்றம், இயல்பு, பண்பு பயன் என்பவற்றிலும் மாற்றங்களை உண்டாக்குகின்றது.

இலக்கியத்தின் நோக்கமாக போதனை அமைய, நிரம்பிய கல்வி அறிவும் புலமையும் ஒழுக்க சீலமும் உடையவர்களே இலக்கியத்தை ஆக்கத் தகுதியுடையவர்கள் என வலியுறுத்துகிறது.

பொருளையே சிறப்பாகக் கொள்வதால் இன்ன இன்ன விஷயங்கள் தான் இலக்கியத்தில இடம் பெறத் தக்கவை என்ற கிளைத்தேற்றமும் உருவாகக் காரணமாகின்றது.

மகிழ்ச்சியை இலக்கிய உலகத்திலிருந்து அகற்றி, துன்பமே இயற்கை என்னும் நம்பிக்கையை வளர்த்து அழகியலை மறுத்து சமுதாய அக்கறையை வலியுறுத்துகிறது.

சங்க மருவிய காலத்தில் முக்கியத்துவம் பெற்று பல்லவர் காலத்தில் செல்வாக்கை இழக்கின்றது. இருப்பினும் இன்று வரை இக்கொள்கையின் இறுக்கப் பிடிப்பு இருந்து வருகின்றது அவயவிக் கொள்கையின் மறுதலை இது எனலாம்.

உணர்ச்சிக் கொள்கை / வியஞ்சகக் கொள்கை

பொருளிலும் பார்க்க பொருள் பற்றிய உணர்ச்சியே முக்கியம் என்பதை வலியுறுத்தும் கொள்கை இது. உணர்ச்சி தான் முக்கியம். படித்தவர்கள் மட்டுமல்ல யாரும் ஆக்கலாம் என்று வலியுறுத்துகிறது. அறவியற் கொள்கைக்கு எதிர் விளைவாகத் தோன்றியது எனவும் கூறலாம்.

பாடுபவனுக்கும் பாட்டைக் கேட்போருக்கும் உண்டாகும் மனக்கிளர்ச்சி, மெய்ப்பாடு ஆகியவற்றை இது சான்றாகக் கொள்கிறது கவிஞருக்கு ஏற்படுகின்ற உணர்ச்சி அதே வேகத்துடன் பிறர்க்குப் புலப்பட வேண்டுமென இக்கொள்கை வலியுறுத்துகிறது.

கவிஞன் தான் பெறும் உணர்ச்சி அனுபவத்தை வாசகனும் பெறச் செய்ய இது உதவுகின்றது. பயிற்சியினால் படைக்கும் திறனாளன் அல்ல அவன். அவனது முயற்சி இடம் பெற்ற போதிலும் அவற்றையும் மீறி அது (உணர்ச்சி) இடம் பெறுகின்றது.

இன்று வரை அறிவு - உணர்ச்சி என்ற இருகோடி எதிரெதிர் நிலை இலக்கியத்தில் ஏற்பட்டுள்ளது. இலக்கியத்தின் முதலும் முடிவும் உணர்ச்சியும்

வெளிப்பாடே என்று வலியுறுத்தும் இக் கொள்கை செல்வாக்குப் பெற்றதன் பின்னரே இலக்கியத்தை ஆற்றல் இலக்கியம், அறிவு இலக்கியம் என்ற இரு கூறுபடுத்தும் தேவையும் வழக்கமும் பிறந்தது. பக்தி இலக்கியத்தின் பின் பாரதி காலத்திலே மீண்டும் எழுச்சி பெறுகிறது.

மானிடத்தில் காணப்படும் அறிவு - உணர்ச்சி என்ற இரண்டினுள்ளும் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே கவிதை பிறக்கின்றது. உணர்ச்சி அறிவைப் போல ஆராய்ச்சிக்கு உட்படுவதில்லை. கவிதையின் உண்மையான இயல்பை உணர வேண்டுமாயின் அதனை அனுபவித்துக் காண வேண்டும். இன்று மரபா, புதுசா, நவீனமா, ஹைக்கூவா என வாதப் பிரதிவாதங்கள் நிகழும் போதெல்லாம் உணர்ச்சி உள்ளதா எனப் பார்க்க வேண்டுமெனக் கூறுவதைப் பார்க்கிறோம். உணர்ச்சிக் கொள்கையின் கருத்து இது.

அழகியற் கொள்கை

முழுமையான இலக்கியக் கொள்கை என்ற அளவில் மிகச் சமீபகாலமாகவே தமிழில் இடம் பெற்றது இக்கொள்கை என்பர். அழகு என்பதுகாண்டலும் கற்பனை அனுபவமுமே என்பதே அழகியல் கொள்கை.

"கலை கலைக்காகவே" அழகியல் கொள்கையின் முறையான அம்சமிது. அழகு என்பது அனுபவம், அனுபவிக்கப்படும் பொருள் அன்று, அது காணப்படும் பொருளில் இல்லை. காண்பவர் தம் கருத்தில் இருக்கிறது. பொருளிலேயே அது இருக்கும். காணக் கூடிய வல்லமை பெற்றோருக்கே அது தோன்றும். அழகு என்பது பாவனை வளத்தால் பெறும் அனுபவம்.

நவீன உலகில் மிகுந்த செல்வாக்குடையது. அதனாலேயே காரசாரமான சர்ச்சைக்கும் உள்ளாக்கப்பட்டது. இக்கொள்கை உருவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது. ஒழுங்கான தன்மை நோக்கமே அழகுக் காட்சியின் சிறப்பியல்பு.

அறவியற் கொள்ளை, உணர்ச்சிக் கொள்கை என்பனவற்றில் இருந்து அழகியல் கொள்கை வேறுபடுகின்றது இருப்பினும் உணர்ச்சிக் கொள்கையின் அகத் தூண்டுதல், வடிவமற்றல், ஒழுங்கற்றல், தனி ஒருவரை நோக்கல் என்பன அழகியலில் தூய்மை, ஒழுங்கு, இசைவு, இன்பம் என்பனவற்றால் வேறுபட்டு நிற்கின்றது.

சமுதாயக் கொள்கை

அறிவியல், உணர்ச்சியூட்டும் பொருள், அழகுக் காட்சி என்றெல்லாம் மனித அனுபவத்தைக் கூறுபடுத்தாமல், மனிதனுக்குரிய எதையும் புறம்பானதாய்க் கருதாது, மாநிலம் பயனுற வாழ்வதற்கு ஏற்ற இலக்கியத்தை மெய்மை பிறழாத வகையில் படைப்பதே இக் கொள்கையிற் பிரதான இலட்சியம். ஏனைய கொள்கைகள் ஏதாவதொன்றை முதன்மைப் படுத்தின. அறிவு, உணர்ச்சி, அறவியல், வாழ்வியல் என்பன ஒன்றுக்கொன்று முரணாகவும் ஒன்றையொன்று விலக்கி வைப்பனவாயும் இருந்து மனித வாழ்வையும் சமுதாயப் பார்வையையும் கூறுபடுத்தின. சமுதாயம் முழுக்க கெட்ட பொருளாய் இலக்கியத்தில் இடம் பெற்ற நிலையை நிவர்த்தி செய்ய இக்கொள்கை தோற்றும் பெற்றது.

அறவியல், மெய்யியல், உணர்ச்சி, அறிவு, அழகியல் யாவும் மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி வளம்படுத்துகின்றன. இவை சமுதாய நலன் கருதி, ஈடேற்றம் கருதி இருக்க வேண்டும் என்பதே சமுதாயக் கொள்கை.

மேற்கூறிய கொள்கைகளின் அடிப்படையில் இலக்கியம் படைக்கப்படுகிறது. படைப்போரும் படிப்போரும் இக்கொள்கைகளைப் பற்றியும் அவற்றின் நிலைப்பாடுகள் பற்றியும் தெளிவு பெற வேண்டும். பிற்காலத்தில முற்போக்கு, பிற்போக்கு, நற்போக்கு என முகாமிட்டு மோதி நின்ற நிலைக்கு இத்தெளிவின்மை ஒரு காரணம் எனலாம்.

இன்னும் "கலை கலைக்காக" "கலை மக்களுக்காக" என்ற கருத்து மோதல் எழுந்த வண்ணமே இருக்கிறது. படைப்போரும் படிப்போனும் தெளிவு பெற்றால் இவ்வாறான மோதல்கள் ஏற்படாது எனக் கூறலாம்.

உசாத்துணை
1. இலக்கியக் கொள்கை (மொ. பெ) குளோறியா சுந்தரமதி
2. கவிதை நயம் க.கைலாசபதி, இ.முருகையன்
3. இலக்கியமும் கருத்துநிலையும் கா.சிவத்தம்பி
4. திறனாய்வுக் கலை, தி.சு.நடராசன்

## மாருதம் 14 வெளியீடு



**யாழ். பல். கழக வவுனியா வளாக முதல்வர் திரு.க.அருள்வேல், ஸ்தபதி சு.சண்முகவடிவேல், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், கலாநிதி.அகளங்கன்**



**கலந்து கொண்டோர்**

## சிறுகதை

# சந்தனமும் சாக்கடையும்

- மௌனிகா -

நிலாவும் ஜகனும் நல்ல நண்பர்கள், ஆரம்பப் பள்ளியிலிருந்து ஒன்றாகக் கற்றவர்கள். குடும்ப கஸ்ரம், இரண்டு சகோதரிகளை கரையேற்ற வேண்டிய நிலை. மாதாமாதம் வீட்டு வாடகை கட்ட தந்தை படும் அலங்கோலம் தன்னுடையதும் தங்கையுடையதுமான படிப்புச் செலவு என எல்லாவற்றையும் பார்த்து பார்த்து வளர்ந்த ஜகன் க.பொ.த சாதாரண தரத்தோடு கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு தங்கள் பரம்பரைத் தொழிலான தச்சுத் தொழிலில் தந்தைக்கு உதவியாய் இருக்க எண்ணினான்.

வயோதிபக்களை, உடல் நடுக்கம் என்பவற்றால் சரியாக வேலை செய்ய முடியாமல் தினம் தினம் கந்தையா அவதிப்பட்டாலும் தனது மகனின் படிப்பு இடைநிறுத்தப்படுவதை எண்ணி மனதார வருந்தினார்.

ஒருவாறு தந்தையைச் சமாதானப்படுத்திய ஜகன் தொழிலில் முழுமூச்சாய் இறங்கினான்.

ஜகனின் எதிர்பாராத முடிவு, நிலாவிற்கு பேரதிர்ச்சியாய் இருந்தது. "ஏன் ஜகன் இப்படிச் செய்தீர்? எவ்வளவு பேர் படிப்பு வராம கஸ்ரப்படுறாங்கள். நீர் கையில் இருந்த வெண்ணெயை உதறித் தள்ளிற்று வந்திட்டீர். இதுக்காக ஒரு நாள் வருத்தப்படுவீர ஜகன்."

என தன் மன ஆதங்கத்தை கொட்டித் தீர்த்தாள் நிலா. நிலா காரணமில்லாமல் கலங்கவில்லை. ஜகன் கணக்கில்புலி கடுமையாகப் படிக்கிறதில்லையென்றாலும் எல்லாப் பாடத்திலும் உயர் புள்ளியைத் தட்டிச் செல்பவன்.

நிலா தனக்குத் தெரியாத கணக்குகளை ஜகனிடம் கேட்டுத் தெளிவதுண்டு. ஜகனைப் பார்த்து எழுதி, முதல் மார்க் வாங்கிய அதிபுத்திசாலிகளும் வகுப்பில் இருக்கத்தான் செய்தார்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகியது. நண்பர்கள் எவ்வளவு வற்புறுத்தியும் உயர்தரம் கற்க ஜகன் சம்மதிக்கவில்லை. நிலா கெஞ்சிக் கூத்தாடி, களைத்து "ஏதோ உன் இஸ்ரம் என விட்டுவிட்டாள்.

உயர்தரத்தில் கலைத்துறையை தெரிவு செய்த நிலா தன் தந்தையின் ஆசைப்படி, நுண்கலைகளில் ஒன்றான சங்கீதத்தை கற்றுக் தேறினாள். வேகமாகச் சுழலும் காலச்சக்கரத்தில் நிலாமட்டும் நின்று விடமுடியுமா என்ன? அடுத்த நகர்வாய் பல்கலைக்கழகப் பிரவேசம். பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதும் நிலா ஜகனை மறந்து விடவில்லை. அடிக்கடி அழைப்புமணி ஒலிக்கும். இங்கிருந்து நிலா, அங்கிருந்து ஜகன் இது எல்லோருக்கும் தெரிந்த புனிதமான நட்பு. இவர்கள் உரையாடல்கள் கூட மிக இங்கிதமாகவே இருக்கும். "சக தோழிகளே, ஏய் நிலா ஜகனுக்கு நாங்கள் நண்பிகளாக இருந்திருக்கக் கூடாதா?" என மனம் அங்கலாய்க்கிறது எனச் சொல்லியிருக்கிறார்கள். இது போல ஒரு நாள் அங்கிருந்து ஜகன் போன் எடுக்க, சகபாடிகள் நிலாவிடம் விசப்பரீட்சை செய்து பார்த்தார்கள்.

"நிலா, நாங்கள் யதார்த்தமாத்தான் கேக்கிறம் - உனக்கும் ஜகனுக்கும் இடையில் நட்பைத்தவிர வேறெதுமில்லையா?"

"இல்லை... இல்லை... நாங்கள் நல்ல நண்பர்கள். இன்று மட்டுமல்ல ஆயுளுக்கும், ஆயுள்தீர்ந்த பிறகும் அண்ணன் தம்பியின்றி தனிப்பிறந்த எனக்கு நல்ல சகோதரனாய்க் கிடைத்தவனே ஜகன்".

நிலாவின் பதிலால் தலைகுனிந்த நண்பிகள் "ஐயாம் சொறிடி... ஐயாம் சொறிடி" என மாறிமாறி மன்னிப்புக் கேட்டார்கள்.

"சரி சரி கதையை விடுங்கோ. காயு நீ குளிக்கேலையா? நானும் குளிக்கவேணும். லதா கதை கண்ட இடம் கைலாயம் என இருப்பாள்" என கிண்டலடித்தவாறு குளியலறைக்குச் சென்ற நிலா எதிர்ப்பாராமல் வாளிதடக்கி, கீழே விழுந்தாள்.

"அம்மா... அம்மா... என்னடி வலிக்குதா? "இல்லையில்லை நீ போ நான் வாறன்," என சுதாரித்துக் கொண்டாலும் நிலாவால் கால்நோவைத் தாங்க முடியவில்லை. சிறிது நேரத்தில் கால்ப்பாதம் பணிஸ் போல் உப்பத் தொடங்கியது. சினேகிதிகளின் கைத்தாங்கலுடன் அறைக்குள் நுழைந்த நிலா கட்டிலில் இருந்த கைபேசியை கையிலெடுத்தாள். தவறிய அழைப்புக்கள் 15 என இருந்தது. நிலாவிற்கு குழப்பமாக இருந்தது, யாரென அறிய நம்பரை அழுத்தியபோது அனைத்துமே ஒரே நம்பரில் இருந்து, அழைத்த தவறிய அழைப்புக்கள். புதிய நம்பர் ஆகையால் திருப்பி அழைக்க விரும்பாமல் காலை மெல்ல உயர்த்தி கட்டிலில் சாய்ந்தாள்.

"விடிஞ்சா, ஜகன்ற அக்காக்கு கல்யாணம். பாவம் ஜகன். காலில் சக்கரம் பூட்டிக் கொண்டு தான் நிக்கும். என்னால தான் போகேலாது போல இருக்கு. நினைவுகளோடு வலியும் தாக்க நிலா நித்திரையானாள்.

ஊர் மெச்ச கல்யாணம் கோலாகலமாய் நடந்தேறியது. கந்தையாவும் பொன்னம்மாவும் மகிழ்ச்சியில் குதித்தார்கள் "தம்பி ஜகன், இஞ்ச வா அக்காளின்ற கல்யாணம் தான் நல்லா முடிஞ்சுதே. பிறகேன் அங்கேயும் இங்கேயுமா அலையிறாய். இதில இரு.பிறகு பார்க்கலாம் மிச்ச வேலைய, இரண்டு நாளைக்கு பட்டடைப் பக்கமும் போக வேண்டாம். விடிய ஒருக்கா நான் எட்டிப்பாக்கிறன்."

"என்னப்பா நீங்கள்! எனக்கென்ன வயசு போச்சே. ஏதோ நீங்கள் இளங்காளை மாதிரியும் நான் வயசான ஆள் போலவும் எல்லோ கதைக்கிறிங்கள். எனக்கொரு களைப்பும் இல்ல. சொல்லப்போனா இன்றைய நாள் என் வாழ்வில் மறக்க முடியாதது. ஏதோ சாதித்த திருப்தியில் மனசெல்லாம் பட்டாம் பூச்சியாய் சிறக்கடிக்கிறது. இன்றைக்குத் தான் நிம்மதியாத் தூங்கப் போறன்". கண்ணசரும் போது நிலா அழைப்பில்...

"ஜகன்! என்னாலதான் கல்யாணத்திற்கு வரேலாமல்ப் போட்டுது கோபிக்காத. வாறகிழமை ஊருக்கு வாறன். முதல் வேலையா உங்கட வீட்ட வந்துதான் மிச்ச வேலையெல்லாம். அக்காக்கு நிலாவின் திருமண வாழ்த்துக்கள் என்று மறக்காம சொல்லிரு"

"அது சரி என்ன தீடீரெண்டு ஊருக்கு. இப்ப லீவும் இல்லையே..." ஜகன் கேள்விகளால் மனதைத் துருவினான்

"தெரியேல்ல ஜகன் வந்து சொல்லிறன்" வீட்ட வந்த நிலாவிற்கு ஆகாயம் வெடித்துச் சிதறி உச்சந்தலையை பிளப்பது போல் இருந்தது.

"நிலா! நீ படிச்சதெல்லாம் காணும். இந்தத் தையோடு படிப்பை விட்டிடு. பங்குனிக்கு உனக்கு கல்யாணத்தை முடிக்கலாம் எண்டு இருக்கிறன்."

"என்னப்பா சொல்லுறீங்கள்" "என்னத்த சொல்ல. நான் சொன்னாச் சொன்னது தான். புரோக்கர் வேலுவிட்ட நல்ல பெடியன்களின்ர சாதகம் இருக்காம் அதில ஒண்ட பாத்து முடிப்பம்".

"என்னப்பா.... கல்யாணம் எண்டா சந்தையில கீரை வாங்கிறதெண்டு நினைச்சிங்களே? அது ஆயுள் முழுக்க தொடர்கிற பந்தம் இல்லையா? குலம், கோத்திரம், நல்ல குணம் எண்டு நாலும் பாக்க வேண்டாமா? எல்லாத்துக்கும் மேல படிப்பை முடிக்காம எதுக்கப்பா கல்யாணம். உனக்கெண்டு ஆசாபாசம் ஏதும் இருக்கா பிள்ளையென்று ஏனப்பா கேட்கத் தோணேல்ல. கசாப்பு கடையில ஆட்டை வெட்டிற

மாதிரி உயிரோட என் கழுத்தை அறுக்க நினைக்கிறீங்கள். நான் இதுக்கு ஒரு நாளும் சம்மதிக்கமாட்டன்".

"நீ என்ன சம்மதிக்கிறது. பெட்டக் கழுதையை படிக்க வைச்சது என்ர தப்புத்தான்" தந்தையின் சுடுவார்த்தையில் உள்ளம் வெந்து போன நிலா, வானை உற்றுப்பார்த்தபடி நடு முன்றலில் உட்கார்ந்தாள். நிலா அழுவதனால் தான் அந்த நிலாவும் அழுது வடிந்து தேய்ந்து போனதோ என்னவோ!. தந்தையின் தீடீர் முடிவால் நிம்மதியிழந்த நிலா, தினந்தினம் அழுதுபுலம்பி ஓடாய்த் தேய்ந்தாள். ஆயினும் கல்யாணம் எனும் கட்டாய நிலை தொடர்ந்தது.

தைபோய் மாசிபோய் பங்குனியும் வந்தது. நிலாவின் தந்தை பேசிவைத்தபடி, நல்ல முகூர்த்தத்தில் இந்தியாவில் வைத்து கல்யாணத்தை நடத்தி முடித்தார்.

மாப்பிள்ளை வசதியானவன். அவுஸ்ரேலிய நாட்டிலிருந்து இரண்டு மாதங்கள் முன்னே இந்தியாவுக்கு வந்து புடவை பிஸ்னஸ்லில் ஈடுபட்டுள்ளான். வியாபார நோக்கில் அடிக்கடி இந்தியா, மலேசியா என்று சென்று வந்தாலும் கல்யாணத்தின் பின் இலங்கையில் கரவெட்டிப் பகுதியிலுள்ள தனது மனைவி வீட்டிலேயே அதிகம் தங்கினான்.

ஆரம்பமே கசப்பாய் போனதாலோ என்னவோ, நிலாவிற்கும் கணவனுக்கும் இடையில் முரண்பாடுகள் நாளுக்கு நாள் வலுக்கத் தொடங்கின. அவனது பழக்க வழக்கங்கள் சிலதை நிலாவால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

அடியுதை ஆக்கினைகளே வாழ்க்கை யென்றாக அவசர கல்யாணம் ஆறுமாத காலத்துள் விவாகரத்து வேண்டி, நீதிமன்றில் நின்றது. யாரோ விசமி சொன்ன நிலாவைப் பற்றிய அவதூறான வார்த்தைகளே இந்த அவசரக் கல்யாணம் என்பதை மகளின் விவாகரத்து வேகத்தில் தந்தை அழுது புலம்பினார்

"அழுதழுது தந்தையார் கூறிய வார்த்தைகள் நிலாவிற்கு இந்த உலகையே வெறுக்க வைத்தது. "ஜகனும் நானுமா? சே... என்ன உலகம் இது." தவறிய அழைப்புக்களால் நிலாவைக் குழப்பிய அதே விசமிதான் இந்த பொருந்தாத் திருமணத்தின் சூத்திரதாரி என்பது அவளுக்கு அப்போதே புரிந்தது. சாக்கடைப் புழுக்களுக்கு சந்தனத்தின் வாசைன எப்படித் தெரியும்

குரங்குகள் கையில் பூமாலையாய் சில விசமிகள் கையில் கைபேசி, கணனி, முகப்புத்தக வசதி இலாவகமாய் கிடைப்பதனால் கிழித் தெறியப்படும் சமூகத்தை வெறுத்தவளாய், கண்களிரண்டில் கனல் தெறிக்க, சாக்கடைப் பூதங்களை விழுங்கி ஏப்பம் விடும் பராசக்தியாய், புதிய யுக்தியுடன் பல்கலைக்கழகம் நோக்கி நிலா புறப்பட்டாள்.

சில காகங்கள் கரைந்தன. கூட இருந்த நரிகளும் ஊளையிட்டன. ஆயினும் நிலா கலங்கவில்லை. கூரிய வாளாய் அவள் கையில் இருந்த பேனா முனை பேசத் தொடங்கியது. சமூகத்தின் மீது படிந்துள்ள கறைகள், கக்கும் தீயால் நாளுக்கு நாள் எரிந்து சாம்பலாயின.

இன்றும் ஜகனும் நிலாவும் அதே நட்புடன்.



வட்டத்தின் கலை இலக்கியச் செல்வர் விருது பெறும்

## செல்வி மேரி அன்ரோனியா ஸ்ரனிஸ்லாஸ்

**(முன்னாள் பிரதியதிபர், இறம்பைக்குளம் மகளிர் ம.வி)**

வந்தாரை வாழவைக்கும் வன்னி மாநகரிலே, மையப்புள்ளியாகக் கருதப்படும் வவுனியா நகரத்தில் இருந்து கிழக்கே செல்லும் பெருந்தெருவில் சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில், வவுனியாவின் பிரதான குளத்தையண்டி அமைந்திருக்கும் இறம்பைக்குளம் என்ற கிராமத்தில், திருவாளர் ஸ்ரனிஸ்லாஸ் அவர்களுக்கும் ஆகத்தம்மாவுக்கும் 1935 ஆம் ஆண்டு மார்கழி 31 ஆம் திகதி மூத்த பிள்ளையாகப் பிறந்த இவருக்கு மேரி அன்ரோனியா என பெயரிட்டனர்.

இலைமறை காயென ஒரு சிலரின் கவனத்தில் புலப்படாமல் இருந்து, வாழ்வில் ஆணுக்குப் பின்பலமாகவும், பக்கபலமாகவும் இருந்து, உத்தமி என் பெயரினை மட்டும் சுமந்து, வாழ்வின் எச்சங்களை குறிப்பிடாமலேயே விடைபெற்றுவிடும் எனது சமுதாயத்தின் பெண்களைப் போல் அல்லாது, புலமையிலும் திறமையிலும், ஆளுமையிலும் ஆணுக்குச் சரிநிகர் சமமாகவே நின்று, இறம்பைக்குளம் பாடசாலையின் மாணவச் செல்வங்களுக்குக் கல்வி பெற்றுக் கொடுத்து அவர்களை சமுதாயத்தில் உயர்த்திவிட்ட தீரப் பெண்மணி அவர்.

பெண்பிள்ளைகளுக்கு ஆண் வேடத்தைப் போட்டு அவர்களை வீர வசனம் பேசச் செய்து, வில்லின் நாணை ஏற்ற வைத்து, அம்பைக் குறிபார்த்து அடிக்கவைத்து, அனைத்துத் தமிழ் நெஞ்சங்களிலும், பழம்பெரும் இலக்கியங்களை உணர வைத்து, பலரின் கருத்தையும் தன்பாலே ஈர்த்துக் கொண்ட அருமைப் பெண்மணியை அத்தனை சீக்கிரத்தில் யாருமே மறந்துவிடமாட்டார்கள். அன்னையாய், ஆசானாய், அன்புச் சகோதரியாய், அனைவரையும் நேசித்து ஆட்கொள்ளும் அவரைப் பார்த்தவுடனும் இரு கரங்களையும் கூப்பிவிடும் எண்ணம் யாருக்கும் இயல்பாகவே எழுந்துவிடும்.

தனது இரு இளைய சகோதரிகளையும், மூன்று சகோதரர்களையும் அன்பினால் ஆட்கொண்டு வழிப்படுத்தி, அவர்களுக்கு அருமையான சகோதரியாகவும் நண்பியாகவும் மட்டுமல்லாமல் ஆசானாகவும் விளங்கினார். தன் குடும்பத்தினரதும் சமூகத்தினரதும் எழுச்சிக்காக, உயர்ச்சிக்காக, தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர் அவர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை யாழ்ப்பாணம் இளவாலையிலுள்ள, திருக்குடும்பக் கன்னியர்மடப் பாடசாலையிலும் தொடர்ந்தார். கல்விகற்றுக் கொணடிருந்த காலத்திலேயே, ஆண்டவரனின் நாமத்தால் அனைவரையும் ஆட்கொள்ளும் அற்புத சேவையை வழங்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டார். அதற்கு சாதகமான ஒரு தொழிலாக அவர் ஆசிரியத் தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது எத்தனை பொருத்தமானது என்பதை அவருடைய பிற்காலம் எமக்குப் புலப்படுத்தியது. 1954 இல் கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து, பயிற்றப்பட்ட ஆசிரியையாக தொழிற்றுறையிற் காலடி எடுத்துவைத்தவர், 1988 இல் பட்டப்படிப்பையும் பூர்த்தி செய்து மாணவருக்கு வழிகாட்டுவதில் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

ஆசிரிய சேவையில் அம்மையாரின் பணி, நாட்டின் பல பாகங்களையும் தொட்டுச் சென்றது. அனுராதபுரத்திலுள்ள திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையிலும், வவுனியாவின் இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்திலும், கிளிநொச்சியிலுள்ள கிறிஸ்தவ பாடசாலையிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தேற்றாத்தீவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலுமாக முப்பத்து மூன்று வருடங்களுக்கும் மேலாக தனது ஆசிரியப் பணியை ஆற்றியிருந்த அம்மையார் 1988 இலிருந்து 1992 வரை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் உப அதிபராகவும் கடமையாற்றி அந்தப் பாடசாலையின் அபிவிருத்திகளை அருட்சகோதரிகளுடன் சேர்ந்து முன்னெடுத்தவர் என்பதை இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

தமிழன்னையின் ஒரு அவதாரமாகவே இருந்த அன்ரோனியா ரீச்சர் இலக்கண இலக்கியத்தில் பாண்டித்தியம் பெற்ற ஒருவராக விளங்கியிருந்தார். இலக்கியத்தைக் கற்பிப்பதற்கு முன்பாக சந்தர்ப்பத்தைக் கதைபோலவே அவர் சொல்லியும் செய்தும் காட்டுவது, திரைப்படம் ஒன்றைப் பார்த்துவிட்ட ஒரு சந்தோசத்தை ஏற்படுத்திவிடும். செய்யுளைப் படிப்பதற்கு முன்பாக 'கொண்டு கூட்டுதல்' என்ற விடயத்தைப் புலப்படுத்தி, செய்யுள்களில் ஓரிரண்டை அவர் பொருள் சொல்லி முடித்ததன் பின்பாக, மாணவர்களாகவே சொல்லும் ஆற்றலை அவர் தன்னுடைய கற்பித்தலில் உணர்த்துவதை, நான் மட்டுமல்ல, அவருடைய மாணவிகள் யாவருமே சொல்லிவிடுவார்கள். பழம்பெரும் இலக்கியங்களில் அவருக்குள்ள பரிச்சயமும் ஆர்வமும் நயப்பும் அவருக்கு வழங்கப்பட்ட கொடைகளாக மட்டுமன்றி மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகவும் விளங்கியதை யாரும் மறுத்துவிடமுடியாது.

அவர்களின் இலக்கண வகுப்புகள் எத்தனை சுவாரசியமாக இருக்கும் என்பதை வார்த்தைகளாற் சொல்லிவிடமுடியாது. இலக்கணத்தை விளக்க இலக்கியங்களையும், இலக்கியங்களில் நீதிக் கவிகளையும் சொல்லுவது மட்டுமன்றி, ஒருவரை விழிப்பதற்கும், எச்சரிப்பதற்கும், ஏசுவதற்கும் கூட அம்மணி பொருத்தமான பழமொழிகளையும் செய்யுள்களையும் பாவித்திருந்தது எனக்கு மறக்கமுடியாத நிகழ்வாகவே உள்ளது.

வகுப்புக் கற்பித்தலுடன் மட்டுமே நின்றுவிடாமல், இயல், இசை, நாடகம் போன்ற விடயங்களில் மாணவர்களின் சிந்தனைகளையும் ஆக்கத்திறனையும் ஊக்கப்படுத்தி அவர்களுக்கு அரிய சந்தர்ப்பத்தினை வழங்குபவராக அவர் மிளிர்ந்தார். ஏணியாகத் தோணியாக, வழிகாட்டி மரமாக, அனைவரையும் ஆக்கிவிட்டு ஏற்றிவிட்டு, அவர்களின் வெற்றியைத் தமது வெற்றியைப் பொல கொண்டாடிக் கொள்வது அவருக்கு இயல்பாக அமைந்துவிட்ட ஒரு கொடை போலும். ஒரு அன்னைக்கே உரித்தான பூரிப்புடன் தன் பெண் குழந்தைகளின் ஆளுமை விருத்தியை நோக்கி அகமகிழ்ந்து நின்று அவதாரமாகவே மிளிர்ந்தவர் அவர். அன்ரோனியா ஆசிரியை அவர்கள் தானும் ஒரு எழுத்தாளராக, நாடகாசிரியராக, இயக்குநராக இருந்து படைப்புக்களை ஆக்கியது மட்டுமல்ல, அவற்றுக்கு உரித்தான அங்கீகாரத்தைப் பெற்று, மாவட்ட, மாகாண மற்றும் அகில இலங்கை ரீதியாகவும் முதலிடங்களைப் பெற்றுக் கொடுத்து அனைவரின் கவனத்தையும் பாடசாலையின் மேல் ஈர்க்க வைத்தார். துறை சார்ந்த ஆசிரியைகள் காணப்படாத அக்காலத்தில் புராண நாடகங்களை எழுதி, அதற்குப் பொருத்தமான பாடல்களை எழுதி, இசையமைத்து, ஆடையலங்காரங்களைச் செய்து, முகத்திற்குரிய ஒப்பனைகளைத் தன் கையாலேயே செய்து கொடுத்து, பின்னணிக் குரல் கொடுக்க

குரல் கொடுக்க வேண்டுவதாயின் அதனைப் பின்னாலேயே நின்று செய்து, நாடகங்களை மேடையேற்றும் அவரது ஆற்றலினை அளவிட முடியாது. 1991இல் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற வாலி வதத்தில் இடம்பெற்ற சண்டைக் காட்சியைப் போற்றாதவரே எமது பூமியில் இருக்கவில்லை. மயிர்க்கூச்செறிய அந்தக் காட்சிகளை முன்வரிசையில் இருந்து பார்வையிட்ட எமது மனங்களில் இராமரும் இலக்குவனும் நிலைத்துவிட்டதில் ஆச்சரியமில்லை.

இதனாலேயே அன்ரோனியா ரீச்சர் அவர்களின் புராண நாடகங்கள் ஒரு முக்கிய இடத்தைத் தமிழ் வரலாற்றில் தக்கவைத்துக் கொண்டன. அகில இலங்கை ரீதியில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் முதலிடம் பெற்றுக் கொண்ட அவரின் புராண நாடகங்களைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

1. ஜீவமணி - மகாபாரதத்தில் பாரதப் போர் முடிவுற்றபின் தந்தையைத் தெரிந்து கொள்ளும் அருச்சுனனின் மகன் பப்புருவாகனனின் கதை. விறுவிறுப்பான, உணர்வு பூர்வமான நாடகம்

2. வாலி வதம் - இராமாயணத்திலே, தன்னைச் சரணடைந்த சுக்கரீவனுக்கு உதவியளிப்பதற்காக மறைந்திருந்து அம்பெய்த அவதாரத்தின் தர்க்க பூர்வமான வீரதீரமான நாடகம்.

3. குரு தட்சணை - மகாபாரதத்தில் குரு துரோணாச்சாரியாரால் ஏகலைவனின் வலது கைப் பொருவிரல் பெறப்பட்டதைக் காட்டும் நாடகம்

4. கிருஷ்ணையின் ஆணை – மகாபாரதத்தில் பாண்டவர்களை மயக்கிய சூதாட்டமும், அதற்குப் பின்னதான திரௌபதை துகிலுரிதலை வெளிப்படுத்தி அவர்களின் சூளுரைகளுடன் முடிவுறும் நாடகம்

5. இரத்தத்துளி – வில்லியம் ஷேக்ஸ்பியரின் "வெனிஸ் நகரத்து வணிகன்" என்ற புகழ்பெற்ற, எவ்வுயிர்க்கும் சமமாகப் பரவும் 'தயை' என்ற விடயத்தைப் புலப்படுத்திய ஆங்கில நாடகத்தினைத் தமிழ்மொழியிற் படைத்தெடுத்த நாடகம்

அவையனைத்தும் அகில இலங்கை ரீதியில் முதற்பரிசு பெற்றிருந்ததைப் பலரும் அறிந்திருப்பர். பலராலும் போற்றப்பட்ட அவரின் ஏனைய நாடகங்கள் வருமாறு

6. மன்னனின் தலைவாங்கிய மங்கை - தீர நங்கை யூடிற்றாவின் வரலாற்றைச் சொல்லும் நாடகம் 7.

7. இரண்டு வரம் வேண்டும் - மகா பாரதத்தில், போர் தொடங்குவதற்கு முன்பாக கர்ணனின் பிறப்பை உணர்த்தி, அவனிடம் இரண்டு வரம் கேட்டுக் கொண்ட கதையைச் சொல்லும் நாடகம்

8. பெண் எனும் தீ – கற்புக்காக உயிர் மாய்த்த மரிய கொறெற்றி என்ற பெண்ணின் கதையைச் சொல்லும் நாடகம்

9. அசோக வனத்தில் சீதை - இராமாயணத்தில் அசோக வனத்தில் சீதையைக் கண்டுகொண்டதைக் காட்டும் நாடகம்

செய்வன திருந்தச் செய் என்ற குறிக்கோளைக் கொண்ட அவர், தமிழிலோ ஏனைய மொழிகளிலோ எழுத்துப் பிழை, மற்றும் இலக்கணப் பிழைகள் எழுவதை அனுமதித்துவிட மாட்டார். பேச்சுக்கள் தெளிவாகவும் விடயத்தை மட்டும் கொண்டதாகவும் அமையவேண்டும் என்பதைத் தொடர்ந்து தெளிவுபடுத்திக் கொண்டிருப்பார். தமிழறிஞர்

அகளங்கன் அவர்களின் துணைவியார் பூரணேஸ்வரி, ஆசிரிய ஆலோசகர் திருமதி த.நிறைமதி, திருமதி சுகந்தி கிஷோர், சங்கீத ஆசிரியை திருமதி சிவரதி ராஜ்குமார், தற்பொழுது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் வைத்திய கலாநிதி கலாராணி மற்றும் சட்டத்தரணி மினோ புனிதநாயகம் மற்றும் திருமதி ஷிவாணி அல்பிரட் போன்றோர் அவருடைய விருப்பத்துக்குரிய மாணவிகளிற் சிலராவார்.

நாடகங்களில் மட்டுமன்றி நடனங்களில் நவீன உத்திகளைப் பயன்படுத்தி ஆக்கம் செய்து போட்டிகளில் வெற்றிபெறச் செய்தவர். தொழிலிற் பாடப்படும் நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பிட்ட அந்தத் தொழில்களைச் செய்வோரின் வாழ்க்கை முறைகளைப் பிரதிபலிப்பதாகவும் அவர்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும் பல்வேறு வகையான நடனங்களைத் தயாரித்தளித்தவர். கொழுந்து நடனம், மீனவர் நடனம், வாள் நடனம், சலவைத்தொழிலாளி நடனம், குறத்தி நடனம், வானர நடனம், மயில் நடனம் போன்ற வித்தியாசமான சிந்தனைகளை பரதத்தில் புகுத்தி விழிக்கு விருந்தாக்கியவர். அவர் அனுராதபுரத்தில் கற்பித்த காலங்களில், பாரதப்பிரதமர் நேருவின் வருகையின்போது வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் பேரில் தனது பாடசாலையில் மயில் நடனத்தையும், அனுராதபுரம் புனித ஜோசப் பாடசாலையின் இரு மாணவர்களைத் தெரிவு செய்து வானர நடனத்தையும் வழங்கியிருந்தார். இவையிரண்டுமே தெரிவாகி மேடையேற்றப்பட்டன என்பதுதான் பெரிய விடமாக அந்தக் காலத்தில் குறிப்பிடப்பட்டது. இவை தவிரவும் வாலி, கண்ணகி வழக்குரைத்தல், தருமிக்குப் பொற்கிழியழித்தல் போன்ற நாட்டிய நாடகங்களும் அவரின் திறமைகளைப் பறை சாற்றின.

அன்ரோனியா ரீச்சர் பரத நாட்டியத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டவரல்லர். ஆவர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் இருந்தபோது அவர்களுக்கு வழங்கியிருந்த சிறிய அறிமுகத்தைக் கொண்டே அத்தனை நடன நிகழ்வுகளை வழங்கியிருந்தமை ஆச்சரியத்தை உண்டாக்குகின்றது. இவருடைய பாதையில் ஒரளவாகவாவது தெரியும்படியாக ஓடிக் கொண்டிருந்த எனது அன்னையார் திருமதி பரமேஸ்வரி சிசுபாலசுந்தரம், அன்ரோனியா ரீச்சரைப் பற்றி சிறு வயதிலிருந்தே எனக்குச் சொல்லித் தந்தமையால் எனக்கு அவரைப் பற்றிய பலதும் தெரிந்திருந்தது.

அரங்கில் தோன்றும் ஆக்கங்களாக மட்டுமன்றி, கரங்களால் புனைந்துவிடும் ஆக்கங்களைச் செய்வதிலும் கைதேர்ந்தவராக இருந்தார். துணியில் வர்ணமிடுதல், தையல் போன்றவற்றில் தனித்திறமை காட்டி வந்தார். சிப்பி, சோகி, ஊரி போன்றவற்றையும் மரப்பட்டை போன்றவற்றையும் கொண்டு ஆக்கங்களைச் செய்வதில் மாணவர்களை ஊக்குவிப்பராக இருந்தார். அவர் கற்பித்த காலங்களில் ஆண்டுக்கு ஒரு முறை அவ்வாறான கண்காட்சிகளை ஒழுங்கு செய்து பாடசாலைக்கு சிறிய வருமானத்தையும் பெற்றுக் கொடுத்தார்

கவி வடிவிலும் கட்டுரைகளாகவும் பண்டைய வரலாறுகளை எழுத்து வடிவில் சமர்ப்பித்தவர். “பங்குப் பயணத்தில் நூற்றுப்பத்து வருடங்கள்” என்ற புத்தகம் இறம்பைக்குளத்தினதும், புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் பாடசாலை ஆகியவறறின் வரலாற்றைச் சொல்கின்றது.


எழுத்துத் துறையைத் தவிர்த்தும் கைவண்ண ஆக்கத்திறன் மற்றும் கைவேலை பற்றிய அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் செய்து அனைவரையும் கவர்ந்தவர்.


அவற்றைத்தவிரவும் உடற்பயிற்சிகளைப் பயிற்றுவிப்பதிலும் பெரும் ஆற்றல் கொண்டவராக விளங்கி, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் மாணாக்கரை அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற வைத்தவர். அவரின் அனைத்து நடவடிக்கைகளிலும் ஒத்துழைத்த அவரின் அருமைத் தோழியான திருமதி புஸ்பம் அன்ரனிப்பிள்ளை அவர்கள், இன்றும் அவருக்கு மிக ஆதரவாகவும் ஒத்துழைப்புடனும் அவருடன் கூடவே வலம் வருவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

அன்ரோனியா ரீச்சர் தன்னுடைய சுயவிருப்பத்தின் பேரில், வேளையுடனேயே ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டார். அவர் ஓய்வு பெற்றது அரசாங்க நியமனத்தில் இருந்து மட்டுமே. கலை இலக்கியத்திற்கும் ஆன்மீகத்திற்கும் அவர் இந்தத் தள்ளாத வயதிலும் உழைத்துக் கொண்டிருக்கிறார் என்பதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

-மைதிலி தயாபரன்-


வவுனியா மண்ணின் கலை இலக்கிய வளர்ச்சிக்கு அரும் பாடுபட்ட செல்வி மேரி அன்ரோனியா ஸ்ரனிஸ்லாஸ் அவர்களுக்கு கலை இலக்கியச் செல்வர் என்ற பட்டத்தை வழங்குவதில் வட்டம் மகிழ்வுறுகிறது.















# கல்வி, கலை, இலக்கிய செயற்பாட்டாளரின் பதிவுகள் - ஒரு கல்வியியலாளரை முன்வைத்து...

சங்கரசெல்வி

*ஆரம்பகால செயற்பாடுகள்.*

வட மாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியுடன் 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வவுனியா நகரில் எமது வாழ்க்கை துவங்கிய காலம். ஆயினும் நவம்பர் மாத கலைவிழா ஒன்றில் மேடை ஏற வேண்டும். என குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் எழுத்தில் உருவான "வால் பேத்தைகள்" எனும் நவீன சமூக கல்விப் பிரச்சினையை மையமாக கொண்ட நாடகம் ஒன்றைப் பழகுவதற்கு வவுனியா தேசிய கல்விக் கல்லூரி மாணவர் நம்மை அணுகினர். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் சிவத்தம்பி, குழந்தை ம.சண்முகலிங்கம், மற்றும் பேராசிரியர் மௌனகுரு ஆகியோரின் வழிகாட்டலில், நாடக உலகில் தடம் பதித்திருந்த அனுபவம் கல்விக்கல்லூரி மேடையில் நம் கைவண்ணத்தை காட்ட வழிகோலியது.

"வால் பேத்தைகள்" நாடகம் மூலம் எமது கல்விமுறைமையை விமர்சனம் செய்கிறார் குழந்தை சண்முகலிங்கம். இன்றைய கல்வித்திட்டம் மாணவர்களை ஒரு ஆக்கத்திறனுள்ள சமூகமாக மாற்றாமல் வால்பேத்தைகளாக மாற்றுவது கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. கல்வியியல் கல்லூரிகள் ஊடாக ஆசிரிய மாணவர்களை உள்வாங்கி இரு வருட உள்ளகப் பயிற்சியும் ஒரு வருட வெளிக்கள நிலைப்பயிற்சியும், அதாவது பாடசாலைமட்ட படிப்பித்தல் பயிற்சியும் வழங்கி சிறந்த ஒரு ஆசிரிய சமூகத்தை கட்டி எழுப்ப தொண்ணூறுகளில் ஏற்படுத்தப்பட்டதே கல்வியியற் கல்லூரிகள்.

*கல்வியியற் கல்லூரிகள்*

மேலுமொரு சமூக அரசியல் காரணம் ஒன்றும் உண்டு. 1988 – 89 காலங்களில் இலங்கை அரசியலில் ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணி அமைப்பினர் மேற்கொண்ட வன்முறை அரசியல் இலங்கையை - இலங்கை அரசை கலவரப்படுத்திக் கொண்டிருந்தது. இதனை வன்கரம் கொண்டு அடக்கிய பிரேமதாச அரசு இளைஞர்கள் வன்முறை அரசியலுக்குள் ஈடுபடாமல் தடுக்கும் முகமாக ஒரு தொகுதி மாணவர்களை பல்கலைக்கழகம் செல்லக் கூடிய தகுதி இருந்தும் இடப்பற்றாக்குறை காரணமாக பல்கலைகழக அனுமதி மறுக்கப்பட்டவர்களை கல்வியியற் கல்லூரிகள் ஊடாக உள்வாங்கி நற்சமூகத்தை உருவாக்கும் சிற்பிகள் ஆக மாற்ற முயன்றது.

இவ்வண்ணமாக ஆசிரியர்களாக வாண்மை விருத்தி பெறுபவர்களுக்கு அவரவர் பாடங்கள் சம்பந்தமான பரந்த அறிவை ஏற்படுத்துவதுடன், இணைப்பாட விதான செயற்பாட்டுக்குள் அவர்களை ஆட்படுத்துவதும் அவசியமாகியது அந்தவகையில் விளையாட்டு மற்றும் கலை இலக்கிய ஆங்கில நடவடிக்கைகளில் பலதரப்பட்ட பயிற்சிகளை வழங்கவேண்டிய தேவையும் இருந்தது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு கல்வியியற் கல்லூரி நிர்வாகம் ஆசிரிய மாணவர்களுக்கு கட்டுறு பயில்வு காலத்தில் பல்வேறு பயிற்சிகளை வழங்க முன்வந்தமையினால் நாடகக் கலைப்பயிற்சிகளையும், கலை இலக்கியம் மற்றும் ஆங்கிலம் சார்ந்த கருத்தரங்குகள் பட்டறைகள், திசைகோட்பயிற்சிகள் என்பனவற்றையும் வழங்க ஒழுங்குகளை முறைசாராத்தன்மையில் ஏற்படுத்தியது. வெளியில் இருக்கும் கலை இலக்கிய கர்த்தாக்கள், கலைஞர்கள் அழைக்கப்பட்டார்கள்.

அப்படி ஒழுங்கமைப்பட்ட ஒன்று தான் நாடகப்பயிற்சி. அக்காலத்தில் (93ல்) அண்மையில் மணி விழாக்கண்ட திரு.க.பேர்னாட் அவர்கள் விரிவுரையாளர் என்பதோடு

விரிவுரை இணைப்பாளராகவும் கடமை ஆற்றிக் கொண்டிருந்தார். மேற்படி நாடகப்பயிற்சிக்கு எதுவித கொடுப்பனவுகளும் பெறாது ஒரு சேவையாகவே கல்வியற் கல்லூரிக்கு வந்து – நாடகங்களை மேடை ஏற்றி வந்த காலங்கள் அவை.

இயல்பாகவே கலை நாட்டம் மிகுந்திருந்த திரு.பேர்னாட் அவர்கள் எமது வேலைதிட்டங்களையும் பயிற்சிகளையும் அவதானித்து கருத்துக்கள் கூறியும், விளக்கங்கள் கேட்டும் ஒரு மறைமுக ஊக்கம் தந்து கொண்டிருந்தார். கல்வியியற்கல்லூரி பீடாதிபதியாக அன்று திகழ்ந்த திரு.அழகரத்தினம் அவர்கள் கொடுத்த வரவேற்பு பலமானது. அதன் காரணமாக தொடர்ந்து பல நாடகங்களை கல்வியியற்கல்லூரி மாணவர்களுக்கு பழக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

*தாயுமாய் நாயுமானார்*

வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்த வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியில் ஆங்கிலப் பிரிவுக்கு விரிவுரையாளராகவும் இணைப்பாளராகவும் கடமை ஆற்றி வந்த காலங்களில் மாலை வேளைகளில் இந்த நாடகங்களை பழக்குவதற்கு செல்வது வழக்கம், இதனால் பல்கலைக்கழக நடவடிக்கைகள் எவ்விதத்திலும் பாதிக்க விடவில்லை. தொடர்ந்து 1994 இல் குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிய "தாயுமாய் நாயுமானார்" நாடகத்தை பழக்கியிருந்தேன். பெண்கள் எமது சமூகத்தில் எவ்வித இருப்பைக் கொண்டிருக்கின்றனர் என்பதை ஆழமாக கருத்தியல் கொண்டு மிகவும் நகைச்சுவை கலந்த பாணியில் எழுதியிருந்தார் சண்முகலிங்கம். மாணவர்கள் மிகுந்த சுவையுடன் இதனைப் பழகி சிறப்புடன் நடித்திருந்தனர். இதன் காரணமாக வவுனியா நகரசபை மண்டபத்திலும் இந் நாடகம் மேடை யேற்றப்பட்டது. மாணவர்கள் மற்றும் சமூகத்தினர் மத்தியில் பெண்கள் நிலைமை பற்றிய ஒரு விழிப்புணர்வு ஏற்படுவதற்கு இந்நாடகம் வழிகோலியது, என்றால் மிகையாகாது.

*சோ.ப வின் கர்ணன்*

தொடர்ந்து சோ.பத்மநாதன் எழுதிய "கர்ணன்" நாடகத்தைப் பழக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. இதில் நடித்தபலர் இன்று மேலதிகாரிகளாகவும், விரிவுரையாளர் ஆகவும், அதிபர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் எனப் பல பதவிகளில் முன்னேறியுள்ளார்கள். இதனை மேடையேற்றிய அன்றுதான். திரு.ந.இரவீந்திரன் (விரிவுரையாளர்) எம்முடன் இலக்கிய நட்பை ஏற்படுத்தியிருந்தார். சோ. பத்மநாதனின் கவிவண்ணமும், கலைவண்ணமும் ஒருங்கே சேர்ந்து குழைக்கப்பட்ட இந் நாடகம் மாணவர்க்கு நன்கு பிடித்திருந்தது. திரு.பேர்னாட் அவர்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்த போதும் இந்து கலாசாரங்களை மதிக்கும் பக்குவத்தில் இந்நாடகத்தின் அமைப்பை ஒத்திகைகளை, வேட உடுப்புகளை ஆவலுடன் கவனித்து கருத்துக்கள் கூறியது இன்றும் மனதிற்கு இனிமையாக உள்ளது.

*வித்தியாதீபம்*

1998 இல் தொடர்ந்து "வித்தியாதீபம்" வெளியீட்டின் போது எமது விமர்சன உரையினைச் செவிமடுத்து அதன் கருத்துக்களை விவாதத்துக்கு உட்படுத்துவார். ஒரு கல்வியியலாளனுக்கு உரிய சிறப்புக்களை திரு.பேர்னாட் கொண்டிருந்தமை அவரது தொழில் வெற்றிக்கு காரணமாகியது.

நாடக மேடை மட்டுமல்லாது நூல் விமர்சனம் மற்றும் அறிமுக அரங்குகளிலும் எமது பங்களிப்பு கல்வியியற் கல்லூரியில் தொடர்ந்தது. அந்தக் காலத்தில் விரிவுரையாளராக இருந்த திரு.ந.இரவீந்திரனின் இலக்கிய நட்பும் உப பீடாதிபதியாக

இருந்த திரு.இன்பதேவராஜா அவர்களின் ஆதரவுக்கரமும் கல்வியற் கல்லூரியில் பல வித செயற்பாடுகளை முன்னெடுக்க அவர்கள் அழைப்பின் பேரில் வழிவகுத்தது.

*வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்*

1997 இல் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினை தமிழ்மணி அகளங்கன், விமர்சகர் ந.இரவீந்திரன் ஆகியோரின் பலமான இலக்கிய விசையுடன் தொடங்கிய போது கல்லூரி மாணவர்களும் போயாதின கருத்தாடல்களில் கலந்து கொண்டு பயன் பெற பீடாதிபதி திரு.அழகரத்தினம் மற்றும் உப பீடாதிபதியாக பதவி பெற்ற திரு.க.பேர்னாட் அவர்களும் உறுதுணையாக இருந்தனர். சரியான முறையில் கல்விக் கொள்கைகளைப் புரிந்தவர்களாக சமூக உறவை கல்லூரியின் நன்மதிப்பை பயன்படுத்த விழையும் புத்தி ஜீவிகளாக அவர்கள் திகழ்ந்தனர். இதனூடாக கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களாக இருந்த பிரணவநாதன் (தற்போது யாழ்மாநகர ஆணையாளர்) அமரர் ரணேஷ் (அதிபர்) ஆகியோர் வட்டத்தின் வளர்ச்சியிலும் பங்கெடுத்திருந்தனர்.

*நிதர்சனத்தின் புத்திரர்கள்*

1995 யாழ்ப்பாண இடப்பெயர்வு காலங்களின் பின்னரான வவுனியா களத்தில் பின்னாளில் யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரியை உருவாக்கிய பீடாதிபதியாகத் திகழ்ந்த கலாநிதி கமலநாதன் அவர்களும், விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரன் அவர்களும் 2000 ஆண்டளவில் வவுனியா வளாகத்துக்கு நேரில் வந்து கல்லூரி ஆசிரிய மாணவர்க்காக ஒரு நாடகப் போட்டிக்கு பழக்க வேண்டும் என அழைப்பு விடுத்தனர். அந்த அழைப்பின் பிரகாரம் நாடகப் பட்டறை நடத்தி அதன் களப்பயிற்சியில் உருவாக்கப்பட்ட நாடகமாக எனது "நிதர்சனத்தின் புத்திரர்கள்" நாடகம் நிகழ்ந்தது இது வவுனியா நகரசபை அரங்கிலும் மேடை ஏறி பலரது பாராட்டையும் பெற்றுக் கொண்டது. 2002இல் வேறு பல நாடகங்களுடன் அது நூலுருவான போது இலங்கை அரசின் சாகித்திய விருதையும், வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விருதையும் பெற்றுக் கொண்டது. எமது பல்கலைக்கழக கலை கலாசார மன்றத்தலைவராக இருந்த திரு.த.விஜயசேகர் உதவி நெறியாளராக எம்முடன் இணைத்திருந்தார்.

நாடகக் குழுவினருக்கு பொறுப்பாக இருந்த அன்றைய விரிவுரை யாளரும், வவுனியா கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதியாகவும், யாழ்ப்பாண கல்வியற் கல்லூரி பீடாதிபதியாகவும் திகழ்ந்த திரு.க.யோகநாதன் அவர்கள் மிகுந்த கௌரவமானமுறையில் மாணவர்களை வழிப்படுத்தி ஈற்றில் ஒரு பாராட்டு நிகழ்வையும் ஏற்படுத்தி சிறப்புச் செய்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஒரு தலைமைத்துவ பண்பை கோடி காட்டும் நிகழ்வுகள் அவை. சமூக உறவைக் கல்லூரியுடன் இணைத்து மாணவர்கள் பயன் பெறும் நுட்பங்களை கொண்டிருந்தார்கள்.

*சிறுகதை கவிதை பட்டறை*

நாடக மேடை ஏற்றங்களுடன் சிறுகதைப் பட்டறை கவிதை எழுதும் பயிற்சிப் பட்டறை, என்பன உபபீடாதியாகத் திகழ்ந்த திரு.இன்பதேவராஜ் அவர்களின் வழிப்படுத்திலிலும் கலாநிதி நடேசன் இரவீந்திரனின் கூட்டு ஒத்துழைப்பிலும் ஒழுங்கமைக்கப்பட்டன. அத்துடன்கல்வியும் இலக்கியமும் எனும் நூலின் வெளியீட்டு நிகழ்வில் இதன் எழுத்தாளரும் பீடாதிபதியுமாகிய திரு அழகரத்தினம் அவர்களின் அழைப்பின் பேரில் நிகழ்த்தியிருந்தேன். இவை பற்றிய தனது மனப்பதிவுகளை திரு.க.பேர்னாட் அவர்கள் உடனுக்குடன் பரிமாறிக் கொள்ளும் சிறப்புக் கொண்டவர். அவை விமர்சனப் பாங்கானவை.

*திசை கோட்படுத்தல் நிகழ்வுகள்*

தொடர்ந்தும், பீடாதிபதியாக பொறுப்பேற்றதன் பிற்பாடு பல்வேறு செயற்பாடுகளில் பல்கலைக்கழக கல்வியாளர்களாகிய எங்களையும்மிக விருப்புடன் இணைத்துக் கொள்வார். ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும் திசை கோட்படுத்தும் நிகழ்வுகளில் ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவம் பற்றிப் பேசவும், நாடக அறிமுகம் செய்யவும் அழைப்பதோடும் தானும் இருந்து அவற்றை உன்னிப்பாக அவதானித்து மாணவர் பயன்பெறும் கருத்துக்கள் சொல்வதில் திரு.பேர்னாட் அவர்களுக்கு நிகர் அவர்களே.

ஒரு முறை 2000 அளவில் ஆசிரிய மாணவர்களின் நாடகம் ஒன்று கொழும்பு நிகழ்விலே நடை பெற ஏற்பாடாகி இருந்தது. அதற்கான பயிற்சியை வழங்கி மாணவரை ஆயத்தம் செய்யும் பணி எமக்கு வழங்கப்பட்டது. அந்த நாடகம் சிறப்பான நெறியாள்கைக்கான பரிசை வென்று வந்தது. திரு.ந.இரவீந்திரன் அவர்களும் மறக்காது நெறியாளரான எமது பெயரை சரியான தருணத்தில் எடுத்துக் கூறி சான்றிதழையும் பெற்றுத் தந்தார். அந்த சான்றிதழ் ஆங்கிலத்தில் அமைந்தமையால் அது பின்னாளில் எனது உயர் படிப்புக்கும் கை கொடுத்தது என்பதை பதிவு செய்ய விரும்புகிறேன்.

*பல்வேறு களங்கள்*

இது போலவே கலாநிதியாக வளர்ந்த நடேசன் இரவீந்திரனின் நூல்களை ஆய்வு செய்யவும் அடியேன் அழைக்கப்பட்டிருந்தேன். 2008 இல் "திருக்குறளில் கல்விச் சிந்தனை" எனும் நூலுக்கான ஆய்வுரையை மேற்கொண்டேன். தொடர்ந்து வந்த காலங்களில் 2009, 2010, 2011, ஆண்டுகளில் மாணவர்களின் கவிதைநூல் வெளியீட்டு நிகழ்வுகள் விரிவுரையாளர் திருமதி நெலோமி அன்ரன்குருஸ் அவர்களின் நூல்வெளியீடு மற்றும் ஆங்கில தின விழா பிரதம விருந்தினர் உரை, விரிவுரை இணைப்பாளரும் ஆங்கில விரிவுரையாளருமாகிய திரு.பரமேஸ்வரன் நூல் வெளியீட்டு பிரதம விருத்தினர் உரை என்பவற்றையும் உற்றுக் கவனித்து கருத்து கூறும் பழக்கம் அன்றைய பீடாதிபதி பேர்னாட் மற்றும் தற்போதய உப பீடாதிபதி திரு.சுவார்ணராஜா ஆகியோரிடம் காணப்பட்டது. அவர்களோடு விரிவுரையாளர்கள் ந.பார்த்திபன், பொ.சத்தியநாதன், வி.பரமானந்தம், பவானந்தன், கௌரிகாந்தன் ஆகியோர் அறிவுத்தளத்தில் உசாவும் அன்பர்கள்.

திரு பேர்னாட் வவுனியாவுக்கு வரும் கலை இலக்கிய வாதிகளை அவர் தம் படைப்புக்களை ஆசிரிய மாணவர்க்கு அறிமுகம் செய்வதற்கும் பின்னிற்காதவர். அவற்றில் ஒன்று பேராசிரியர் சி.மௌனகுருவின் "இராவணேசன்" மற்றும் நாடகக் கலைகளின் தொகுப்பான "லயம்" இவை இரண்டையும் கல்லூரி அரங்கில் மேடை ஏற்றுவதில் நாமும் பங்கு கொண்டிருந்தோம். அன்றைய பீடாதிபதி போர்னாட் அவர்களின் மகத்தான வரவேற்புடன் அவை சிறப்புற மேடை ஏறின. ஆசிரிய மாணவர் அடைந்த பாக்கியங்கள் கோடி.

*நிறைவு நிகழ்வு*

இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல் மேலும் இரு நிகழ்வுகள் பதிவு பெற வேண்டியன. ஒன்று 2009 இல் நடை பெற்ற பட்டமளிப்பு விழா பேருரை மற்றும் கலாநிதி பட்டம் பெற்றவர்களுக்கான விழாவில் விருது பெற்றவர்கள் சார்பில் அடியேன் ஆற்றிய உரை, இவை இரண்டும் அவரின் கணிசமான பாராட்டுக்கள் பெற்றவை. திருக்குறள் மேற்கோள்கள், கல்வியலாளர் கருத்துக்களை அனுபவக் கீற்றுகளுடன் தொடர்புபடுத்தல், ஆங்கில மற்றும் தமிழ் இலக்கிய மேற்கோள்கள் என விரியும் நமது உரைகளுக்கு விமர்சனம் கூறும் பெருந்தகையாளர் நிறைந்தது

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி. மிக முக்கியமான பண்பு ஒன்றைக் கூறி இப்பதிவை நிறைவு செய்ய விழைகின்றேன்.

*இடம்பெயர்ந்தோர்*

2009, 2010 இல் கல்வியியற் கல்லூரி மாணவர் அனுமதி நிறுத்தப்பட்டு கல்லூரி மூடப்படும் அபாயத்தை நெருங்கிய போது தனது சுய கௌரவத்தையும் பொருட்படுத்தாது பல்வேறுபட்ட சமூக நிறுவன சேவையாளர்கள் அரச அதிபர், அரசியல் பிரமுகர்கள், இலக்கிய வாதிகள் என்போரைச் சந்தித்து இடம் பெயர்ந்தோரை பொறுப்புடன் தக்க இடம் செல்ல வைத்து மீண்டும் கல்லூரியை பழைய நிலைக்கு மீட்டதில் திரு.பேர்னாட் அவர்களின் பங்கு மகத்தானது. வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் அதன் தலைவர் தமிழ்மணி அகளங்கன் மற்றும் செயலாளர் ஆகிய எம்முடனும் நல்லமுறையில் தொடர்புகளைப் பேணி கல்லூரியின் வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பு செய்தார்.

அத்துடன் கடந்த 17 வருடங்களாக வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடாத்தி வந்த 165க்கு மேற்பட்ட கருத்தாடல்கள், ஆண்டு விழாக்கள், என்பவற்றில் விருத்தினராகவும், உரையாற்றுபவராகவும் கலந்து கொண்டு ஒரு சமூக ஒருங்கிணைப்பாளராக திகழ்ந்தார் என்பது குறிப்பிட வேண்டியது.

ஒரு சிறந்த கல்விமான், மனிதப்பண்பியலாளன் இலக்கிய அபிமானி என பன்முகத்திறன் படைத்த திரு.க.பேர்னாட் அவர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியாக சிறப்புறப் பணியாற்றி ஒய்வு பெற்றபோதும் அவரது பண்பான செயற்பாடுகள் ஈழத்து மக்களுக்கு மேலும் பல பணிகளை ஆற்றும் என நாம் திண்மையாக நம்பலாம்.

25.01.2014





### வட்டத்தின் "இயற்றமிழ்ச் செல்வர்" விருது பெறும்

# பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்



இலங்கையின் வடமாகாணத்து யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள காரைநகர் என்னும் இடத்தில் சிவஞானோதய வித்தியாலய அதிபர் சண்முகம் சோமசுந்தரம், இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மகளாக செல்வி யோகலட்சுமி அவர்கள் 04-07-1944 இல் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை காரைநகர் சிவ ஞானோதய வித்தியாசாலையிலும் பின்பு இடைநிலைக் கல்வியினை காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியிலும் கற்றுத் தேறினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில வெளிவாரியாக கலைமாணி பட்டம் (B.A) பெற்ற இவர் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தின் பண்டிதர் பரீட்சையில் தேறி பண்டிதை ஆனார்.

வவுனியாவில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரே ஒரு பண்டிதை இவரே. மரபுவழிப் பண்டிதையாகவும் நவீன கல்வித் திட்டத்தின் பட்டதாரியாகவும் ஆசிரியப்பணிக்கான டிப்ளோமா பட்டமும் பெற்ற ஒரு அறிவாளியாக இவர் விளங்குகிறார்.

ஆசிரியப் பணியில் சேர்ந்து புங்குடு தீவு மகாவித்தியாலயம், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர் தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வவுனியா இராசேந்திரங்குளம் வித்தியாலயம் என பல இடங்களிலும் பணியாற்றி ஈற்றில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஐந்து ஆண்டுகள் வரை பணி ஆற்றி ஓய்வு பெற்றார்.

தனது ஆசிரிய சேவை காலத்தில் யாழ்ப்பணம் கோப்பாய் வலய ஆசிரிய ஆலோசகராகவும், திறந்த பல்கலைக்கழக வருகை விரிவுரையாளராகவும், பட்டப் பின்படிப்பு (வெளிவாரி) பகுதிநேர விரிவுரையாளராகவும் (PGDE) வவுனியா கல்வித் திணைக்களத்தில் வளவாளராகவும் பணியாற்றினார்.

ஓய்வு பெற்ற பின்பு க.பொ. உயர்தர மாணவர்களுக்கும், வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் தமிழ், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்பித்து பல மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறச்செய்தார்.

வவுனியா குருமன்காடு காளிகோவில் தேவஸ்தானத்தினால் நடாத்தப்பெற்ற சைவப்புலவர் வகுப்பின் பிரதம விரிவுரையாளராகவும், இந்து கலாசாரத் திணைக்களத்தின் தர்மாசிரியர் வகுப்புக்களின் விரிவுரையாளராகவும் பணியாற்றினார். அத்தோடு இந்து கலாசாரத் திணைக்கள வளவாளராக அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பல கருத்தரங்குகளில் உரையாற்றி ஆன்மீகப்பணி செய்தார்.

வசதி குறைந்த பாடசாலை மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்கள் பலருக்கும் நிதி உதவி செய்து அவர்கள் பொருளாதார இடர்பாடின்றி கல்விகற்க வழிசமைத்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்.

இவரது பாட்டனார் பரமநாதர் சண்முகம் அவர்கள் நாவலர் மரபில் சைவமும் தமிழும் வளர்க்க அரும்பாடுபட்டவர். காரை நகரில் ஆயிலி என்னும் குறிச்சியில் சிவஞானோதய வித்தியாசாலையையும், புளியங்குளம் குறிச்சியில் அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தையும் நிறுவியவர்.

அந்த மரபு வழியில் பண்டிதை அவர்கள் சைவமும் தமிழும் வளர்க்கும் பணியில் அயராது உழைத்துவருகிறார். பல பட்டிமண்டபங்கள், பல வழக்காடு மன்றங்கள், பல தனிப்பேச்சுக்கள், பல கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் என இலங்கையின் பல பாகங்களிலும் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வருகிறார்.

வவுனியா குருமன்காடு ஸ்ரீகாளியம்மன் ஆலய நிர்வாகசபை உறுப்பினராகப் பணியாற்றும் இவர் பல ஆலயங்களில் சொற்பொழிவாற்றி வருவதோடு புராணபடனமும் செய்து வருகிறார். தேர்த்திருவிழாக்களின் போது நேர்முக வர்ணனை செய்வதிலும் வல்லவராத் திகழ்கிறார். பாடல் புனைவதிலும் வல்லவர்.

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் எழுத்தாக்கக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றி 'ஆண்டு 9 - 11 மதிப்பீடு கணிப்பீடு முறைமை' 'ஆரம்ப முன்சேவை ஆசிரியர் கல்வி' 'தாய்மொழி' தமிழ் தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரிய மாணவர்க்கான 'தமிழ் இலக்கணம் வளநூல்' 2003/2014 என்னும் நூல்களை உருவாக்குதலில் முன்னின்றுழைத்துள்ளார்.


'பொதுக்கலைத்தேர்வு - இலக்கண வினாவிடைகள்' (2007), '25கட்டுரைகள்' (2008), 'மொழி வரலாறு' (2008), 'இலக்கிய வரலாறு' 'வினாவிடைகள்' (2008), 'இலக்கண மரபுகளும் மொழிவரலாறும்' (2014) ஆகிய நூல்களை பட்டப்படிப்பு மாணவர்களுக்காகவும், க.பொ.த உயரதர மாணவர்களுக்காகவும் ஆக்கி வெளியிட்டார்.

சுவிஸ்காரை அபிவிருத்திச்சபை வெளியிட்ட "காரைநிலா" மலரின் ஆசிரியராகவும், வவுனியா குருமன்காடு ஸ்ரீ காளி அம்மன் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேக சிறப்பு மலரான 'காளி தரிசனம்' நூலின் துணை ஆசிரியாராகவும் சிறப்பான பணியை ஆற்றினார்.

செம்மொழிச் செல்வி, அருள் மொழிச் செல்வி, தமிழ்த் திலகம், சிவநெறிப் பிரசாரகர், கலைஒளி, அருள்ஞான வித்தகி எனப் பல பட்டங்களைத் தனது சமய, சமூக, கல்விப் பணிகளுக்காகப் பெற்றார். வடக்கு மாகாண முதலமைச்சர் விருது, மத்திய அரசின் கலாசார அமைச்சின் கலாபூஷணம் பட்டம் ஆகியவற்றை தனது தமிழ் இலக்கியப் பணிக்காக பெற்றார்.

கலை இலக்கிய, சமய சமூக மேம்பாட்டுக்காவும் தமிழ் மொழியின் இயற்றமிழ் வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்ட செல்வி பண்டிதை யோகலட்சுமி சோமசுந்தரம் அவர்களுக்கு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் இயற்றமிழ்ச் செல்வர் என்னும் கௌரவப் பட்டத்தை வழங்கிக் கௌரவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றது.

(ஆ.ர்)






# நானுமோர் கனவோ?

**- கவிதா அரங்க ஆற்றுகை**

**- ஆ.சடாகோபன் -**

தொலைக்காட்சியுள் தொலையும்
கோளமயமாதலினால்
கோலம் மாறும் வாழ்வியல்
ஆழிச்சுழியில் அகப்பட்ட
காகிதத் துண்டுகளாய்
மூன்றாம் உலகங்கள்

மூச்சுத் திணறி
முளி பிதுங்க
உப்பிப்போன முகங்களோடு
அள்ளி அலங்கரிக்கப்பட்ட
பிரேதங்களாய்
புதைக்கப்படுதலுக்கான
எல்லா ஆயத்தங்களோடும்
எங்கள் தேசமும்
வீதிகளின் இருமருங்கும்

விரைவுணவுக் கடைகள்
அம்மாக்கள் எவரும்
அடுக்களைகளில் இல்லை
தொலைக்காட்சித் தொடர்களிற்குள்
தொலைந்து போகிறார்கள்

அங்குதான் அவர்கள்
உணர்வோடு இருக்கிறார்கள்
அழுகிறார்கள் சிரிக்கிறார்கள்
அழுது கொண்டேயும் சிரிக்கிறார்கள்

"கடவுளே அவளைக் காப்பாற்று"
என்று கும்பிடுகிறார்கள்.
சிலர் நேத்தியும் வைக்கிறார்கள்
அதுதான் அவர்களின் உலகம்
அவர்களும் உலகமயமாகிவிட்டார்கள்.

*(ஆற்றுகை)*

வார நாட்களில் திங்கள் முதல் வெள்ளிவரை

| | | |
|---|---|---|
| காலை | 08.00 மணிக்கு | – "கலைமகள்" |
| | 09.00 மணிக்கு | – "காதுமடல்" |
| | 10.00 மணிக்கு | – "தெளிவு" |
| | 11.00 மணிக்கு | – "அலங்கோலங்கள்" |
| | 12.00 மணிக்கு | – "குஞ்சியாச்சி" |
| பகல் | 01.00 மணிக்கு | – "அத்தைக்காக |
| | 12.00 மணிக்கு | – "அம்மம்மா" |
| | 03.00 மணிக்கு | – "தாத்தா" |
| | 04.00 மணிக்கு | – "தங்கைக்காக" |
| | 05.00 மணிக்கு | – "சித்தப்பா" |
| | 06.00 மணிக்கு | - "பேராண்டி" |
| | 07.00 மணிக்கு | – "மச்சான்" |
| | 08.00 மணிக்கு | – இல்லை |
| | 09.00 மணிக்கு | – "தம்பி மடு" |

"இதில் எந்தத் தொடரும் LOCAL தொடரல்ல. எல்லாமே வரிசெலுத்தி உங்களிற்காக இறக்குமதி செய்யப்பட்டவை"

Aunty! Aunty! பாத்தீங்களே Aunty! எவ்வளவு நல்லவை எங்களுக்காண்டியே வரிசெலுத்தி இறக்குமதி செய்து போட்டினம். பாவம் என்ன Aunty! எங்களுக்காண்டி வரி செலுத்தினமோ! எங்களுக்காண்டி இறக்குமதி செய்யினமோ!

தாய்ப்பாலும் புட்டிப்பாலும்
வீதிகளின் இருமருங்கும்
விரைவுணவுக் கடைகள்
அம்மாக்கள் எவரும்
அடுக்களைகளில் இல்லை
தொலைக்காட்சித்
தொடர்களிற்குள்
தொலைந்து போகிறார்கள்

அவர்களின் அம்மாக்கள்
சோற்றோடு குழைத்து
அவர்களிற்கு ஊட்டிய அன்பும்
அறிவும்அனுபவப் பகிர்வும்
எங்களிற்கு இல்லை
நிலவு காட்ட
நீல் ஆம்ஸ்ரோங்கும்
அமுது ஊட்ட – ஒரு
அழகான றோபோவும்
அமெரிக்காவில் இருந்து
அடுத்தவாரம் வருகின்றன.

அழகுக்கலை நிபுணர்களின்
அறிவார்ந்த வார்த்தைகளை
அப்படியே கேட்போம்

நாளை எங்கள் குழந்தைகளிற்கு
நாங்கள் பாலூட்ட வேண்டியதில்லை
நியூசிலாந்தின் அங்கீகரிக்கப்பட்ட
பண்ணைகளிலிருந்து அம்மாப்பால்
இறக்குமதி செய்யப்படும்.
எதிர்கால வரவு செலவுத் திட்டத்தில்
இப்படியும் ஒரு தொகையை
துண்டு விழுத்தலாம்.

*ஆற்றுகை*
நீங்கள் பாலூட்டுவதால் உங்கள்
கட்டழகு குறையுமென்று
அழகுக்கலை
நிபுணர் அடிக்கடி கனவில் வந்து
தொல்லை தருகிறாரா?
யா....
நீங்கள் பாலூட்டாவிட்டால் உங்கள்
குழந்தையின் கட்டழகு
பாதிக்கப்படுமென்று
கவலைப்படுகீறீர்களா?
யா...

கவலையை விடுங்கள்
இதோ வந்துவிட்டது
Kangaru Mummy Milk
Only From New Zeland
பாடல்
எனை ஈன்ற அம்மாவே
ஏன் இந்த மாற்றம்
உனையன்றி வேறெதனை
எம் தெய்வம் என்போம்
உதிரத்தைப் பாலாக்கி
உணர்வோடு ஊட்ட
இறைகொடுத்த வரமதனை
ஏன் தொலைத்து நிற்கின்றாய்!

இரவல் பால் எமக்கெதற்கு
இரவல் உணவு எமக்கெதற்கு
இரவல் அன்பு எமக்கெதற்கு
இரவல் அம்மா எமக்கெதற்கு

இதயத்தை திறந்தெடுத்து
உணர்வோடு பரிமாற
ஓடிவா என் அம்மா
உண்மையிலே வாழ்ந்திடுவோம்.

iii கையடக்கத் தொலைபேசி
கையடக்கத் தொலைபேசிகளால்
வாயடைத்து நிற்கிறது
மனித இனம்

பொய் உரைக்க,
பொழுது போக்க
மெய் உருகப்பேசி
மேனி சிலிர்க்க
குறுந்தகவல் அனுப்பிக்
குறும்புகள் பண்ண
கைகொடுத்து நிற்கின்ற
கையடக்கத் தொலைபேசியே!
கையெடுத்து வணங்குகின்றோம்
கருவியே அருள்வாய்.!
அரும்பும் பருவத்து அருமந்த
நிமிடங்களை
விரும்பியும் விரும்பாமலும்
வீணடிக்கும் வித்தகியே

உனக்கு வீழ்ச்சியே இல்லை
எங்கள் மூளைகள் முழிக்கும்
வரை!

கால் அழகு தோல் அழகு
கன்னியரின்
உடல் அழகையெல்லாம்
கண்ணிமைக்கும் நேரத்தில்
படமெடுக்கும் வசதிவேறு
வேண்டுமா தோழி!

கையடக்கத் தொலைபேசிகளின்
கண்ணாடித் திரைகளைக்
கொஞ்சம்
துடைத்துப் பாருங்கள் -
உங்கள்
அப்பாக்களின் வியர்வையின்
உப்புப்படிவுகள்
உங்களிற்குத் தெரியும்.

தொலைபேசியென்பது தொடர்பாடல் கருவி. தொல்லை பகிர்வுக் கருவியல்ல எல்லையற்ற சேவைகளை எமக்களிக்கவென நல்லான் ஒருவன் கண்டறிந்த கருவி. பேனாவை எடுத்தவன் காவியம் படைப்பதும் காது குடைவதும் கையில் எடுத்தவனின் தலையின் உள்ளக நிலமைகளைப் பொறுத்தது

*ஆற்றுகை*

CUT பண்ணிடாதீங்க
CUT பண்ணிடாதீங்க

LINE இலை இருங்க கனக்கப் பேசலாம்....
நிறையப் பேசலாம்....பாட்டுப் பாடலாம் பாட்டுக் கேக்கலாம்...உங்கள் இதய வானொலியான
எங்களிற்கு எடுத்து Subject
இல்லாமலேயே நாள் முழுக்க
வாயுளையப் பேசலாம். வேண்டிய
மொழியில் விரும்பிய உச்சரிப்போட கருத்துப் பற்றிய கவலையே இல்லாமல்
மாறி மாறி கடிச்சுக் குதறிக்
கடிக்கலாம். சமையல் குறிப்புச் சொல்லலாம். கவிதை சொல்லலாம், தாலாட்டுப் பாடலாம்....

உங்களிற்கென்ன லூசா ?
இல்லவேயில்லை வந்துவிட்டது
Pat Log இணைப்புகள்...
நாலு ரூபாக்கு
நாள் முழுக்கப் பேசலாம்
Pat Log – Pocket களிற்கு பூட்டு
வாய்களிற்குத் திறப்பு
உங்கள் இரட்சகர்கள் நாங்களே!
நட்சத்திர வானொலி எங்களுடன்
நாள் முழுக்கப் பேசுங்கள்....!

*பாடல்*

நாள் முழுக்கப் பேசலாகுமா
– மச்சானே நாள் முழுக்கப்
பேசலாகுமா
நாள் முழுக்கப் பேசினாலடி
– என் செல்லமே
நம்ம வாழ்வு நாசமாகுமே
நம்ம வாழ்வு நாசமாகுமே

உணவு உடை உறையுள்
என்பதெல்லாமே – எங்கள்
உழைப்பில்தானே உள்ளதெடி
செல்லமே. கனவுகாணும்
வாழ்க்கையெல்லாம்
செல்லமே – எங்கள்
கையில் வந்து கூடுமெடி செல்லமே
நாள் முழுக்கப் பேசலாகுமா-
ஏமச்சானே. நாள் முழுக்கப்
பேசலாகுமா
நாள் முழுக்கப் பேசலாகுமா?
– ஏமச்சானே
நாள் முழுக்கப் பேசலாகுமா?

வேலைவெட்டி இல்லாதவங்க
தானெடி – வெறும்
வெட்டிப் பேச்சுப் பேசுவாங்க
கேளெடி
வெட்டிப் பேச்சுப்
பேசுவதை வேலையாய் - இப்போ
உலகமயம் ஆக்குதெடி பாரெடி

பேசப் பேச அவங்களிற்கு காசெடி
– நாங்க. பேசப் பேச எங்களிற்கு
லூசெடி
பேசப் பேச அவங்களிற்கு காசெடி
– நாங்க. பேசப் பேச எங்களிற்கு
லூசெடி

iv தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பமென்றால்
கணிணிக் கற்கையென
கருதுகின்ற அறியாமை

உலக அறிவை
உள்வாங்கிக் கொள்வதென்பது
உள்ளறிவை இழப்பதல்ல
கணிணியும் இணையமும் - எங்கள்
கைகளில் இருக்கட்டும்
அவற்றின் கால்களில் - நாளும்
விழுந்து கிடப்பதை
நாங்கள் வெறுப்போம்.

இணைய வலைகளில்
சிக்கித் தவிப்பதா – எங்கள்
எண்ண அலைகளால்
இணையத் தளங்களை
கட்டுக்குள் வைப்பதா?!
பகுத்தறிவுள்ள மானிடராய்
பகுத்து அறிவோம்
உலகமயமாதலென்பது
உண்மையில் என்ன?

உலகம்
சுருங்கிவிட்டது என்கிறார்களே
பயம் ஒன்றும் இல்லையா?
சுனாமி வராதா?

பயப்படாதே?
கோளமயமாதல்க்கூடாக
தமது அறிவையும் ஆற்றலையும்
எம்மோடு
பகிர்ந்து கொள்ள
முடியுமென்கிறார்கள்

அப்படியென்றால்...
எமக்கு அறிவும் இல்லை
ஆற்றலும் இல்லையென்கிறார்கள்
அப்படித்தானே!

என்ன இருந்தாலும்
அறிவும் ஆற்றலும்
அவைக்குக் கூடத்தானே!

இல்லவேயில்லை
அறிவும் ஆற்றலும்'
எல்லோர்க்கும் ஒன்றே!

அவர்கள் பயன்படுத்துகிறார்கள்
- நாங்கள் பதுக்கி வைத்திருக்கிறோம்
எங்கள்
பரம்பரையலகிற்கே உரித்தான
சேமிப்புக் குணம்
வல்ல அரசுகள் - தமது
எல்லைகளைத் தாண்ட
எடுத்துக் கொண்ட எண்ணக்கருவே
கோளமயமாதல்!
அபிவிருத்தியடைந்த நாடுகள்
உலகை மயப்படுத்த
கைக்கொள்ளும் உபாயமே
உலகமயமாதல்!

நச்சு விதையின் மேல் போடப்பட்ட
அழகிய
சொக்கிலேற் கவசம் தான்
பரிமாற்றமும்
பகிர்ந்து கொள்ளலும்!

v நுகர்வுக் கலாசாரம்

*பாடல்*

தெளிவாகச் சொல்கிறார்கள் - மிகத்
தெளிவாகச் சொல்கிறார்கள்
தெளிவான குழப்பத்தோடு
நாங்கள் புரிந்து வைக்கும் படி
தெளிவாகச் சொல்கிறார்கள்

நீங்கள் மூலப் பொருட்களைத்
தாருங்கள்!
நாங்கள் முடிவுப் பொருட்களைத்
தருகிறோம்!
உங்கள் மூலவளங்களைத் தாருங்கள்!
எங்கள் விளைவுகளை நாங்கள்
தருகிறோம்!

ஆக்கும் ஆற்றல் உங்களிற்கு
தேவையில்லை நண்பனே!

அள்ளித்தின்ன முடியுமென்றால்
அதுபோதும் நண்பனே!
நாங்கள் ஆக்கும் ஆற்றலை வளர்த்துக்
கொள்கிறோம்,
நீங்கள் நுகரும் ஆற்றலை வளர்த்துக்
கொள்ளுங்கள்.,
நீங்களும்
நாங்களும் பகிர்த்துகொள்ளும்
இம்முறை
உலகமயமாதல்தான் நண்பனே!

வல்லரசுகள் ஒருபோதும்
சந்தைகளைத் தேடுவதேயில்லை
சந்தைகளை உருவாக்குகிறார்கள்

தங்கள் உற்பத்திப்பொருட்களின்பால்
நுகர்வு நாட்டம் மிக்க
மக்கட் கூட்டங்களை
உருவாக்குகிறார்கள்

அந்த உருவாக்கத்தில் தான்
நாங்களும் அள்ளுண்டு
போகிறோமா?

எங்கள் வளங்களை விழுங்க
அலைகின்ற முதலைகளாய்
அகலத் திறந்த வாய்களோடு
அவர்கள்

அதுபோல
அவர்களின் விளைவுகளை
எங்களிற்குத் தீத்திவிட
எங்கள் வாய்களைத்த திறக்கவைக்க
அவர்கள் சொல்லுகின்ற
“ஆ” சத்தம் தான் உலகமயமாதல்
*ஆற்றுகை*
எங்க... ஒருக்கா எல்லாரும்
ஆ...ச் சொல்லுங்கோ...!
ஆ... ஆச் சொல்லுங்கோ
இல்லாட்டிப் பூச்சாண்டி வந்து
புடிச்சுப்போடும்
ஒரு வாய்... ஒரேயொரு வாய்
உங்க காக்காப்பிள்ளை....
தனக்குத் தரட்டாம்...
சும்மா இருந்து கொண்டு
கா.... காவாம்...

அவருக்குக் குடுக்கமாட்டன்
எங்கட (baba) பபா க்குத் தான்
இஞ்ச பாருங்கோ...
கடைசி வாய்....
ஆசைக் கொருக்கா ஆ...ச்
சொல்லுங்கோ...
சுருககமாய்ச் சொன்னால்
எங்களை
ஆவெண்ணச் சொல்கிறார்கள்

இதற்காக
உணவுப்படைகள் முதலில்
ஊடுருவும்
உள்ளே உளவாளிகளை உருவாக்கி
மெல்ல மெல்ல வேலையைத்
தொடங்கும்

நாளை நல்வாழ்வுக்கு
கதவுகள் திறக்கப்படுவது போல்
எங்கள்
காதுகளிற்குப் பூவைக்கப்படும்

புதிய புதிய விடயங்களை
பொருட்கள் சேவைகளை
புதினமான தகவல்களை
நவீனத்துவங்களையெல்லாம்
அறிமுகப்படுத்தி வைப்பது போல்
வியாதி பரப்பப்படும்

வைரஸ் வியாதியாய்
நுகர்வு நாட்ட நோய்
மக்களிடையே பரவும்

சிந்தனை சக்தியும்
ஆக்கத் திறனும்
அப்படியே அமத்தப்படும்
காற்றில் கலந்து
பன்மடங்குகளாய்ப் பெருகி
நுகர்வு நாட்ட வைரஸ்
எங்கும் தொற்றும்
எதிர்பார்க்க
முடியா வடிவங்களிலெல்லாம்
நோய்க்காரணிகள் உலாவரும்
இணையத் தளங்கள்
இலத்திரனியல் ஊடகங்கள்

கண்ணைக் கவரும்
வண்ணப் பூச்சுக்களால் மின்னும்
அச்சு ஊடகங்கள்
என்பவற்றிற்கூடாகவும்
இந்தக் கிருமி பயணிக்கும்

அந்தப் பயணங்கள் பற்றி
யாரும் அறிய முடியாதபடி
அற்புதமாக எல்லாம்
வடிவமைக்கப்படும்

கல்விச் செயற்பாடுகள்
பாடத்திட்டங்கள்
கலை பண்பாட்டு மத நிகழ்வுகள்
இசை மொழி கலாசாரம்
என்றெல்லாம் கூட
ஊடுருவல்கள் தொடரும்

அழகுக்கலை நிபுணர்களின்
அறிவுரை நிகழ்வுகள்
ஆண்பெண் மாதிரி
உருவாக்கங்கள்
அழகுராணிப் போட்டிகள்
கவர்ந்திழுக்கும் விளம்பரங்கள்
கண்காட்சிகள் மலிவுச்சந்தைகள்
தங்கக் குவியல்கள்
அதிஷ்டச் சீட்டுக்கள்
அனுசரணைகள்
மித மிஞ்சிய
பண இறைப்புகளிற்கூடாகவும்
நுகர்வு நாட்ட நோய்
வீச்சுடன் பரவும்

அரச தனியார் நிறுவனங்கள்
அரச சார்பற்ற நிறுவனங்கள்
சர்வதேசப் பாடசாலைகள்
சமூக பொது மத நல
அமைப்புக்கள்
எனப் பலபல முகமூடிகளோடும்
நோய்க் காவிகளும் தொழிற்படும்.
உதவிகள் புலமைப்பரிசில்கள்
இலவசக் கருத்தரங்குகள்
என்றெல்லாம் ஏராளமாக கவரும்
களியாட்டங்கள் கொண்டாட்டங்கள்
குளிரான பானங்கள்

சூடான பானங்கள்
உணவகங்கள் விடுதிகள்
உறைவிடங்கள் எல்லாம்
வெள்ளைக்காரப்
பிரபுத்துவப் பெயர்களோடு
வீதிக்கு வீதி விரியும்

மனித நாடி நரம்புகள்
தசைநார்கள்
என்புகள் மூட்டுகளின்
அசைவுகளைக் குறைக்க
வசதிவழங்கும் இயந்திரங்கள்

கடனாளி அந்தஸ்தை
கடன் அட்டை பெற்றுத்தர
காசில்லாமலேயே அள்ளிப் போகும்
தவணைக்கட்டண முறைகள்
அந்த அந்தஸ்தை
மேலும் உயர்த்தும்

தொழில் முயற்சிகளிற்கான
முதலீட்டுக் கடன் வசதிகள்
குறையும்
நுகர்வுக்கான கடன்வாய்ப்புகள்
நீளக்கை
சேட்டும் கழுத்துப்பட்டியுமாய்
தலையில் நீர்க்களி தடவி
வர்ணம் பூசிய நுனிநாக்கு
வார்த்தைகளோடு
வார நாட்களில்
அலுவலகங்களிற்கும்
விடுமுறைநாட்களில்
வீடுகளிற்கும் வந்து
அழைத்துப் போகின்றன!

கனரக கடன் அட்டைகளை
கைகளில் வைத்திருப்பதில்
நாங்கள் பெருமிதம் கொள்வோம்!

வியாதி பரவும்
நாம் அறியாமலேயே
நுகர்வு நாட்ட வைரஸ் - எங்கள்
மூளை நரம்புகளில் குடியேறி
எண்ண அலைகளால்
இதயத்திற்குக் கடத்தப்படும்

vi விழிக்க வேண்டிய வேளை!
அங்கு
பல வண்ண வண்ண
குமிழ்கள் உருவாகும்.
வியாதி முத்தும்.
கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு
வியாதி முத்தும்
மனித உறவுகளில்
விரிசல்கள் ஏற்படும்
மானிடப்பண்புகள் சிதையும்
இயற்கையுடனான முரண்பாடுகள்
அதிகரிக்கும்

கண்ணாடி மணலும்
கடற்கரைச் சிப்பிகளும்
முன்னாடி நிழல்விரித்து
உயர்ந்து நின்ற
பச்சை மரங்களும்
வன கடல் வளங்களும்
வகையான உயிர்களும்
புல்லும் பூண்டும் புராதன
பொருட்களும்
கல்லும் மண்ணும்
கனரகமாக
கொள்கலன்களில் ஏறி
கடல்தனைக் கடக்கும்

ஒரு மடங்கு
குளிர்பான உற்பத்திக்காய்
பல மடங்கு
குடிநீரைவீணடிக்கும்
பல் தேசியக் கம்பனிகள்

மிகையுற்பத்திக் கோதுமை
கடல்நீரில் கரைக்கப்படும்
ஒவ்வொரு தடவைகளிலும்
எத்தனை கோடி!
ஆபிரிக்க இலத்தீன் அமெரிக்க
ஆசியக் குழந்தைகள்
பசியால் கண்ணீர் வடிக்கின்றன.

உலகமயமாதலின்
விழிப்புலன் எல்லைக்குள்
இந்த நாடுகள் விழவில்லையா..!

எதியோப்பியாவும் சோமாலியாவும் -
ஏன் பரிமாறலுக்கும் பகிர்தலுக்கும்
யாழ்ப்பாணமும் வாகரையும்
எட்டக் கூடிய தூரத்தில் இல்லையா!

வினாக்கள் வெளிக்கிடட்டும்
விடைகளைத் தேடி - இது
விழிக்க வேண்டிய வேளை!

*பாடல்*

விழிக்க வேண்டிய வேளை - இது
விழிக்க வேண்டிய வேளை
மாய வண்ணக் காட்சிகளில்
மயங்கிக் கிடக்கும் மானிடரே
திறக்க வேண்டிய வேளை – விழி
திறக்க வேண்டிய வேளை
கானல் நீரை கைகளிலே ஏந்தி
மாயாஜால போதைவார்த்தை வீசி
புற்றுநோயாய்ப் புகுந்து எமக்குள்ளே
வாழவும் கோளமயமானவர் வருகிறார்
கோலாகலமாகவே வருகிறார்.

எங்கள் வளங்கள் எங்களிற்கு
வேண்டும்
எங்கள் நுகர்வை நாங்கள் விதிக்க
வேண்டும்
சிந்தனையும் ஆற்றலும்
செயற்பாடுதிறனும்
முன்னைநாளின் எம்மவரின்
முதிசமதும் வேண்டும்
முன்னை நாளின் எம்மவரின்
முதிசமதும் வேண்டும்.

*(கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 2008 இல் அரங்கேற்றப்பட்டது.)*

பதிவு 1

# மணிவிழாக்கண்ட தமிழறிஞர் கலாபூஷணம் கலாநிதி தமிழ்மணி கவிஞர் அகளங்கன்

- நந்தீஸ்வரி துரைராசா -

தமிழறிஞர் கலாநிதி கலாபூஷணம் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் மகுடம் சூட்டிக் கொண்டமைக்கும், கலை இலக்கிய ஆளுமையின் ஊற்றுக்கண் பொங்கிப் பிரவாகித்து திசைதோறும் பரவுவதற்கும், அவர்தம் தேடலும் தெளிவுமே காரணமாகும்.

தனித்துவமான சிந்தனையும், உயரிய நோக்கும் யார்க்கும் அஞ்சாதா ஞானச்செருக்கும் ஐயா அவர்களை தமிழுலகு அணிசெய்யும் காப்புக்களாகும். தேடற்கரிய அருட்கொடையாய் அவர் வாழ்வும், வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட இலக்கிய ஊற்றுக்கண்ணும் பீறிப் பிரவாகித்து ஈழத்தமிழனின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

"உலகப் பந்தில் அகளங்கன்" எனும் அதிசய நாமம் தமிழ் குடியின் அடையாளப் புள்ளியாய் ஆராதிக்கப்பட, இவர் 1953ஆம் ஆண்டு மார்கழி மாதம் நான்காம் திகதி பம்பைமடுப் பகுதியில் வாழ்ந்த நாகலிங்கம் நல்லம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் தர்மராஜா என்பதாகும்.

இவர் ஆரம்பக் கல்வியை பம்பைமடு அரசினர் தமிழக் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலும், உயர் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் பயின்று 1975 இல் யாழ் பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகி, கணித புள்ளி விபரவியல் நெறியை பயின்றார்.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்திலேயே இவரது கலை இலக்கிய முயற்சி வேர்கொள்ளத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து 1981ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக பொருளியல் பட்டதாரியாகிய பூலோகசிங்கம் பூரணேஸ்வரியுடன் திருமணம் நடந்தேறியது. அதன் பின் 1984இல் மலைநாட்டில் தொடங்கிய இவரது ஆசிரியப்பணி 2009 ஆம் ஆண்டு ஓய்வு பெறும் வரை மாணவர் சமுதாயத்திற்கு கணிதத்துறையோடு, தமிழ் இலக்கியப் பற்றையும் ஊட்டி வளர்க்க வழியமைத்தது எனலாம்.

கருத்தாழம் மிக்க விடயங்களை கவனயீர்ப்புடன் எழுத்தில் வடித்து, கவிதை, சிறுகதை, நாடகம், நாவல் என பல்வேறு வடிவங்களில் பல்சுவை ததும்ப ஆக்கி அளித்துள்ள ஐயா தமிழுலகு வியந்து போற்றுதற்குரியவர்.
தமிழ்ப் பாரம்பரியங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் போற்றிப் பேணிப் பாதுகாத்து, அதன்வழி தான் நடந்து இளையவர்களையும், இலக்கிய ஆர்வலர்களையும் தம்வசம் ஈர்த்துக்கொண்ட ஐயா, கலை இலக்கிய நண்பர்கள் வட்ட செயற்பாடுகளூடாக ஆற்றி வருகின்ற பணி அளப்பரியது.

க.இ.ந.வட்டம் 1997 இல் இருந்து பல்வேறு சமூக, கலை இலக்கிய பணிகளை ஆற்றி வருவது அனைவரும் அறிந்த ஒன்றே. மாதந்தோறும் பௌர்ணமி நாளில் இலக்கிய ஆர்வலர்கள் பயன்கொள்ளும் வகையில் மாறுபட்ட கருத்தாடல்களை நிகழ்த்தியும், ஆண்டு நிறைவில் "மாருதம்" எனும் பல்சுவை இலக்கியச் சஞ்சிகையை வெளியிட்டும் பெருமிதம் கொள்கிறது.

அவ்வகையில் வட்டத்தின் தலைவராகவும், மாருதம் சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவராகவும் திகழ்கின்ற அகளங்கன் ஐயா அவர்களை இளந்தலைமுறையினருக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் எனில் மிகையாகாது.

"சமூக, சமய விழுமியங்களை கட்டிக்காக்க முனைகின்ற ஐயா அவர்கள் இளைஞர்களிடத்தே தமிழ் பாரம்பரியங்களை கடத்துவதன் ஊடாக தமிழ்ப்பண்பாட்டையும் பாரம்பரியங்களையும் இனிவரும் காலங்கள் இழந்து விடாமல் தக்க வைத்துக் கொள்ளலாம்", என்ற உறுதிப்பாடு கொண்டவர். அதற்கு முத்தாப்பாய் எந்த சமய விழாக்களுக்கு சென்றாலும் வேஷ்டி, சால்வை அணிந்து செல்வதும், நமது சமயப் பாரம்பரியங்களை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துச் சொல்வதும்,

"நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே? எனும் வரிகளை
நினைக்கத் தோன்றுகிறது."

இவரது அயராத உழைப்பும், இலக்கியக் காதலும், தமிழுலகில் தடம் பதிக்க தக்க காரணங்களாயினும் இவர்தம் முழுமைக்கும் இலக்கியச் செழுமைக்கும் "வள்ளுவனுக்கேற்ற வாசுகியாய்" இவர் பாரியாரின் பணி அளவிடற்கரியது.

இற்றைவரை நாற்பதிற்கு மேற்பட்ட நூல்களை எழுதியும், சமய நிகழ்வுகள், கலை நிகழ்வுகளில் தலைமைதாங்கி சொற்பொழிவுகளை ஆற்றியும், கலை இலக்கிய நிகழ்வுகளில் கவியரங்கத் தலைவராகவும், விவாத மேடைகளில் பட்டி மண்டபத் தலைவராகவும், பல்துறையிலும் பணியாற்றிய பெருமை இவரையே சாரும்.

"செல்" "வா" என்று ஆணையிடாய்" என்ற அஞ்சலிக்கவிதையோடு தொடங்கிய இவரது இலக்கியப் பணி மணிவிழா நாளில் வெளியிட்டு வைக்கப்பட்ட மணிவிழா மலர், "முற்றத்துக் கரடி" (சிறுகதைத்தொகுப்பு), வன்னிப் பிரதேச வயற்பண்பாடு (ஆய்வுநூல்) வரை நீள்கிறது.

ஐயா அவர்கள் இலக்கியத் துறையில் ஆற்றி வருகின்ற சேவைக்காக காவியமாமணி, தமிழ்மணி, கவிமாமணி, வாகீசகலாநிதி, செஞ்சொற்செல்வர், வித்தியாசுரபி, செந்தமிழ்க்கொண்டல், தமிழியல் வித்தகர், கலாநிதி போன்ற பல்வேறு பட்டங்களை பெற்றுள்ளார். அன்றில் பறவைகள் வானொலி நாடகங்களுக்காக 1992 இல் தேசிய சாகித்திய மண்டல பரிசு, இலக்கிய நாடகங்களுக்காக 1994 இல் வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய மண்டல பரிசு, அகளங்கன் கவிதைகளுக்காக 1996இல் வடக்கு கிழக்கு மாகாண சாகித்தியமண்டல பரிசு, வேரும் விழுதும், பத்தினித்தெய்வம் நாட்டிய நாடகம் என்பவற்றுக்காக 2008ல் வடமாகாண சாகித்திய மண்டலப்பரிசுகளையும், கங்கையின் மைந்தன் நாடக நூலுக்காக இலங்கையிலும் தமிழகத்திலும் பல பரிசில்களையும், அலைக்குமிழ் நாவலுக்காக பல பரிசுகளையும் பெற்றுள்ளார்.

சின்னஞ்சிறிய சிறகுகள் குழந்தைப் பாடலுக்காக 2012இல் தேசிய சாகித்திய மண்டல பரிசில்களையும், பலமுறை சிறந்த இலக்கிய நூல் பரிசுகள், தமிழியல் விருதுகள் போன்றவற்றோடு 2000ம் ஆண்டில் ஆளுநர் விருதும், கடந்த வருடம் 29வது கலாபூசணம் விருதுவழங்கல் விழாவில் கலாபூசணம் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை பாராட்டுக்குரியது.

மன்னார் அறநெறிப்பாடசாலைகளின் ஒன்றியம் இவருக்கு நாவலர் விருது வழங்கிக் கௌரவித்தது, யாழ் இலக்கிய வட்டம் முத்தமிழறிஞர் சொக்கன் விருது, கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரைவிருது, ஆகியவற்றை வழங்கிக் கௌரவித்தது. இந்திய புதுச்சேரி மாநில குழந்தைகள் கலை இலக்கிய வளர்ச்சிக்கழகம் இவரது பணிகளைப் பாராட்டி "செம்பணிச்சிகரம்" பட்டம் வழங்கிக் கௌரவித்தது. (17.12.2014)

“அகவை 60 கண்ட தமிழறிஞர் அகளங்கன் ஐயா அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழுலகிற்கு சேவையாற்ற வேண்டும். ஐயாவும் அவர் குடும்பத்தவர்களும் பலகாலம் சேமமாக வாழவேண்டும். என்பதே எமது பேரவா. வன்னித்தாய் ஈன்ற மூத்த தமிழறிஞரின் தமிழ்த்தொண்டுக்கு தலைவணங்கி அறிஞர் பெருமக்களும் கலை இலக்கிய ஆர்வலர்களும் 20.07.2014 அன்று காலை 9.00 மணிக்கு சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் மணிவிழா எடுத்தனர். கலைஞர் திருமிகு.சி.தில்லை நடராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் அறிஞர் பெருமக்களும் கலைஞர்களும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்புப்படுத்தினர்.

“வளர்க தமிழ், வாழ்க தமிழறிஞர் அகளங்கன்”




1.மணிவிழா

2.மாவட்ட இலக்கிய விழாவில் கௌரவிப்பு.
கவிஞர் மாணிக்கம் ஜெகன், கவிஞர் த.ஐங்கரன், கலாபூஷணம் வை.செ.தேவராஜா ஆகியோருடன்



### வட்டத்தின் "ஆடற்கலைச்செல்வர்" விருது பெறும்

# நிருத்திய வாணி
# திருமதி சூரிய யாழினி வீரசிங்கம்



வவுனியா மாவட்டத்தினை பரத நாட்டியத்துறை மூலம் உலக அரங்குக்கு எடுத்துச் சென்றவர் திருமதி சூரியயாழினி வீரசிங்கம் என்றால் அது வெறும் புகழ்ச்சியில்லை.

1990 களின் ஆரம்ப காலத்தில் திருமதி.துவாரகா கேதீஸ்வரன் அவர்களுடன் இணைந்து அவரது மாணவியாக வவுனியாவில் தனது நடனப் பணியைத் தொடங்கிய இவர் இன்று யாவரும் வியந்து நிமிர்ந்து பார்க்கும் நிலைக்குத் தானும் உயர்ந்து வவுனியா மண்ணையும் உயர்த்தியிருக்கிறார்.

பல மாணவர்கள், வட இலங்கை சங்கீத சபையின் பரதகலா வித்தகர் பட்டம் பெறவும், பலமாணவர்கள் நுண்கலைமாணி, மற்றும் நுண்கலை முதுமாணி பட்டங்கள் பெறவும் வழிவகுத்த இவரது சேவையால் இன்று வவுனியாவில் இவரது மாணவர்களே பெருமளவுக்கு நடன ஆசிரியர்களாகவும், நடனப் பள்ளிகளை நடாத்துபவர்களாகவும் பிரகாசிக்கின்றனர்.

நாட்டிய எழில், நிருத்திய வாணி, நாட்டியக் கலா ரத்தினம், நாட்டியரத்னா, பரதசிரோமணி, முத்தமிழ்க்கலைச்சுடர் எனப் பல கௌரவப் பட்டங்களை பல நிறுவனங்களிடமிருந்து பெற்ற சூரியயாழினி அவர்கள் ஜப்பான் ஸ்ரீலங்கா நட்புறவுக் கலாசார அமைப்பினால் (Japan Sri Lanka Friendship Culture Foundation) புங்கா விருது (Bunka Award - 2006) பெற்ற இந்த மண்ணின் ஒரே சாதனையாளர் ஆவார்.

தான் அமைத்த நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மூலம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட நிகழச்சிகளை இலங்கையின் பல பாகங்களிலும் நடாத்தி பெரும் பாராட்டுதல்களைப் பெற்றவர்.

வவுனியாவில் முதல் பரத நாட்டிய அரங்கேற்றத்தை நிகழ்த்திய பெருமையோடு ஒன்பது (9) மாணவர்களின் நாட்டிய அரங்கேற்றங்களை நெறிப்படுத்தி, நட்டுவாங்கம் செய்து நிகழ்த்திக் காட்டியவர்.

அகில இலங்கைத் தமிழ்த்தினப்போட்டி நிகழ்வில் வடமாகாண மட்டத்தில் மூன்று தடவைகள் தொடர்ச்சியாக முதலிடத்தை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் மூலம் பெற்றுக் கொடுத்து (2007, 2008, 2009) வீரமணி ஐயர் விருது பெற்றவர்.

தானே நேரடியாக தயாரித்த நாட்டிய நாடகங்கள் மூலம் தொடர்ச்சியாக இரண்டுதடவைகள் முதலிடத்தையும் அடுத்த ஆண்டு இரண்டாம் இடத்தையும் தேசிய மட்டத் தமிழ்தினப் போட்டியில் தான் கற்பித்த வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு பெற்றுக் கொடுத்தவர் (2007, 2008, 2009)

அத்தோடு தனது வழிகாட்டல் மூலம் அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு நாட்டிய நாடகத்தில் இரண்டாம் இடத்தையும், (2012) இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்திற்கு முதலாம் இடத்தையும் பெற்றுக் கொடுத்தவர் (2013)

தமிழறிஞர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் பல நாட்டிய நாடகங்களையும் பாடல்களையும், நாட்டிய நிகழ்ச்சிகளையும் புத்தாக்கங்களாக

வழங்கியதோடு ஈழத்தமிழருக்கான ஒரு நடனக்கலையை உருவாக்க முயற்சித்துக் கொண்டிருப்பவர்.

நாட்டிய நாடகத்துறையில் வவுனியா மாவட்டத்தை தேசிய மட்டத்தில் முதலிடத்திற்கு உயர்த்திய பெருமைக்குரியவர் மட்டுமல்ல தனி நடனம், குழு நடனம் முதலானவற்றிலும் தமிழ் மொழித் தினப் போட்டியில் தேசிய மட்டச் சாதனைகளை நிகழ்த்திக் காட்டியவர்.

தேசியமட்டத்தில் கலாசார அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் உட்பட பல அமைச்சுகள், திணைக்களங்கள், அமைப்புக்கள் நடாத்திய பல்வேறு போட்டிகளிலும் தனது மாணவர்களை முதலிடங்களையும் சிறப்பிடங்களையும் ஈட்டச் செய்தவர்.

சக்தி தொலைக்காட்சி, ரூபவாகினி முதலான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தனது மாணவர்களின் நிகழ்ச்சிகளையும் வழங்க ஏற்பாடு செய்து மாணவர்களை உற்சாகப்படுத்தியதோடு நாடு முழுவதும் வவுனியா மாவட்டத்தின் பெருமையையும் காணச் செய்தவர்.

யாழ்ப்பாணம் சித்தன் கேணியில் 22.09.1970 இல் திருதிருமதி.குலசூரியன், சிவனேஸ்வரி தம்பதிகளின் மகளாகப் பிறந்த இவர் தற்போது வவுனியா கோவிற்குளத்தில் வாழ்ந்து வருகிறார். நடனத்துறைக்கான ஆசிரிய ஆலோசகராக வவுனியா தெற்கு வலயத்தில் பணி புரியும் இவர், பரத கலாவித்தகர், நுண்கலைமாணி (B.F.A.யாழ்.பல்கலைக்கழகம்) முதுகலைமணி (M.F.A.திருச்சி.பாரதிதாசன் பல்கலைக்கழகம்) பட்ட மேற் கல்வி டிப்ளோமா (P.G.D.E - வெளிவாரி, கொழும்புப் பல்கலைக் கழகம்) என சிறந்த கல்வித் தகைமைகள் கொண்டவர்.

பயிற்றப்பட்ட ஆசிரியையாக (N.I.E) பதவியில் சேர்ந்து தன் முயற்சியில் முன்னேறியவர். புல்லாங்குழல் வாசிக்கவும், பாட்டுப் பாடவும் வல்லவர். தேசிய கலாசார மத்திய நிலையத்தின் பிரதீபா என்னும் உயர் விருது பெற்றவர். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகப் பணி புரிந்தவர். இலண்டன் ஜெயாஞ்சலி நிறுவனத்துடன் இணைந்து சர்வதேச ரீதியில் சர்வதேசக் கலைஞர்களுடன் இணைந்து கலை நிகழ்வுகளை ஆற்றுகை செய்தவர்.

2014 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் இயங்கும் இந்தியத் துணைத் தூதர் அகத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் நர்த்தனாஞ்சலி என்ற மாபெரும் நாட்டிய நிகழ்வை நடாத்தி சகலரதும் பெரும் பாராட்டுக்களைப் பெற்றவர்.

வவுனியா மாவட்டக் கலைஞர்கள் பலருக்கு தனது நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி ஆண்டு விழாக்களில் பட்டம் வழங்கிக் கௌரவித்து சிறப்புச் செய்தவர். ஏனைய மாவட்டங்களிலும் தனது பரதக் கலைச் சேவைமூலம் பாராட்டுக்களையும் கௌரவங்களையும் பெற்றவர்.

இன்னும் பல சிறப்புக்களுக்கு உரியவரான திருமதி சூரிய யாழினி வீரசிங்கம் அவர்களுக்கு அவரது நடனக் கலைச் சேவையைப் பாராட்டி வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் 'ஆடற்கலைச்செல்வர்' பட்டம் வழங்கிப் பெருமை பெறுகிறது.

ஆர்

சிறுகதை

# வேலிகள்?

- கோகிலா -

நடந்தவற்றை பொலிஸார் எழிலிடம் இருந்து வாக்கு மூலமாக பெற்றனர். எழில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். எழிலின் தந்தை தலைமறைவானார். இரண்டு நாட்களின் பின்னர் வலிகாமம் பகுதியில் வைத்து யாழ் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

◆◆◆◆◆

பன்னிரண்டே வயதான எழில் என்ன செய்வாள். தன் தம்பிக்கோ தங்கைக்கோ சொல்ல முடியாத நிலை. அவளின் அன்னையிடம் கூறினால் எங்கு தன்னை எரித்தே கொன்று விடுவாளோ என்ற அச்சத்தில் முள்ளிடை அகப்பட்ட கோழிக் குஞ்சைப் போல் சிக்கித்தவித்தாள்.

அன்று மாலை எழிலின் அன்னை போன் செய்தாள். வீட்டிற்கு மறுமுனையில் வாயில்லாப் பூச்சிபோல் எழில்.

“அம்மா எழில் எப்பிடி இருக்கிறாய் தங்கம்? சாப்பிட்டாயா பின்ன? கொப்பர் எங்க? உன்ன தம்பிய தங்கச்சிய எல்லாம் நல்லா பாத்துக் கொள்றார் தானே? “என்று அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டாள். இதற்குப் பிறகும் பொறுக்க முடியாத எழில் கண்ணீர் மல்க அம்மா என்னால் இதற்குப் பிறகும் முடியாது .... “என கூறி முடிப்பதற்குள் போனைப் பறித்தான் அந்தக்கயவன்.

அவனைக் கண்டதும் அதிர்ச்சியில் உறைந்து நின்றாள் எழில். சிறிதும் தாமதிமின்றி ஓங்கி அறைந்தான். புயலில் அகப்பட்ட பூப்போல விழுந்தாள். ஓடிப்போய் மண்ணெண்ணையைக் கொண்டு வந்து எழிலின் மீது ஊற்றினான். எழில் உயிருக்குப் பயந்த சிறுமியாயிற்றே. காலில் விழுந்து “என்னை கொண்டுடாதீங்க அப்பா! என்று கதறி அழுதாள். இதுவே கடைசியாக இருக்கட்டும் இனி இப்படி செய்தால் எல்லோரையும் சேர்த்துக் கொலை செய்து விடுவேன், என்று எச்சரித்து தொலைபேசியையும் பறித்து எடுத்து விட்டு வெளியேறினான்.

எழிலின் தாயோ ஏன் தொடர்பு துண்டிக்கப்பட்டது? எழில் ஏன் அழுதாள் என்ற கேள்விக்கு விடை தெரியாது, பதறிப்போய் நின்றாள். இரண்டு நாட்கள் கடந்தன. நினைவுகளும் அவிழ்ந்தன.

◆◆◆◆◆

வயலும் வரப்பும் நிறைந்து வனப்புடன் திகழும் யாழ்நகரின் அச்சுவேலி பிரதேசம். அங்கு ஓர் ஆலமரத்தை அடுத்துள்ள வேம்பினை வேலியாகக் கொண்ட, தென்னைகள் அணிவகுத்து நிற்கும் அழகிய காணி, கிடுகால் வேயப்பட்டு, செங்களியினால் சுவர்கள் தீட்டப்பட்ட ஒற்றைக் குடிசை, தந்தை, தாய் எழிலரசி, தம்பி, தங்கை என ஐவரைக் கொண்ட ஓர் அழகிய குடும்பம் அது. எழிலின் தந்தை மேசன் வேலை செய்பவர். தாய் வீட்டுப்பெண்.

எழிலரசி பெயருக்கேற்றாற் போல் விற்புருவம், கயல்விழி, கொவ்வைவாய், கார் மேகக் கூந்தல் என்று பன்னிரண்டு வயதிற்கு மிஞ்சிய தோற்றம் கொண்ட சிறுமி. எழில் தரம் ஏழில் கல்வி கற்றாள். தினமும் பாடசாலைக்குத் தன் தம்பி, தங்கையுடன் நடந்தே போய் வருவாள். எழிலின் வகுப்பாசிரியை சோபாவுக்கு அவளின் மீது அலாதிப்பிரியம். காரணம் துடுக்குத்தனம் மிக்க அவளின் செயல்கள், ஏனையோருடன் அன்பாகவும் நட்பாகவும், பழகும் விதம், பாடத்தினிடையிடையே அவள் கேட்கும் ஆராய்ச்சியுணர்வு கொண்ட கேள்விகள், ஆக்க பூர்வமான செயல்கள் என்பவற்றைக் கூறலாம்.

நன்றாக படித்து சிறந்த வைத்தியராவதே எழிலரசியின் இலட்சியமாக இருந்தது. ஆனால் அவளது வாழ்க்கையில் அடித்த புயலினால் அனைத்தும் தடம்புரளும் என்று அவள் சிறிதும் நினைத்திருக்க வில்லை.

நாளாந்த ஊதியம் பெறும் எழிலின் தந்தை தினமும் குடித்து விட்டு வீட்டுக்கு வருவதை வழக்கமாக்கிக் கொண்டான். வழமையாக வந்து உண்டு விட்டு உறங்கி விடுவான். காலையில் போதை தெளிந்ததும் வீட்டுக்கான பொருட்களை வாங்கித் தந்து விட்டு அல்லது அதற்கான பணத்தினை வழங்கி விட்டு வேலைக்கு செல்பவன், நாட்கள் போகப் போக வேலை செய்த முழுப்பணத்தையும் குடிப்பதற்கு செலவு செய்யும் அளவிற்கு போதைக்கு அடிமையாகி வீட்டில் சமைப்பதற்கு பொருட்கள் வாங்குவதோ பிள்ளைகளின் கல்வி விடயங்களை கவனிக்க பணம் வழங்குவதையோ கைவிட்டு விட்டான். வேலைக்குப் போய் பத்து பதினொரு மணியளவில் வீட்டுற்கு வருவான். சமைப்பதற்கு பொருட்கள் வேண்டித் தரக்கேட்டால் அடிப்பான். நாளுக்கு நாள் அவனின் அட்டகாசங்கள் தலைவிரித்தாடியது.

ஒரு நாள் எழிலின் வீட்டுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தரகர் ஒருவன் வந்தான். "மாதம் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அடிப்படைச் சம்பளம். இது தவிர நீங்கள் வீட்டுக்கு வரும் போது உங்கள் வீட்டிற்கான மின் உபகரணங்கள் இலவசமாக அவர்களே தருவார்கள். நல்ல உடைகள். மூன்று வேளை உணவு, உங்கள் பிள்ளைகளை நினைத்தது போல் படிக்க வைத்து நினைத்தது போல வாழ வைக்கலாம். நன்றாக யோசியுங்கள். ஒன்றும் அவசரம் இல்லை. இரவு முழுவதும் யோசித்து காலை இந்த நம்பருக்கு போன் செய்து கூறுங்கள்'' என்று தனது விசிட்டிங் காட்டை நீட்டினான். எழிலின் தாய் தயக்கத்துடன் பெற்றாள்.

இரவு உண்பதற்கு உணவில்லை. கிடந்த கொஞ்ச அரிசியைப் பொங்கி, தனது பிள்ளைகள் மூவருக்கும் கொடுத்து உறங்கச் செய்து பாயிலே உறக்கமின்றி உருண்டு படுத்து யோசித்துக் கொண்டிருந்தாள். "நான் வெளிநாட்டுக்கு போனால் என்ரை பிள்ளைகள் நினைச்ச மாதிரி படிக்குங்கள், மூன்று வேளை முழுமையாக சாப்பிடுங்கள், நல்லா உடுத்துங்கள். நான் போறதுதான் சரி, ஐயோ! எழிலரசிக்கு 12 வயதாகிருச்சே அவள் பெரிய பிள்ளையானால் என்ர "பிள்ளைய யார் பாப்பர். என்ரை மூத்த பிள்ளை அவள், அந்த நேரத்திலஅவள் பக்கத்துல நான் இல்லையெண்டா என்ன செய்வாள்? எதென்றாலும் நான் பக்கத்துல இருந்து அவளை கவனிக்கிறமாதிரி வராது. போறது பற்றி பிறகு யோசிப்பம். இந்த நேரத்தில எழில விட்டு போறது சரியில்லை'' என்று முடிவெடுத்து ஒருவாறாக கண்ணயர்கையில் தடதடவென கதவினை ஓங்கி இடிப்பது போன்று ஒரு சத்தம் கேட்டது. திடுக்கிட்டு எழும்பினாள். மெதுவாக போய் கதவினை திறந்தாள். அவிழ்ந்தும் அவிழாத சரம் ஒரு கையிலே. அரைப்பங்கு குடித்த சாராயப் போத்தல் மறுகையிலே ஏந்திய வண்ணம் தலைகீழாய் நின்ற தன் கணவனை கண்டு நெஞ்சுடைந்தாள். "எங்கயப்பா சைக்கிள்" என்றாள் "அத வித்துட்டன்" என்று பதிலளித்தான் போதை நிரம்பிய குரலில் "சாப்பாட கொண்டாடி" என்று கீழே அமர்ந்தான். "இருந்த சாப்பாடெல்லாம் பிள்ளைகளுக்கு குடுத்துட்டன். அதுகளே அரை வயிறு கால் வயிறுக்குதான் சாப்புட்டுதுகள். நீங்க வயிறு நிரம்ப குடிச்சுவிட்டு வந்து சாப்பாடு கேக்குறியளே. உங்களுக்கே இது நல்லா இருக்கா'' என்று துக்கம் தழும்பிய குரலில் கேட்க, மதம் கொண்ட யானை போல் தன் பலம் கொண்ட வரைக்கும் ஓங்கி அடித்தான். சுழன்று விழுந்தாள். சத்தம் கேட்டதில் எழிலும், தம்பியும், தங்கையும் விழித்துக் கொண்டனர்.

"அம்மா.... அம்மா...." என்று அழுதனர் "நானாடி உன்ன இதுகள எல்லாம் பெத்துவிடச்" சொன்னன், பெத்து விட்ட நீ கவனி இதுகளை, எனக்கொண்டும் இல்ல"

என்று அலறினான். கண்ணீரும் கம்பலையுமாய் வெறுப்பும், வேதனையும் ஆக அன்று இரவு முடிந்து பொழுது புலர்ந்தது.

எழிலரசி, அவனின் தம்பி தங்கையர் ஒருவரும் பாடசாலை செல்லவில்லை. எழிலின் அம்மா வெளிநாட்டு வேலை வாய்ப்புகாரருக்கு போன் செய்து தன்னுடைய பிள்ளைகளின் நலனிற்காக சவுதி அரேபியாவில் உள்ள வீடொன்றிற்கு பணிப்பெண்ணாக செல்வதற்கு சம்மதம் தெரிவித்தாள். பிள்ளைகளை கோப்பாயில் உள்ள தனது அம்மாவின் வீட்டில் விட்டு விட்டு தான் வெளிநாடு செல்வதெனவும் முடிவு செய்தாள் பத்து நாட்களில் விசா மற்றும் அனைத்து விடயங்களும் நிறைவுற்று இரண்டு தினங்களில் சவுதி அரேபியா செல்வதென முடிவானது.

♦ ♦ ♦ ♦ ♦

இதற்கிடையில் எழிலின் தந்தைக்கு அவளின் தாய் வெளிநாட்டிற்கு பணிப்பெண்ணாக செல்லும் செய்தி தெரிய வந்தது. அவன் ஆத்திரம் கொண்டதோடு அமைதியாக சிறிது நேரம் யோசித்தான். குடிபோதைக்கு அடிமையான அவன் இருந்த இடத்தில் இருந்து கொண்டு மாதாமாதம் பணம் பெறும் வழியை யோசித்தான். அது மனைவி வெளிநாடு சென்றால் தான் நடக்கும். அதுவும் பிள்ளைகள் தன்னுடன் இருந்தால் மட்டுமே நடக்கும் என்று ஒரு திட்டம் தீட்டினான்.

விறுவிறு என வீடு நோக்கி நடந்தான். மனைவியை அழைத்தான் அன்போடு. அவளோ ஆச்சயரியத்தோடு அமைதியின் பின் புயல் வருமோ என்ற அச்சத்தோடு வந்து நின்றாள்.

“நீ வெளிநாடு போகப் போறாய் எண்டு ஊர் சொல்லி தெரிஞ்சிக்க வேண்டிய நிலையாய் போயிட்டுதில்ல, பரவாயில்ல பரவாயில்ல நான் உனக்கு என்ன குற வெச்சன் என்டு இப்ப நீ உழைக்க கிளம்பிட்ட?’ என்றான். அவள் மௌனம் சாதித்தாள், பதில் எதுவும் கூறவில்லை.

“சரி நீ ஏதோ குடும்ப நல்லதுக்கு போறாய், நான் தடுக்கேல்ல, ஆனால் என்ற பிள்ளையள ஏன் என்னட்ட இருந்து பிரிக்கிறா?’’ என்று முதலைக் கண்ணீர் சிந்தி பாசாங்கு செய்தான்.

♦ ♦ ♦ ♦ ♦

“பெண் புத்தி பின் புத்தி என்பார்கள். அவன் சிந்திய கண்ணீரையும் பாசாங்கையும் கண்டு மனமிளகினாள். ஐயே! அப்பிடியெல்லாம் இல்லை, பிள்ளைகள் உங்களோட இருக்கிறதும் பாதுகாப்புத்தான். நான் நம்ம குடும்பத்துக்காகத்தான் போறேன். ஒரு வருசத்துல வந்துருவன். நமக்கெண்டு வீடு கட்டணும் பிள்ளைகள் நல்லாக்கோணும் இதுக்கெல்லாம் நான் ஒருவருசம் போய் வேலை செய்தா காணும்’’ என்றாள். நடக்கப்போவது எதையும் அறியாது. அவள் சவுதி செல்லும் நாள் வந்தது. காலத்தின் கட்டாயத்தில் தன் பிள்ளைகளை விட்டுப்பிரிய மனமின்றி புறப்பட்டாள். அல்லும் பகலும் நேரம்பாராது உடலை வருத்தி உழைத்து மாதம், மாதம் பணம் அனுப்பினாள். தன் பிள்ளைகள் நன்றாக படிக்கிறார்கள், மூன்று வேளை நன்றாக உண்ணுகின்றார்கள், என்பது மட்டுமே அவளின் மகிழ்வாக இருந்தது. ஆனால் நினைத்ததொன்று நடந்ததொன்று. அல்லும் பகலும் அவள் உழைத்ததனைத்தும் அர்த்தமற்றது என அவள் சிறிதும் நினைத்திருக்கவில்லை.

♦ ♦ ♦ ♦ ♦

தம்பியும், தங்கையும் பாடசாலை சென்றார்கள் ஆனால் எழிலின்கல்விக்கு தடைவிதிக்கப்பட்டது தினமும் வீட்டு வேலைகள் அனைத்தும் செய்து, சமைத்து தனது தம்பி, தங்கையரை பாடசாலைக்கு அனுப்பி வைப்பது, அவளின்

கடமையாக்கப்பட்டது. அவள் தன் தம்பி, தங்கையாவது கற்கின்றனரே என்பதை மட்டும் எண்ணி சந்தோசப்படுவாள்.

தந்தையோ இப்பொழுது தனிக்காட்டு ராஜா போல் சுதந்திரமாய் திரிந்தான். காலை எழுந்தவுடன் வேலைக்குச் செல்பவன் போல் புறப்பட்டு இரவு 10 மணிக்கு குடிபோதையில் தலைகீழாய் வந்து கதவைத்தட்டுவான். அவன் குடித்துக் கும்மாளம் அடிக்க மாதாமாதம் பணம், ஆனால் பிள்ளைகளுக்கு உண்ணுவதற்கு ஏதோ ஓரிரண்டு பொருட்கள், நினைத்தால் வாங்கி வருவான். எழில் பாடசாலையில் இருந்து நிறுத்தப்பட்டதையோ? அவனின் போதைத் தாண்டவத்தினையோ யாரிடமும் குறிப்பாக தாயிடம் சொல்லக்கூடாது என்றும், சொன்னால் வீட்டோடு பூட்டி தீவைப்பேன் என்றும் எச்சரித்தான்.

நாளுக்கு நாள் அவனின் வெறித்தாண்டவம் அதிகரிக்கத் தொடங்கியது. ஒரு நாள் சரியாக பண்ணிரண்டு மணியிருக்கும். அதே சத்தம் தடதடவென கேட்டது. உடல் எங்கும் நடுக்கமுற பயத்துடன் கதவினை திறந்தாள். எதிரில் நிற்பது தெரியாத அளவிற்கு கண்கள் சிவக்க குடித்திருந்தான். வெறிகொண்டவன் போன்று வீட்டில் காலடி வைத்தான். தன் உயிரால் உருவானவள் தான் பெற்ற மகளவள், என்பதை மறந்து தன் இச்சைக்கு எழிலை ஆளாக்கினான் அந்தக் கயவன். தன் தோட்டத்து ரோஜாவை தானே முகர்ந்து கசக்கி எறிந்த கதையானது எழிலின் நிலைமை. ஒன்றல்ல இரண்டல்ல பல வாரங்கள், மாதங்கள் எனத் தொடர்ந்தது அந்தக் கயவனின் காமவெறி.

“பொம்மைக்கு சேலை கட்டினால் கூட
அதைக் காமப் பார்வையில் நோக்கும்
கயவர் வாழும் பூமியில்...”

♦♦♦♦♦

கடந்த சில மாதங்களாக பாடசாலைக்கு ஏன் எழிலரசி வரவில்லை? என்ற கேள்வி ஆசிரியை சோபாவை உந்த, எழிலின் தம்பி, தங்கையை அழைத்து விசாரித்தபோது எழிலின் தாய் வெளிநாடு சென்று விட்டதாகவும், வீட்டின் வேலைகளைச் செய்வதற்கு ஆளில்ல, என்ற காரணத்தால் எழில் பாடசாலை வராமல் வீட்டில் நின்று வேலைகள் செய்கிறார் என்ற செய்தி மட்டும் ஆசிரியை சோபாவுக்கு கிடைக்கின்றது. சிறப்பாக கற்கும் எழில் பாடசாலை வரமாட்டாள் என்ற செய்தி ஆசிரியை சோபாவுக்கு கவலையளித்தது. அவளை மீண்டும் பாடசாலைக்கு வரச் செய்ய வேண்டும். என்று முடிவெடுத்தார்.

பாடசாலை முடிவுற்றதும், எழிலின் தம்பி, தங்கையருடன் எழிலின் வீடு நோக்கி நடந்தார். தலைவிரி கோலமாக கன்னத்தில் அறைந்த தழும்புகளுடன் இருந்த எழிலரசியை கண்டு அதிர்ந்து நின்றார். தனது ஆசிரியையைக் கண்ட எழில் தனக்கு விடிவு கிடைக்கப் போகின்றது என்று கதறி அழுது சோபாவை கட்டிப்பிடித்தாள்.

அந்தப்பிஞ்சு உள்ளம் ஏன் இவ்வாறு கலங்குகிறது என்று தெரியாமல் சோபா மெல்ல நிலத்தில் அமர்த்தினார்.

“என்னம்மா நடந்தது? ஏன் ஸ்கூல் வாறதில்லை” என்று வினாவினார். எழிலரசி சோபாவின் மடியில் கிடந்து அழுதாள். சிறிது நிதானித்து தனக்கு நடந்த அறியாயங்களை அழுது கொண்டே கூறினாள். வெளியில் சொன்னால் தன்னை கொலை செல்வதாக கூறி மிரட்டியதையும் கூறினார்.

நடந்தவற்றைக் கேட்ட சோபாவுக்கு நெஞ்சு வெடிப்பது போல் இருந்தது. “ஐந்தறிவு கொண்ட மிருகங்கள் தான், தமக்குள் உறவுமுறை பாராது, கூடிக்கொள்ளும். ஆறறிவு கொண்ட மனிதன் இதைச் செய்கின்றானென்றால் அவன் பூமியில் பிறந்த

அரக்கன் என்றே கூற வேண்டும், என்று தனக்குள்ளேயே நொந்து கொண்டார். என்ன செய்வதென்று புரியாமல் தவித்தார், விரைவாக செயற்பட்டார் எழிலையும், அவளது தம்பி, தங்கையையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையத்திற்குச் சென்றார்.

♦♦♦♦♦

எழிலரசி மற்றும் அவளது சகோதரர்கள் அநாதரவாக நிற்பதையும், எழிலிற்கு ஏற்பட்ட கொடுமைகளும் பொலிஸார் மூலம் எழிலின் தாயாருக்கு அறிவிக்கப்பட்டது. தனது பிள்ளைகளுக்கு நேர்ந்தவற்றை எண்ணி மனநிலை பாதிக்கப்பட்டார் அவர். அதனையடுத்து எழில் மற்றும் அவனது சகோதரர்கள் வவுனியாவில் உள்ள அன்பகம் ஒன்றில் இணைக்கப்பட்டனர். எழிலின் அம்மம்மா அடிக்கடி அவர்களை வந்து பார்த்து செல்வார். இப்பொழுது எழில் பருவமெய்தி விட்டாள். இன்னும் இரண்டு மாதங்களில் எழிலின் தாய் அவளை பார்க்க அனுப்பி வைக்கப்படவுள்ளார். ஆனால் எழிலின் தாய் தனது பிள்ளைகளைக் கூட நினைவில் வைத்திருக்கும் சக்தியை கொண்டிருப்பாரா? அது கேள்விக்குறியே...?



கௌரவிப்பு.திரு.சு.பூபாலசிங்கம் அவர்கள்



கௌரவிப்பு.திருமதி.புவனநாயகி ஐயம்பிள்ளை அவர்கள்

நாடகம்

# கனவு மெய்ப்பட வேண்டும்

- குழந்தை.ம.சண்முகலிங்கம் -

*மேடையில் முன்திரை மூடிக்கிடக்கிறது. பாரதியின் தீராத விளையாட்டுப் பிள்ளை பாடலின் மெட்டு வாத்திய இசையாக ஒலிக்க ஆரம்பித்துப் பின்னர் படிப்படியாக அது தனது தொனியைக் குறைத்துக் கொண்டு ஒலிக்கும் வேளையில், பின்வரும் வார்த்தைகள் உரத்த தொனியில் ஓங்கி அறைகின்றன. பின்வருவோர் அவ்வார்த்தைகளை எறியலாம்.*

வைகை - றோட்டிலை இறங்கினால் ஒரே கரைச்சல்!!!

ரவி (நக்கல் தொனியில்) கரைச்சலோ??? என்ன கரைச்சல்! (சீட்டியடிக்கும் ஒலி கேட்கிறது.)

திரிவேணி - அக்கா! இங்கே பாருங்கோ, இவங்களை!!!

ராஜன் - அதுதானே, எங்களைப் பாருங்கோவன்.

சிலர் - ஆஹா! ஹொஹ்... ஹோ!!... வாவ்! வாவ்!.

யமுனா - செருப்பாலை குடடி! (பல பையன்கள் கூக்காட்டி, சீட்டியடித்து, கைதட்டி ஆரவாரம் செய்யும் ஒலிகள் பல பெண் பிள்ளைகள் போடும் பல்வேறு அவலக்குரல்களும் கேட்கின்றன.)

திரிவேணி - ஐயோ! அம்மா!... ஆ... ஆ... ஆ... (அழுகுரல் கேட்கிறது)

ராகுல் - ஐயோ!, சூட்டி பபா!! அழாதையுங்கோ குஞ்சு!!!

ரவி - அட கண்ணீரும் வருகுது *(தூரத்தே நின்று சின்னப் பையன்கள் சிரிப்பதும் கேட்கிறது.)*

சட்டநாதன் - ஏன் பிள்ளை அழுகிறாய்?

திரிவேணி - றோட்டிலை கரைச்சல் தாங்கேலாது.!!!

வைகை - றோட்டிலை மட்டுமில்லை

அருளானந்தம்- அப்ப?

வைகை - ஒழுங்கையிலை

சுரபி - "ட்டியுஷன்"லை

யமுனா - "ஸ்போட்" சிலை

பவானி - "கேம்" சிலை

காவேரி - "செமினார்"லை

திரிவேணி - வகுப்பிலை

கங்கா - "ட்டவுனிலை!" கடையிலை!

வைகை - "பஸ்"சிலை "ஓ.'.பிசி"லை

திரிவேணி - வீட்டிலையும் தான்!

சங்கரி - அப்ப, நாளையிலை இருந்து ஸ்கூலுக்குப் போகாதை!!

அருள் - ஆர் கரைச்சல் தாறது?

சுரபி - பொடியங்கள் தான். (பையன்கள் பலர் சீட்டியடித்துக் கூக் காட்டும் ஒலிகள்)

யமுனா - சில மனிசங்களுந்தான் - (பையன்கள் கேலியாக ஓ வென்று கத்தும் ஒலி)

பவானி - மாமியின்ர அண்ணா சுரேசின்ர பேரைச் சொல்லி என்னைப் பகிடி பண்ணுகினம்.

சட்டநாதன் - நீ இனி ஸ்கூலுக்குப் போக வேண்டாம், "ட்டியுஷனுக்கும்" போக வேண்டாம்.

காவேரி - ஏன் போகக் கூடாது?

சங்கரி - பொத்து வாயை. சொன்னாச் சொன்னதுதான் - *(முன்திரை மெதுவாக விலகுகிறது. தீராத விளையாட்டுப் பிள்ளை பாடப்படுகிறது. மேடையில் பின்வருவன போன்ற மேலும் பல நிகழ்வுகள் இடம் பெறுகின்றன.)*

1. *தெருவில் சைக்கிளில் செல்லும் பெண்பிள்ளையை பின்னால் வரும் பையன்கள் கேலி, கிண்டல் மூலம் அரியண்டப்படுத்துதல்.*
2. *எதிர்ப்புறமாக வந்து முட்டி மோதி விழுத்துதல்*
3. *முதுகில் அறைந்து, பின்னலை இழுத்துவிட்டுச் செல்லுதல்.*
4. *கடிதமொன்றைத் திணித்துவிட்டுச் செல்ல, சில பெண்பிள்ளைகள்அவளை நக்கலடித்தல்.*
5. *ஆசிரியை ஒருவர் குடை பிடித்து முன் செல்ல பின்னால் வந்த இள வட்டங்கள் கேலி செய்து விட்டு முன் செல்ல மாட்டிக் கொள்ளுதல், எனப் பலதையும் பேசாப் பாவனையாக நிகழ்த்தலாம். கல்விக் கூட அனுபவங்களையும் நிகழ்த்தலாம்.)*

*பாடல் :-*

தீராத விளையாட்டுப் பிள்ளை – கண்ணன் / தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை. / (தீராத) / தின்னப் பழங்கொண்டு தருவான், / பாதிதின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான். / என்னப்பன் என்னையன் என்றால் - அதனை/ எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான். / (தீராத) / பின்னலைப் பின்னின்றிழுப்பான் - தலை / பின்னே திரும்புமுன்னே சென்று மறைவான், / வன்னப் புதுச்சேலை தனிலே – புழுதி / வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான். / (தீராத) / கோளுக்கு மிகவுஞ் சமர்த்தன் -பொய்மை / சூத்திரம் பழிசொல்லக் கூசாச் சழக்கன் / ஆளுக்கிசைந்தபடி பேசித் - தெருவில் / அத்தனை பெண்களையும் ஆகா தடிப்பான் / (தீராத) /

(- பாரதி பாடல் கண்ணன் பாட்டு -)

*பாடல் முடிவுற மேற்படி குழப்படிகளும் முடிந்து மேடை வெறுமையாகி, அதை அடுத்து எட்டுத் திக்கும் நின்று மாணவ, மாணவியர் தத்தம் வீட்டு வாயில்களினால் புறப்பட்டு பதட்டத்தோடு O/L பெறுபேறு பார்க்க அவசரமாகப் புறப்பட்டுப் போகிறார்கள்.*

கங்கா - அப்பா! அம்மா!

ஞானா - (வந்து கொண்டு) என்ன கெங்கா?

கங்கா - O/L றிசல்ட் இண்டைக்கு வருகுதாம். ஸ்கூலுக்குப் போறன்.!

அருள் - (வந்து கொண்டு) பெஸ்ட் ஒ.்.வ் லக்.!

கபிலன் - அக்கா, "எயிட் டீ" இல்லாமல் வீட்டை வரக்கூடா!

கங்கா - (சென்று கொண்டே) போடா!

வைகை - வேணி கெதியா வாரும்!

வேணி - இந்தா வந்திட்டேன்!

இருவரும் - அம்மா, போட்டு வாறோம். (உள்ளிருந்து "ஓம்)"

காவேரி - தம்பி, போடடு வாறேன். (உள்ளிருந்து "ஓமக்கா)"

பவானி - அம்மா, போறேன் (உள்ளிருந்து "நீயும் போறியா?)"

பவானி - அற்புதங்கள் நடக்கலாம் நானும் "பாஸ்" பண்ணலாம்.

சுரபி - போட்டு வாறேனம்மா. (உள்ளிருந்து "கெதியா வந்திடு)"

யமுனா - சுரபி நில் நானும் வாறேன் "அம்மா போறேன்" (உள்ளிருந்து "ஓம்)"

*(பிள்ளைகளெல்லாம் வீதியால் மிகுந்த பரபரப்போடும், சலசலப்போடும் பெறுபேறுதரப்போகும் இன்ப துன்பங்கள் பற்றிக் கதைத்தபடி போகிறார்கள் - இவ்வேளை இள வட்டங்கள் பின்வரும் பாடலைப் பாடிக் கிண்டலடிக்கிறார்கள்.)*

*பாடல் :-*

"றிசல்ட்டுப்" பார்க்கப் போகும் - எங்கள் / கன்னியரே கேளும். "றிசல்ட்டு" மோசம் போனால் - நீங்கள் / கவலைப் படவே வேண்டாம். / சட்டி பானை அடுப்பு – நல்ல / சமையல்க் கட்டு இருக்கு. கட்டிக் கொள்ளத் தாலி - இங்கு/ கையில் றெடியா இருக்கு. *(இந்த அல்லோல கல்லோலங்களைத் தாண்டிப் பெண்பிள்ளைகள் பாடசாலை சென்றடைகின்றனர்.)*

சுரபி - கெட்ட பெடியங்கள்! விடுகாலிகளாட்டம்!! (ஒருநயப்போடு)

வைகை - "றோட்"டாலை போய் வரேலாமல் இருக்கு!

காவேரி - "றோட்" அவைக்குத்தான் சொந்தமாட்டம்!

யமுனா - பாவங்களடி அவங்களும்., புத்திசாலித்தனமா நாலு பகிடி விடத் தெரிய இல்லை.!

கங்கா - அவங்கட பாட்டுக்குத் திரும்ப ஒரு பாட்டுப் பாட வேணும் போல இருந்திது.

சுரபி - பாட வேண்டியது தானே!

கங்கா - அந்தளவுக்கு இன்னும் துணிவு வரஇல்லை.

வேணி - உனக்குமா?

வைகை - *(உள்ளே பார்த்து)* அந்தா "மிஸ்" வாறா – *(பிள்ளைகள் பல்வேறு ஆரவார ஒலிகளை எழுப்புவர்தானே!)*

சுரபி - என்னப்பா, "மிஸ்" கையை ஆட்டிக் கொண்டு வாறா.

பவானி - "மிஸ் றிசல்ட்" வரஇல்லையா?

ஆசிரியை - வந்திட்டு! வந்திட்டுது!

கங்கா - *(உரிமையோடு)* போய் "றிசல்ட் ஷீட்"டைக் கொண்டாங்கோவன் மிஸ்

யமுனா - "பிளீஸ்" "அச்சா" "மிஸ்" சல்லே!

சிலர் - போங்கோ "மிஸ்"!

வைகை - அச்சாக் குஞ்சு, போங்கோ "மிஸ்"!

ஆசிரியர் - அங்கை சில "பேரன்ட்ஸ்" வந்து "ஒ.்.பிசி"லை அந்தரப்பட்டுப் பாக்கினம்!

கங்கா - அவைக்கு அவ்வளவு அவசரம்!

யமுனா - அவேன்னர பிள்ளைகளுக்கு வரேலாதோ?

ஆசிரியர் - அவைக்குப் "பிறின்சிப்பல் சொல்லிப் பாத்தவ, "பிள்ளைகள் பாத்துக் கொண்டு நிக்கினம்" எண்டு என்ன சொன்னாலும் அவை போனாலல்லோ!

பவானி - பேச்சனங்கள்! எதுக்கும் அவசரம்!

ஆசிரியர் - அதிலை சிலர், தங்கடை பிள்ளைகளைவிட ஆராருக்குக் கூடின "றிசல்ட்" எண்டதையும் பாத்துக் கொண்டு நிக்கினம்!

வேணி - அது கட்டாயம் எங்கடை அப்பாவும் அம்மாவு மாத்தான் இருப்பினம்.!

ஆசிரியர் - தங்கடை பிள்ளையை விட ஆருக்குக் குறைவு எண்டு பாக்கிறதிலையும் சிலர் மினக் கெடுகினம்.!

சுரபி - அதெண்டா எங்கடை அம்மாதான் "பெட்" பண்ணுவன்!

ஆசிரியர் - இதெல்லாத்தையும் பாக்க "பிறின்சிப்பலு"க்குத் தலை வெடிக்குது. அவதான் உங்களிட்டை என்னை அனுப்பினவ.

கங்கா - கனநேரம் செல்லுமே "மிஸ்"?

ஆசிரியை - நான் போய்ப் பத்து நிமிஷத்துக்குள்ளை கொண்டு வாறன்., பிள்ளையள், நீங்கள் போய் "ஓடிட்டோறிய" த்திலை இருங்கோ.

யமுனா - அச்சா "மிஸ்" கெதியா வாங்கோ! – (ஆசிரியை ஒரு புறத்தாலும், மாணவர்கள் மறுபுறத்தாலும் வெளியேற சட்டநாதனும் சங்கரியும் வருகின்றனர்.)

சட்டநாதன் - என்ன சங்கரி ஒரு பத்து நிமிஷம் பிள்ளையளின்ரை "றிஸல்ட்டை"ப் பாக்க விடுகினமில்லை.!

சங்கரி - எங்கடை பிள்ளையொன்றின் "றிசல்டை" மட்டும் பாத்தாப் போதுமா?

சட்டநாதன் - மற்றப் பிள்ளையளின்ரை "றிசல்ட்சை"யும் பாத்தாத்தானே எங்கட பிள்ளைகள் எங்கை நிக்கினம் எண்டது தெரியவரும்.

சங்கரி - "கொம்பெயர்" பண்ணிப் பார்க்க வேணும் "கொம்பரட்டிவ் ஸ்டடீஸ்" எண்டா அப்பிடித்தானே செய்ய வேண்டும்.!

சட்டநாதன் - றிசல்ட்ஸ் கொப்பி ஒண்டை "ட்டைப்" பண்ணி எல்லாப் "பேரன்ட்சு"க்கும் குடுக்க வேணும் "ஸ்கூல்". அப்ப ஒருத்தரும் பொய் சொல்லேலாது.!

சங்கரி - நீங்கள் சொன்னது ஒரு நல்ல ஐடியா "அடுத்த ஓ.ஜீ.எ" மீட்டிங்லை நான் இதை ஒரு "ப்றொப்போசலா"க் கொண்டு வரப்போறன்.!

சட்டநாதன் - ஓம் அப்பிடிச் செய்யும் சங்கரி. நாங்கள் வீட்டை போவம்.

சங்கரி - எங்கடை வைகையும் வேணியும் "ட்டுவின்ஸ்" எண்டதுக்காக ஒரே "றிசல்ட்ஸ்" எடுத்திருக்கினம் - "செவின் டீ, வண் சீ!"

சட்டநாதன் - அது தானே எயிட்டீ எடுக்கேலாமல் போச்சு அவைக்கு

சங்கரி - வரட்டும் வீட்டுக்கு! வாங்கோ போவம்.

*சட்டநாதனும் சங்கரியும் ஒரு புறத்தால் வெளியேற மாணவர்கள் பரீட்டைப் பெறுபேறுகளைப் பார்த்த பிரதிபலிப்புக்களோடு வருகின்றனர். பெரும்பாலும் உற்சாகம் தான். அவர்தம் வாய்களிலிருந்து கள்ளி, த்ரீ டீ, போ டீ, ஆல், சிக்ஸ் சீ, எப்ப ட்ரீட் எனக்கிதுபோதும், வீட்டை என்னெண்டு போறது? ச்சீச்சனியன், ஹ ஹ ஹ ஹ இவை அனைத்தும் நிகழும் வேளையில் பின்னணியில் பாடலொன்று கேட்கிறது.)*

*பாடல் :-*

ஆவியினுள்ளும் அறிவினிடையிலும் / அன்பை வளர்த்திடுவோம் - விண்ணின்/ஆசை வளர்த்திடுவோம் - களி / ஆவல் வளர்த்திடுவோம்.../ நெஞ்சிற் கவலைகள் நோவுகள் யாவையும் / நீக்கிக் கொடுப்பவனை - உயிர் / நீளத் தருபவனை - ஒளிர் / நேர்மைப் பெருங்கனலை - நித்தம் / அஞ்சலஞ்சே லென்று கூறி எமக்கு நல் / ஆண்மை சமைப்பவனைப் - பல்வெற்றிகள் / ஆக்கிக் கொடுப்பவனை - பெருந்திரள் / ஆகிப்பணிந்திடுவோம் - வாரீர்.

*- பாரதிபாடல் தெய்வப் பாடல்கள் - தோத்திரப் பாடல்கள் – 73(1,4)*

யமுனா - ஏய் எல்லாரும் ஒருக்காக் கேளுங்கோ!
கங்கா - ஆரிட்டைக் கேக்கிறது?
யமுனா - ஆ, பகிடியை விடும்! நான் சொல்லுறதைக் கேளும்.
பவானி - விட்டாச்சுப் பகிடியை சொல்லும்!
யமுனா - "எயிட் டீ" எடுத்தாக்கள் "ஐஸ்க்கிறிம்" வேண்டித்தரவேணும்!
சிலர் - (ஆரவாரமாக) ஓ ஓ ஓ கெங்காவும், பவானியும்
வைகை - ரெண்டு பேரும் பெரிய "ட்றீட்" தரவேணும்!
சுரபி - "ட்றீட்" என்ன "ட்றீட்" பெரிய "பார்ட்டி" தரவேணும்!
கங்கா - "பார்ட்டி" தானே தந்தாப் போச்சு!
சிலர் - ஹாய்! எப்ப?
கங்கா - எப்பெண்டாலும் "எனிட்டைம் இஸ் பார்ட்டி டைம்" எப்பதர இன்டைக்கா நாளைக்கா?
வேணி - இண்டைக்கும் வேண்டாம் நாளைக்கும் வேண்டாம்!
சுரபி - ஏன் வேண்டாம்?
வைகை - எங்கடை அப்பாவும் அம்மாவும் எங்கடை "றிசல்ட்சை" எங்களை விடக் கூட எடுத்தவையோடை "கெம்பெயர்" பண்ணி எங்களைத் திட்டி முடிக்கிறதுக்குக் குறைஞ்சது ஒரு கிழமையாவது அவைக்கு வேணும்.
யமுனா - *(வேணியையும் வைகையையும் அணைத்தபடி)* பாவம் இந்த "ட்டுவின்ஸ்" இவேன்ரை "றிசல்ட்சும்" "ட்டுவின்சா"த்தான் வந்திருக்குட "செவின் டீ, வன் சீ"
சுரபி - சரி சரி "எயிட் டீ" காரி பவானி எப்ப "பார்ட்டி" தரப் போறா?
பவானி - எனக்கு அப்பிடிப் பெரிய "பார்ட்டி" எதுவும் தாற அளவுக்கு எங்கடை வீட்டிலை நாங்கள் வசதியா இல்லை.
கங்கா - உங்களுக்குத் தெரியும். யமுனாவும் பவானியும் நானும் சரியான "குளோஸ் பிறெண்ட்ஸ் எண்டது?
சிலர் - ஓம் தெரியும் *(குழப்படித் தொனியில்)*
யமுனா - அதனால நீங்கள் எங்கள் மூண்டு பேரையும் "த்றீ சிஸ்டேர்ஸ்" எண்டு கூப்பிடுறனிங்கள்.
சிலர் - ஓம் கூப்பிடுறனாங்கள்! *(அதே புழுகுத் தொனியில்)*
கங்கா - பவானியின் வீட்டு நிலைமை உங்கள்ள கன பேருக்குத் தெரியும்....
வைகை - அவேன்ரை அப்பா... *(தொடர்ந்து பேசத் தயங்கித் தடுமாற)*
பவானி - *(சிறு புன்னகை யோடு)* ஏன் வைகை நிப்பாட்டிட்டீர் அதெல்லாத்தையும் உணர்ச்சிகளோடை, உணர்வுகளோடை, அழுகையோடை பரபரப்போடை பார்த்த காலம் இப்ப மெல்லப் போயிட்டுது எனக்கு! மற்றவையைப் போல நானும் இதைத்தூர நிண்டு பாக்கப் பழகிக் கொண்டன் அப்பிடி என்ன பெரிய அலுவலது? யாழ்க் குடாநாட்டிலை கட்டாயமாக விதவையாக்கப்பட்ட பதினெண்ணாயிரம் பொம்பிளையெள்ளை அம்மாவும் ஒருவர், அவ்வளவு தான். அப்பா, இப்ப எங்கடை அகராதியிலை புது அர்த்தமொண்டை

ஏற்றுக் கொண்டிருக்கிற ஒரு சொல்லின்ரை உருத்துக் காரரிலை ஒருத்தரா இருக்கிறார் -"காணாமல் போனவர்கள்."

வைகை - *(பவானியின் கைகளைப் பற்றிக் கொண்டு)* சொறி பவானி!

பவானி - ஐயோ வைகை, நீர் ஏன் கவலைப்படுகிறீர்? எனக்கிப்ப பெரியளவிலை இது பற்றின "சென்டிமென்ட்ஸ்" இல்லை கங்கா, யமுனா, நாங்கள் மூண்டு பேரும் முதல்லை உங்கடை வீடுகளுக்குப் போய், "றிசல்ட்சைச்" சொல்லிப் போட்டுப் பிறகு எங்கடை அம்மாட்டைப் போய்ச் சொல்லுவம்.

சுரபி - நாங்களெல்லாமாப் போவம்.

யமுனா - வேண்டாம் சுரபி, பவானி எங்கள் ரெண்டு பேரையும் மட்டும் ஏன் கூப்பிடுறா தெரியுமா? பவானியின்ரை நல்ல "றிசல்ட்சைக்" கேட்ட உடனை அம்மா கட்டாயம் அழப்போறா.........

பவானி - எப்படியோ அப்பாவின்ரை நினைப்பு அவவுக்கு வருந்தானே?

சிலர் - ஓம்

பவானி - இவை ரெண்டு பேருமெண்டா அம்மாவைச் சமாளிப்பினம் எல்லாரையும் ஒண்டாக் கண்டா, அவவைத் தேற்றிறது கஷ்டமா இருக்கும்.

வேணி - ஓம் பவானி, விளங்குது, சந்தோசப்படவேண்டிய நேரங்களிலும் சிலர் அழ வேண்டியிருக்கு.

கங்கா - இருந்தாலும் எங்கடை பவானி கெட்டிக்காறி. இதிலை இருந்து கெதியிலை விடுபட்டு நிமிர்ந்து வந்திட்டா.

பவானி - அது என்ரை "ஃபிறெண்ட்சும்" நீங்கள் எல்லாரும் "ட்டீச்சேர்சும்" தந்த தைரியத்தாலை வந்தது. சரி சரி. கனக்கக் கவலையளுக்குள்ளை போயிட்டம். கங்கா! ஆற்றை வீட்டுக்கு முதல்லை போவம்?

யமுனா - வேறை கதையில்லை. எங்கடை வீட்டுக்குத் தான்!

சுரபி - உந்த "றிசல்ட்"டோடையோ?

யமுனா - என்ன, உந்த"றிசல்ட்டோடை"யோ? நான் படிச்ச அளவுக்கு இது "ஐலன்ட்டி"லையே "பெஸ்ட் றிசல்ட்ஸ்." "ஓல் எப்" எடுப்பனெண்டு வீட்டிலை "பெட்" பிடிச்சிருக்கினம்.

சுரபி - எவ்வளவு பந்தயம்?

யமுனா - நான் பந்தயத்துக்கு ஏலா எண்டிட்டன்!

கங்கா - இவளெங்கை நினைச்சவள் தனக்கு "ட்டு டீ, ஃ போர்சீ, எட்டு எஸ்" வருமெண்டு?

வேணி - என்னெண்டு யமுனா எடுத்தனி?

யமுனா - பவானி கங்காவோடை திரிஞ்சதாலைதான்!

சுரபி - கன்றோடு கூடிய பன்றி!

யமுனா - இடையிடையே உலகில் அற்புதங்கள் நிகழ்வதுண்டு மகான்களால் அவற்றை நிகழ்த்த முடியும்.!

வைகை - மஹா மாதா! இந்த அதி அற்புதத்தை எப்படி நிகழ்த்தினீர்கள்?

யமுனா - பக்தையே, என்னருகே வா உன் செவிக்குள் அந்த இரகசியத்தைக் கூறுகிறேன். - *(வைகை மிகவும் பணிவோடு யமுனாவுக்கருகே சென்று நிற்க அவள் அவளது காதுக்குள் எதையோ சொல்லுகிறாள். வைகை அது கேட்டுச் சடாரென நிமர்ந்து)*

வைகை - ச்சீக்!!! பெடியங்களை விட இவள் மோசம்! *(அனைவரும் அட்டகாசமாகச்சிரிப்பார்கள் என்போம்.)*

சுரபி - யமுனா, வைகைக்கு என்ன சொன்னனி?

யமுனா - அது குரு தீட்சை, வெளியே சொல்லக் கூடாது மகளே

சுரபி - கொப்பி அடிச்சுத்தான் "பாஸ்" பண்ணியிருப்பாள்

யமுனா - அது தானில்லை ஒவ்வொரு விடைத்தாளிலும், எனது புகைப்பட மொன்றை இணைத்து விட்டேன் அதன் பெறுபேறோ என்னவோ? எப்படி என் அழகு?

பவானி - விளக்குமாறு!

யமுனா - அதனை விளக்குமாறு கேட்கிறாய் அப்படித்தானே *(சிரிக்கத் தெரிந்த வயதல்லவா, சிரிக்கட்டும்.)*

வேணி - யமுனா நீர் இல்லாமல் இந்த ஸ்கூல் "லை.்.ப்" எவ்வளவு "போறா" இருக்கப் போகுது!

வைகை - ஓமப்பா நீர் கட்டாயம் நோர்வேக்குப் போகப் போறீரா?

யமுனா - ஓம், அக்கா கட்டாயம் வரட்டுமாம் அப்பா அம்மாவும் அனுப்பத்தான் நிக்கினம்.

கங்கா - இதுகள் ஒரு சாட்டு அங்கை யமுனாவின் மாமன் மகன் இருக்கிறார்

யமுனா - முக்கியமான காரணம் அதுவும் தான்! *(இந்தக் கட்டத்தில் பலரும் ஒரு கட்டிளமைக் கனவுக்கிறக்கத்துள் படிப்படியாகச் சென்று விடுகின்றனர்)*

வேணி - ஆஹா! நோர்வே!!

சுரபி - அழகிய தேசம்! அழகிய மலைகள்!! பனி உறைந்த கடல்கள்!!!

வைகை - *(தன்னை மறந்து ஆழமான வெளிப்பாடாக)* காலங்களைக் கணிப்பிடும் வசந்தம்,! கோடை, இலையுதிர், கடும்பனி பனி முடிசூடிய மலைச்சிகரங்கள்! பனிநுரை படிந்த வீதிகள்,! சூரியனைத் தேடும் சுகமான இரவுகள்,! இப்சனின் நோறா வாழ்ந்த நாடு! அழகிய நதிகள்,! ஏரிகள்,! ஆறுகள்,! அழகிய மரங்கள்,! சோலைகள்,! பனிமலர் பூக்கும் அழகிய புதர்கள்! அழகிய மனிதர்! அழகிய தேசம்! அழகிய இளமை! அழகிய அழகிய அனைத்தும்!

*(வைகையின் ஆழ்மனக் காட்சி மேடையில் படர்கிறது. இந்த நாடகத்தின் மாந்தர் அனைவரும் இணைந்து இதனை மேடையில் காட்சிப்படுத்துவர். அவ்வேளை பின்வரும் பாடல் மிக அழகாக இசைக்கப்படுகிறது.)*

பாடல் :-

அன்பென்ற மழையிலே அகிலங்கள் நனையவே / அதிரூபன் தோன்றினானே/ கண்ணீரின் காயத்தை செந்நீரில் ஆற்றவே / சிசுபாலன் தோன்றினானே /
கல்வாரி மலையிலே கல்லொன்று பூக்கவே / கருணை மகன் தோன்றினானே/ நூற்றாண்டு இரவினை நொடியோடு போக்கிடும் / ஒளியாகத் தோன்றினானே/ இரும்பான நெஞ்சிலும் ஈரங்கள் கசியவே / இறை பாலன் தோன்றினானே/ முட்காடு ஏங்கிலும் பூக்காடு பூக்கவே / புவிராசன் தோன்றினானே. *(திரைப்படம் மின்சாரக் கனவு)*

சுரபி - யமுனா

யமுனா - என்ன சுரபி?

சுரபி - நீர் "ஏ/எல்" இஞ்ச படிக்க மாட்டீரா?

யமுனா - படிக்கத்தான் விருப்பம், விடமாட்டினம் இஞ்ச இருக்க!
சுரபி - உமக்கும் படிப்பிலை "இன்ட்ரெஸ்ட்" இல்லைத்தானே?
யமுனா - இவ்வளவு நாளும் பெரிசா இருக்க இல்லை, இப்ப இண்டைக்கு இந்த "றிசல்ட்டைப்" பாத்தாப்பிறகு படிக்க வேணுமெண்ட விருப்பம் வருகுது.
கங்கா - "வெரி குட்" நல்ல மாற்றம்!
பவானி - நானும் கங்காவும் சொன்னனாங்கள் தானே கொஞ்சம் படி "எயிட் டீ" எடுப்பாய் எண்டு?
யமுனா - ஓம், நீங்கள் சொன்னது இப்பதான் விளங்குது
வைகை - இப்ப விளங்கி என்ன ? "ட்டு லேட்"
யமுனா - இல்லை அங்கை போனாலும்
வேணி - போனாலும் என்ன போனாலும்?! போன உடனை மச்சானைக் கட்டிவைப்பினம்.
யமுனா - இல்லை நான் படிப்பன்! பட்டமொண்டெடுப்பன் "உத்தியோகம் பாப்பன்"அதுக்குப் பிறகு தான் வேறை எல்லாம் இதுக்கு, ஓமெண்டாத்தான் அங்கை போவன்.
பவானி - அவை முடியாதெண்டால்?
யமுனா - இங்கை நிண்டு படிப்பன் "ஃபெஸ்ட் ஷை"யிலை "கம்பஸ் என்டர்" பண்ணுவன். பாட்டி காலம் போல பதினாறிலை என்ன கலியாணம்.!

*( ஆரவாரித்துச் சிரிப்பர் - வைகை இன்னமும் கனவிலிருந்து மீளவில்லை)*

சுரபி - *(யமுனாவிடம் போலிப்பாவனையாக)* உயர்திரு லட்சியவாதியே!
யமுனா - என்ன வேண்டும் உனக்கு? அலட்சியவாதப்பதரே!
சுரபி - இக்காலம் பெண்கள் எத்தனை வயதில் திருமணம் செய்து கொள்ளலாமென்று நீங்கள் கருதுகிறீர்கள்?
யமுனா - இருபத்தி இரண்டுக்கும் இருபத்தியாறுக்குமிடையிலென்றால் "ஐடியல்"
கங்கா - அதற்கு இப்பாலும் அப்பாலும் மென்றால்
யமுனா - பால் பகா அஃறிணை

*(ஆரவாரித்துச் சிரிப்பர். இவ் வேளையிலும் வைகை சுயநினைவுக்கு வராதிருப்பதை அவதானித்த பவானி)*

பவானி - ஏய் வைகை *(அவள் அசையாதிருப்பதைக் கண்டு கங்கா பாடுகிறாள்)*
கங்கா - "அன்பே அன்பே என் அன்பே எங்கே எங்கே நீரெங்கே
உன்னில் என்னைத் தொலைத்தேனடி......."
யமுனா - ஏய் வைகை *(வைகையின் தோள்களை தொட்டு உலுப்ப)*
வைகை - (திடுக்குற்று) அ அ ஆ... என்ன?
பவானி - அப்பா! வைகை உயிரோடைதான் இருக்கிறாள்.
சுரபி - எங்கை வைகை போயிருந்தனி? (அனைவரும் சிரிப்பர்)
கங்கா - வைகை அதிகம் கனவுகள் கூடாது. அளவோடிருந்தால் அமுதம்
பவானி - வேணி உம்மடை சோதரியைக் கவனமா வீட்டை கூட்டிப்போம் *(அனைவரும் சிரிக்க)*
கங்கா - சரி வாருங்கோ எல்லாரும் போவம். பிள்ளைகள் (தம்முள் கதைத்தவாறு வெளியேறுகின்றனர். மிக அமைதியாக ஒரு புறத்தே இருந்து வந்த காவேரியும் எழுந்து செல்கிறாள். பிள்ளைகள் சென்ற பின் அங்கே சட்டநாதர் குறுக்கும் மறுக்குமாக நடக்கிறார். இவை நடைபெறும் வேளையில் பின்வரும் பாடல் பாடப்படுகிறது.)

பாடல் :-

வானம் அழகு வையகம் அழகு / தேனுண்ணும் வண்டினம்
தெவிட்டாத பேரழகு / மானும் அழகு மயிலும் அழகு
கானம் இசைத்திடும் / குயிலினம் பேரழகு.
பருவம் அழகு இளமை அழகு / மருட்கை நீங்கிய
முதுமை பேரழகு / சாய்ந்தாடும் மரஞ்செடி
பாய்ந்தோடும் நதிகடல் / வையத்து நர்த்தனத்தின்
நிலையான பேரழகு / எவை எவை எப்படி
இருந்திட வேண்டுமோ / அவை அவை அப்படி
இருப்பதே அழகு

(பாடல் முடிவடையும் வேளையில் வைகை, திரிவேணி இருவரும் தயங்கித் தயங்கி உள்ளேவருவர்.)

சட்டநாதன் - வைகை, வேணி, என்னம்மா செய்து போட்டீங்கள்?

வைகை - "செவிண்டீ, வண் சீ," யப்பா!

வேணி - எனக்கும் அதுதான் "றிசல்ட் டப்பா"!

சங்கரி - *(வந்து கொண்டு)* எங்களுக்குத் தெரியும்

சட்டநாதன் - அங்கை ரெண்டு பிள்ளையன் "எயிட் டீ" எடுத்திருக்குதுகள்?

வைகை - ஒரு "டீ" யை மட்டுந்தானே மிஸ் பண்ணினனாங்கள்!

சங்கரி - என்ன இருந்தாலும் இப்ப அவைக்கு நாங்கள் இளக்கமாப்போட்டமே

சங்கரி - அவையும் நாங்களும் நல்ல "ஃபிறெண்ட்ஸ்"

சட்டநாதன் - என்னதா னெண்டாலும் மரியாதையில்லை "வெரிஷேம்"

விவேக் - என்னப்பா வெரிஷேம்! இவை "ஃபெயிலா"?!

சங்கரி - எயிட்டீ எடுத்திருந்தால் தலை நிமிந்து நடந்திருப்பம்!

சட்டநாதன் - ரெண்டு பேரும் செவிண் "டீ, வண் சீ" யோடை வந்து நிக்கினம்!

விவேக் - ரெண்டு பேரும் சேர்ந்தா? அப்ப தனியத் தனிய என்ன "றிசல்ட்ஸ்"

வேணி - தனியத்தனியத்தான் "செவிண்டீ, வண்சீ"

விவேக் - அடேயப்பா கொண்டாருங்கோ கையை (கைகுலுக்கியவாறு) என்னை விட நாலு நாலு"டீ", கூட அப்பா இதைக் குறைவு எண்டு சொன்ன குற்றத்துக்குத் தண்டனையா ஆயிரம் ரூபா கொண்டாங்கோ அம்மா! நீங்களும் ஆயிரம்.!

சங்கரி - விவேக், நீ இந்தப் பிள்ளையளையும் உன்னைப் போலப் பழுதாக்கிப் போடாதை.!

விவேக் - அம்மா! நானிப்ப பழுதாப் போயா நிக்கிறன்? "பெஸ்ட்ஷை"யோடை "யூனிவசிட்டி என்டர்" பண்ணினன் "பொலிட்டிகல் சயன்ஸ் ஸ்பெஷல் தேட்டியர்லை" இருக்கிறன்! "ஆர்ட்ஸ் ஃபகல்ட்டி ஸ்ரூடன்ட்ஸ் யூனியன் பிறசிடென்ட்டா" இருக்கிறன் "வீ சீக்கு" அடுத்த பதவி!

சட்டநாதன் - பெரிய பதவி! உதுக் கெவ்வளவு சம்பளந்தாறாங்கள்?

விவேக் - எதுக் கெடுத்தாலும் சம்பளம் எண்டு கொண்டு நிக்கக்கூடாதப்பா! போய் ஆயிரம் ரூபா எடுத்துக் கொண்டு வாங்கோ!

சட்டநாதன் - எதுக்காயிரம்?!

விவேக் - அண்ணனெண்டிருக்கிறனான். தங்கச்சிமாற்றை "றிசல்ட்சை" யெண்டாலும் கொண்டாடாமல் இருக்கிறதா? கெதியா நேரம் போகுது!

சட்டநாதன் - *(சங்கரியிடம்)* இவனுக்கேதாவது குடுத்தனுப்பும்!

சங்கரி - என்னட்டை ஒண்டுமில்லை *(கூறிக்கொண்டு உள்ளே செல்கிறாள்)*

விவேக் - பிச்சைக்காரனுக்குக் குடுக்கச் சொல்லற மாதிரிச் சொல்லிப் போட்டீங்களப்பா! வைகை "ஏஎல்லுக்கு" என்ன செய்யப் போறாய்?

சட்டநாதன் - "பயோசயன்ஸ்" தான்

விவேக் - அப்பா இவேன் ரை "நிசல்ட்சுக்கு" நீங்களே படிக்கப்போறீர்கள்?

சட்டநாதன் - படிச்சா "ப்யோசயன்ஸ்" இல்லையெண்டா வீட்டை நில்லுங்கோ!

விவேக் - இவை ரெண்டு பேருக்கும் அது விருப்ப மெண்டா கட்டாயம் படிக்கட்டும். பிள்ளையள் உங்கடை விருப்பமென்ன?

வேணி - நான் "பயோ"தான் செய்யப் போறன்.!

விவேக் - வெரிகுட் வைகை!

வைகை - எனக்கு "லங்வெஜ் ஸ்பெஷல்" செய்ய விருப்பம். இங்லிஷ் அல்லது தமிழ், "பயோ"வும் என்னாலை செய்ய ஏலும், ஆனால் இது தான் விருப்பம்.

விவேக் - விரும்பிறதையும், தனக்குத் தனக்கு ஏலுமெண்டதையும் படிக்கிறது தான் படிப்பு ஊரெல்லாம் படிக்கிதெண்டு போட்டு நாங்கள் நாங்களும் போட்டியிலை நிக்கக் கூடா!

சட்டநாதன் - விவேக், எங்கடை அலுவல் நாங்கள் பாப்பம் (பணத்தைக் கொடுத்து) இந்தா நீ போ!

விவேக் - காசு தந்து கலைக்கப் பாக்கிறீங்கள். அப்பா! வைகைக்குச் சின்ன வயசிலை இருந்தே இங்கிலீசும் தமிழும் நல்லாவரும் எண்டது உங்களுக்குத் தெரியும். காதலைக் கிள்ளி எறிகிறது போலத் தானப்பா விரும்பிற பாடத்தைப் படிக்க விடாமல் தடுக்கிறதும்.

சங்கரி - *(வந்து)* இந்தா இது போதும் போ!

விவேக் - *(வேகமாக வாங்கிக் கொண்டு)* "ஒன்லி ஃ. பைங்கண்ட்ரெட்"

சட்டநாதன் - என்ன நான் தந்த தெங்கை? *(சங்கரியிடம்)* நானும் அஞ்நூறு குடுத்தனான்.

சங்கரி - இஞ்ச கொண்டு வா நான் தந்ததை?

விவேக் - அம்மா இது நிலாவரை, இதிலை போட்டது கீரிமலைக் கேணியிலைதான் மிதக்கும்! கீரிமலைக்குப் போக இப்ப பாஸ் இல்லை! ஆடி அமாவாசைக்குச் சில சமயம் விடலாம்!

சங்கரி - விவேக் நீ வரவரக் கெட்டுப்பேறாய்.

விவேக் - கடைசிவரை கெட்டுப்போக மாட்டன், என்ரை வயதுக்குரிய ஒழுங்கான சில முசுப்பாத்தியள் இருக்கு. அந்த எல்லையளை நான் ஒருக்காலும் தாண்ட மாட்டன் பயப்பிடாதையுங்கோ அப்பா. நீங்கள் கடந்து வந்த பாதையாலை தான் நான் நடந்து வந்து கொண்டிருக்கிறன். அம்மா நீங்கள் வந்த பாதையிலை தான் இவையள் *(தங்கைகளைக்காட்டுகிறான்)* நடந்து கொண்டிருக்கினம்! *(தொலைபேசி மணி ஒலிக்கிறது அருகில் நின்ற விவேக் அதை ஏற்கிறான்.)*

விவேக் - ஹலோ ஆ ஆ ஆ ஆ ஆ..... ஓம் என்ன நீயோ கேட்டுக்கொள் *(வைகையிடம்)* வைகை இந்தா உனக்குத் தான்.

வைகை - ஆரண்ணா?

விவேக் - வந்து கதையன் ஆரெண்டு தெரியும் இந்தா

வைகை - *(ஒலிவாங்கியை வாங்கி)* ஹலோ ... (அவள் சற்றுப்பதட்டமடைவது தெரிகிறது) அ..ஓ...இல்லை

செவிண்டீ, வண் சீ... அவவுக்கும் அதே "ரிசல்ட்ஸ்" தான்! தெரியா! *(விவேக் ஒலிவாங்கியை வாங்கிக் கொள்கிறான்)*

விவேக் - டேய் நேரா எங்கடை "கூல்" "பாறுக்கு்" வா "பாருக்குப்" போகிடாதை காசு கொஞ்சம் கிடைச்சிருக்கு உனக்கேன் அது? *(சிரித்து)* அதென்ன ஒரு பத்துரூபா கிடைச்சது. சரியடாப்பா வை *(ஒலிவாங்கியை வைத்து விட்டு)* இதுகளுக்கு ரிசல்ட் வந்ததும் வந்திது, எனக்குத் தலைபோன வேலையள் வந்திட்டுது – என்ன படிக்கிறது எண்டதை நான் தான் கதைச்சுத் தீர்க்கவேணும். ஆராருக்குப் பார்ட்டிவைக்கிறது எங்கை வைக்கிறது, எப்பிடி வைக்கிறது, இதெல்லாத்தையும் நானே செய்ய வேண்டி இருக்கு, வைகை உன்ரை படிப்புப் பற்றிப் பிறகு கதைப்பம், படிப்பு இப்ப முக்கியம் என்ன?

வைகை - ஓம்

விவேக் - அம்மா "டட்டா"

சங்கரி - *(சற்றுக் கோபமாக அது செல்லக் கோபமாகவும் இருக்கலாம்)* போடா! *(விவேக் வெளியேறுகிறான் வைகையும் திரிவேணியும் உள்ளே போகப் புறப்பட)*

சட்டநாதன் - வைகை "ஃபோன்லை" ஆர்கதைச்சது?

வைகை - அண்ணாவோடை படிக்கிற ராகுலண்ணா

சட்டநாதன் - சரி போங்கோ உள்ளை *(வைகையும் வேணியும் உள்ளே செல்கின்றனர்)*

சங்கரி - அதாரப்பா அந்த "போய்" ராகுல்?

சட்டநாதன் - அது ராஜசிங்கத்தின்ரை மகன் வீட்டுக்கு "ட்டெலிபோனை". நாங்கள் எடுக்காமல் விட்டிருக்க வேணும்

சங்கரி - இந்த வயசிலை பிள்ளையளை வச்சிருக்கிற தாய் தகப்பன் எங்கடை அம்மா அப்பா நாங்கள் இந்த வயசா இருக்கிற நேரம் சொல்றது மாதிரி மடியிலை நெருப்பைக் கட்டிக் கொண்டுதான் இருக்கிறோம்.

*(அவர்கள் இருவரும் உள்ளே செல்கின்றனர் இவ்வேளை பாடலொன்று பாடப்படுகிறது. கங்கா வீட்டில் தொலைபேசி சிணுங்குகிறது. அங்கு வந்து அதை எடுத்துத் தேற்றுவாரில்லை உள்ளே இருந்து (பாடல் முடிய) குரல்கள் கேட்கும்.)*

*பாடல் :-*

போறாளே பொன்னுத்தாயி – போகிற போக்கிலை மனசைத்தொட்டு.
கரிவேப்பங் கருவைப் போல வெக்கப்பட்டு
போறாளே பொன்னுத்தாயி – புழுதிக்காட்டில் மனசைவிட்டு.
உள்ளூருப் பொல்லாப்புக்குக் கட்டுப்பட்டு

கங்கா - அப்பா "ட்டெலிபோன்" அடிக்குது!

அருள் - நீர் அதோடை முசுப்பாத்தி விட்டிருப்பீர் அது தான் அது உமக்கடிக்குது! *(தனது பகிடிக்குத் தானே சிரித்து)* நான் இங்கே வேலையா இருக்கிறன் கங்கா

கங்கா - அம்மா "ட்டெலிபோன்" அடிக்குது போய்ப்பாருங்கோ!!

ஞானா - *(வந்தபடி)* ஆரப்பா இந்த நேரத்திலை *(ஒலிவாங்கியை எடுத்து)* ஹலோ ஆர் பேசிறது? ஓம் கங்காதான் பேசிறன்.

கங்கா - *(உள்ளே இருந்து)* ஏனம்மா பொய் சொல்றீங்கள்

அருள் - (வந்தபடி) அது தானே *(அமைதியாக இருக்கும் படி சைகை காட்டுகிறார் கங்காவும் வந்துவிடுவாள்)*

ஞானா - *(தொடர்ந்து தொலைபேசியில்)* நான் தனியத்தான். வெளியாலை போயிட்டினம் ச்சீக்! இதென்னவேலை, நீங்கள் இதெவ்வளவு சரியில்லை: நாளைக்கோ, நேரமில்லை. ஒரு அக்காவின்ரை கலியாண வீட்டுக்குச் சோடிக்க: உங்களை எனக்குத் தெரியா: ஓ குரல் நல்லா இருக்கு நானே? ஆ.... கழுதையும் சின்னல்லை வடிவுதானே. *(தாய் பேசிக் கொண்டிருக்கும் போது கங்கா சிரிப்பை அடக்கத் திணறுவாள்)*

அருள் - *(ஒலிவாங்கியை வாங்கி)* தம்பி ஒருக்கா தெல்லிப்பளை "ஹொஸ்பிட்டலுக்கு" / "போன்" பண்ணிப்பாரும், உமக்கு அது தான் இடம். இண்டைக்கு இது போதும்: நல்லாப் பச்சைத்தண்ணீலை தோஞ்சிட்டுப் படுராசா *(ஒலி வாங்கியை வைத்துவிட்டு)* இதுகளும் ஒரு வகையிலை பாவங்கள் இதொரு பரவசம்.

கங்கா - அம்மா நல்லா "அக்ட்" பண்ணினாப்பா. கதைச்சவர் இருவது வயதிருக்கும் எண்டு நினைச்சு வழிஞ்சிருப்பார் உங்களோடை!

ஞானா - அப்பா சொன்னது போல அது பாவங்கள், தங்கடை எல்லை தெரியாமல் நிண்டு தவிக்குதுகள்!

கங்கா - நான் நர்மதாவின்ரை அக்காவின்ரை "வெடிங் டெக்கரேஷனுக்"குப் போயிட்டு வாறன். "லேட்டாப்" போச்சுது எல்லாரும் வந்திருப்பினம். அப்பா டட்டா!

அருள் - பை டார்லிங் நாங்களும் நேரமிருந்தா வருவம். *(கங்கா வெளியேற அவர்கள் உள்ளே போகிறார்கள்)*

*இந்த நாடகத்தில் வரும் இளவட்டங்கள் பலரும் - ஆண்களும் பெண்களும் சட்டநாதன் சங்கரி தம்பதியினரும், சிலவேளை அருளானந்தம் ஞானாம்பிகை தம்பதியினரும் இந்தத் திருமண வீட்டு அலங்காரக் கைங்கரியங்களுக்காக வந்து சேர்வார்களாக, பாடலில்லாத மங்களவைபவமா? பின்வரும் பாடல் கேட்கிறது.*

பாடல் :-

எங்கள் வீட்டில் எல்லா நாளும் கார்த்திகை
எங்கள் நிலவில் என்றும் இல்லைத் தேய்பிறை... (எங்கள்...)
கிளிக் கூட்டம் போல் எங்கள் கூட்டமே
இது ஆனந்தப் பூந்தோட்டம் - அன்பின் ஆலயம்

*(பாடல்கள் பல பொருத்தமாகத் தெரிந்தெடுக்கப்பட்டு இந்த நிகழ்வின் கால அளவுக்கமைய பாடப்படலாம். தொடர்ந்தும் கூட இருக்கலாம். அவ்வாறு இருப்பின் உரையாடல்கள் இடம்பெறும் வேளையில் தணிந்தும் பின் ஓங்கியும் ஒலிக்கலாம். இளவட்டங்கள் இந்தச் சூழல் தரும் உளக் கிளுகிளுப்புக்கு அங்குமிங்கும் திரிவதும், கூட்டங்கூட்டமாக நின்று ஏதுமற்ற "இனியவை" பேசி மகிழ்வதுமாகவும் தொட்டதற்கும் உரத்துச் சிரிப்பதும் என உள்ளனர் எனலாம் - இவ்வாறான தொரு மன நிலையில்)*

சுரபி - வைகை, உன்னை ராகுலண்ணா கூப்பிடுறார்

வைகை - என்னையோ, பொய்!

சுரபி - உண்மையாகக் கூப்பிடடவர்!

வைகை - ஏன்?

சுரபி - என்னமோ கொண்டு வந்து தரட்டாம்!

வைகை - என்னத்தையாம்?

சுரபி - தெரியா, கூப்பிட்டாப் போக வேண்டாமா? "மனேர்ஸ்" இல்லையா? *(பையன்கள் நிற்கும் இடத்துக்கு வைகை செல்கிறாள். சுரபி தனது*

*குறும்புச் செயலை கங்காவுக்கு விளக்குகிறாள். கங்காவின் முகத்திலும் குறும்பு படர்கிறது அவள்)*

கங்கா - ராகுலண்ணா! வைகை உங்களிட்டை என்னமோ கேக்க வேணுமாம் - *(இதைக்கேட்டு இளசுகள் இருவரும், செருமும், தும்மும் தானே)*

ராகுல் - வைகை என்ன கேக்கப் போறீர்?

வைகை - உங்களுக்கு என்னமோ வேணுமெண்டு கேட்டனீங்களாம்!

ராகுல் - *(புன்சிரிப்போடு)* ஆர் சொன்னது?

வைகை - சுரபி

ராஜன் - அதார்மச்சான் சுரபி? சுரபியா? சுரப்பியா?

ராகுல் - வைகை, எங்கை உம்மடை அண்ணா விவேக்?

வைகை - தெரியா

ரவி - சூட்டி பபாவுக்கு ஓண்டுந் தெரியா?

ராகுல் - "ஏ எல்"லுக்கு என்ன செய்யப் போறீர்

வைகை - "ஆர்ட்ஸ்"

கபிலன் - "ஆர்ட்சா" அதுவுமொரு படிப்பா?

வைகை - எனக்கு விருப்பம் அது தான்

சுரபி - வைகை எப்பவும் தான் விரும்பினதைத்தான் செய்வா?

ராஜன் - விரும்பித்தான் செய்வாவோ? ஆ ஆ ஆஹா!

*(ராஜன் சொன்னதைக் கேட்டு அனைவரும் சிரிக்க, வைகை வெட்கத் தோடும் பொய்க் கோபத்தோடும் அவ்விடத்தை விட்டுப் பெண்கள் அருகே விரைந்து சென்று ஏதோ சொல்லி சுரபியைச் (செல்லமாக) அடிக்க, அவள் போலியாகச் சிணுங்க, அவர்கள் அனைவரும் சிரிப்பர்.)*

ராகுல் - வைகை குடிக்கக் கொஞ்சம் தண்ணி கொண்டு வந்து தாங்கோ (வைகை எழுந்து உள்ளே செல்கிறாள்.)

ரவி - வைகை நதிக்கரையோரம் *(என்று பாடத் தொடங்க) (அனைவரும் சிரிக்க)*

கங்கா - அடிக்! சூய்!! இதேனிப்ப ஊளையிடுது?

ரவி - *(கல்லெறிபட்ட குட்டிநாய்போல)* வள் வள் வள் *(என்கிறான்) (வைகை தண்ணீர் கொண்டு வந்து ராகுலிடம் கொடுப்பதற்கும் விவேக் வருவதற்கும் சரியாக அமைந்து விடுகிறது விவேக் வருவதைக் கண்ட சுரபி)*

சுரபி - அந்தா சரியான நேரத்துக்கு மாப்பிளைத் தோழனும் வந்திட்டார்! *(அனைவரும் சிரிக்க, விவேக் புரிந்தும் புரியாதவன்போல)*

விவேக் - ஆர் மாப்பிள்ளைத் தோழன்?

சுரபி - விவேக்கண்ணா, நாளைக்கு நீங்கள் தானே தோழன்?

விவேக் - ஆருக்கு, உமக்கோ? தேவையில்லாமல் கொழுவாதையும்! வீடு சோடிக்க வந்தால் சோடியுங்கோ, கதை சோடிக்காதையுங்கோ!

யமுனா - *(உள்ளே இருந்து வந்து)* எல்லாரையும் சாப்பிட வராட்டாம்! பிறகு சோடிக்கட்டாம்! ஆ, இங்க விவேக் அண்ணாவும் வந்திட்டார்! நீங்களும் வாங்கோ சாப்பிட!

விவேக் - இப்பதானே வந்தனான், இவங்கள் சாப்பிடட்டும்

ராஜன் - விவேக், கதையை விட்டுட்டு வா சாப்பிடுவம், பசிக்குது

விவேக் - இண்டைக் கெண்டாலும் "அபிராமியை" மறந்து சாப்பிடு ராஜன்.

பவானி - அதார் விவேக்கண்ணா அபிராமி?

ராஜன் - அவ கம்பசுக்கு முன்னாலை இருக்கிறா

கங்கா - பவானி, அது அபிராமி சாப்பாட்டுக்கடை!

பவானி - ஓமப்பா! நாளோரு மொக்கு!

விவேக் - அது சொல்லித்தான் தெரிய வேணுமே!

*(அனைவரும் சிரித்துக் கலகலத்தவாறு உள்ளே செல்கின்றனர் இவ்வேளை 'வானம் அழகு' எனும் பாடல் அல்லது வேறுபொருத்தமான பாடலொன்று பாடப்படலாம் காவேரி மிகுந்த கவலையோடு வகுப்பில் வந்து அமர்கிறாள் பவானியும் திரிவேணியும் கலகலப்பாகப் பேசியபடி வருகின்றனர்)*

வேணி - நேற்றுக் கலியாண வீட்டிலை நல்ல முஸ்பாத்தி என்ன?

பவானி - ஓமப்பா, கனகாலத்துக்குப் பிறகு நல்லா "என்ஜோய்" பண்ணினம். *(காவேரியைப் பார்த்து விட்டு)* இஞ்சபார் காவேரி தனிய இருக்கிறாள்.

வேணி - காவேரி ஏனப்பா கலியாண வீட்டுக்கு வரவில்லை? *(காவேரி எதுவும் சொல்லாதிருப்பதைக் கண்ட பவானி)*

பவானி - நான் ஒருக்கா 'மிஸ்சைப்' பாத்திட்டு வாறன் *என்று வேணியிடம் கூறிவிட்டு வெளியேறுகிறாள். அவள் சென்றதும் வேணி தயங்கித் தயங்கிக் காவேரியிடம்.*

வேணி - காவேரி ஏன் ஒரு மாதிரியா இருக்கிறீர், சுகமில்லையா?

காவேரி - *(கோபமாக)* என்னோட கதைக்க வேண்டாம்!

வேணி - நான் உம்மோடை கதையாமல் வேறை!

காவேரி - உமக்காயிரம் பேர் இருக்கினம்!

வேணி - உம்மைப் போல நல்லவை எல்லாம் எனக்கு "ஃபிறெண்ட்ஸ்" தான்!

காவேரி - என்னைத் தவிர எண்டு சொல்லும்!

வேணி - இல்லைக் காவேரி. உம்மையும் சேர்த்துத்தான். உமக்குத் தான் என்னைத் தவிர வேறை ஆரையும் பிடிக்குதில்லை. இண்டைக்கு என்னையும் பிடிக்குதில்லை உமக்கு!

காவேரி - நீர் என்னோட மட்டும் கதைக்கிறதா இருந்தால் கதையும் இல்லையெண்டால் வேண்டாம். நான் தனிச்சவளா இருப்பன்.!

வேணி - எல்லாரும் "ஃபிறெண்ட்ஸ்"தானே. அவையும் உம்மோடை நல்லாப் பழகத்தான் விரும்புகினம் நீர்தான்.....

காவேரி - எல்லாரும் எண்டது பொய் என்னாலை அப்பிடி ஏலா எனக்கெண்டு என்ரை சினேகிதி எண்டு சொல்ல நீர் எனக்கு வேணும் *(மனம் உடையத் தொடங்குகிறாள்)*

வேணி - காவேரி, நீர் உப்பிடி மற்றவையோடை அதிகம் கதையாமல் இருக்கிறதாலை, அவை உம்மை ஒரு மாதிரியாப் பாக்கத்துவங்குவினம்

காவேரி - துவங்கட்டும். எனக்கெண்டு ஆர் இருக்கினம் அப்பா அம்மாவுக்கு அவேன்ரை உத்தியோகமும் உழைப்பும் தான் பெரிசு. என்னைப் பற்றியும் தம்பியைப் பற்றியும் அக்கறை இல்லை.

வேணி - அப்பிடிச் சொல்லாதையும் உங்களுக்காகத்தானே அவை உழைக்கினம்.!

காவேரி - சாப்பாடும் உடுப்பும் மட்டுமா முக்கியம்? வீடெண்டால் பிள்ளைகளோட கதைக்க நேரமில்லாத பெற்றாரும் இருக்கினமா? எங்கடை அன்பை, கவலைகளை கொட்டக் கூட அம்மா, அப்பா இல்லையெண்டால் அவை இல்லைத்தான். தம்பியும் தனக்குள்ளை அடங்கிப் போனான்.

வேணி - காவேரி இதை நீர் உம்மடை அம்மா அப்பா வோட கதைக்க வேணும்.!

காவேரி - அவைக்கு எங்களோடை கதைக்க நேரமில்லை வீட்டிலையும் வேலையளும் அங்கத்தேக் கதையளும் தான். நான் நல்ல "றிசல்ட்" எடுக்க இல்லை எண்டு ஒருக்காமட்டும் ஏசிச்சினம். அதைக் கூட ஆத்திரம்

தீர ஏசுறதுக்கு அவைக்கு நேரமில்லை. அப்பிடி ஏசி இருந்தாக் கூட எனக்கொரு ஆறுதலா இருந்திருக்கும்.

வேணி - காவேரி, நான் உமக்கு ஒரு நல்ல விசுமாசமான சினேகிதியா இருப்பன். என்னை நம்பும்.

காவேரி - வேணி, எனக்கெண்டு மட்டும் நீர் வேணும்.

*(பின்வரும் பாடல் இப்போ ஒலிக்கிறது. இரண்டு அடிகள் மட்டும் "பொருள் தேடும் பூமியில் அருள் தேடும் நெஞ்சம்" - இவ்வேளை ஆசிரியை அங்கு வருகிறா. இருவரது நிலையையும் பார்த்து.)*

ஆசிரியை - என்ன ரெண்டு பேரும் தியானத்திலை இருக்கிறீங்கள்? காவேரி அழுதிருக்கிறீர் போல தெரியுது.

வேணி - ஓம் மிஸ் பாவம் அவ சரியாப் பிரச்சினைப்படுகிறா!

ஆசிரியை - என்ன பிரச்சினை காவேரி நீர் எதையும் என்னோடை கதைக்கலாம் "ட்டீச்சேர்சை" நீங்கள் ஒரு அம்மாவையோ அக்காவையோ போலப் பார்க்க வேணும் "ஸ்கூலும்" ஒரு வீடுதான்.

காவேரி - *(அழுது கொண்டு)* எனக்கு வீடே வீடு போல இல்லை

ஆசிரியை - எனக்கு உம்மடை பிரச்சினை தெரியும். உம்மடை வாயாலை கேக்கிறதுக்காகத்தான் இவ்வளவும் கதைச்சனான். வேணி எல்லாத்தையும் எனக்குச் சொல்லியிருக்கிறா! நான் உம்மடை அம்மா அப்பாவைக் கெதியிலை சந்திப்பன். நீர் எல்லாப் பிள்ளையளோடையும் சேர வேணும். வேணி அதுக்குமக்கு உதவுவா.

காவேரி - என்னாலை எல்லாரோடையும் கதைக்க ஏலாமலிருக்கு மிஸ்!

ஆசிரியை - நீர் தெண்டிக்க வேணும் பிறகு, எவ்வளவு சந்தோசமா இருக்கெண்டதை நீரே கண்டு கொள்வீர். ஒரு கிளாசெண்டா எல்லாப் பிள்ளையளும் நல்ல சினேகிதமா இருக்க வேணும். சண்டை வந்தாப் பிடிக்கவேணும், ஆனால் ஒற்றுமை குலையக் கூடா.!

பவானி - *(வந்து கொண்டு உரிமையோடு)* மிஸ் உங்களை எங்கையெல்லாம் தேடுகிறது. *(வெளியே எட்டிப் பார்த்து)* ஏய் கங்கா, யமுனா எல்லாரும் இங்கே வாங்கோ மிஸ் இங்க ஒளிச்சிருக்கிறா *அனைவரும் வேகமாக ஆரவாரத்தோடு வருவர்*

கங்கா - மிஸ் நீங்கள் சரியான ஆள்!

யமுனா - எங்கை மிஸ் ஒளிச்சிருந்தனீங்கள்?

ஆசிரியை - "ட்டொய்லெட்டுக்குள்ளை" *(அட்டகாசச் சிரிப்பு இடம் பெறும் என்ன அதிசயம் காவேரியும் சற்றுப்புன்னகை பூப்பாள்)*

ஆசிரியை - பிள்ளையள் நாங்கள் நிறையக் கதைக்க இருக்கு!

சுரபி - கதையெண்டால் சந்தோசந்தானே மிஸ்!

ஆசிரியை - இது சீரியசான விஷயம் முதல்லை "கன்டீனுக்குப்" போவம் என்ர கணக்கிலை உங்களுக்கு "றோல்சும் ட்டீயும்", உங்கடை எக்சாம் றிசல்ட் "சுக்காக" *(பிள்ளைகள் குளறிக் கலகலத்தபடி செல்வர்.)*

ஆசிரியை - வாரும் காவேரி, வேணி வாரும் வாரும்

*(வெளியேறுகின்றனர். பின்வரும் பாடல் ஒலிக்கிறது பாடல் இடம்பெறும் வேளையில் கங்காவும் அருளானந்தமும் ஞானாம்பிகையும் எதையோ மிகவும் கனதியான முறையில் விவாதித்துக் கொண்டிருந்தனர். பாடல் முடியத்தான் அவர்கள் பேசுவது எமக்குக் கேட்கும் அதுவரை அபிநயங்களை மட்டும் தான்.)*

*பாடல் :-*

ரகசியம் இல்லாத உள்ளம் கேட்டேன்
உயிரைக் கிள்ளாத உறவைக் கேட்டேன்
வயதுக்குச் சரியான வாழ்க்கை கேட்டேன்
பாசாங்கு இல்லாத பாசம் கேட்டேன்
சுற்றும் காற்றில் சுதந்திரம் கேட்டேன்
சிட்டுக் குருவியின் சிறகைக் கேட்டேன்
பறவைக்கிருக்கும் வானம் கேட்டேன்
நன்றி கெடாத நட்பைக் கேட்டேன்
நினைவில் சந்தனம் மணக்கக் கேட்டேன்
எப்போதும் சிரிக்கிற உதடுகள் கேட்டேன்
துணிவைத் தாங்கும் இதயம் கேட்டேன்
யோகம் தாங்கும் வலிமை கேட்டேன்.

*(திரைப்படம் :- அமர்க்களம், பாடல்:- வைரமுத்து)*

அருள் - கங்கா நீர் என்ன இண்டைக்கு இப்பிடி இருக்கிறீர்?

ஞானா - எல்லாத்தையும் எங்களோடை கதைக்கிறனீங்கள் ஏன் குஞ்சு எதையோ மறைக்கிறீங்கள்?

கங்கா - ஒண்டும் மறைக்க இல்லை எல்லாம் கொஞ்சத்திலை தெரியவரும் *(வெளியே எட்டிப் பார்த்து)* வாங்கோ மிஸ்

அருள் - *(ஆசிரியை வர)* வாங்கோ ட்டீச்சர்

ஞானா - வாங்கோ

ஆசிரியை - இண்டைக்குக் கட்டாயம் வரவேணுமெண்டு கங்கா ஒரே பிடியா நிண்டா! ஏனெண்டு கேக்க வாங்கோவன் எண்டா!

அருள் - எங்களுக்கு என்னெண்டு சொல்ல இல்லை!

ஞானா - கங்கா ஒருக்காலும் இப்பிடி இல்லை, எல்லாம் எங்களோடை கதைப்பா!

ஆசிரியை - ஸ்கூல்லையும் அப்பிடித்தான் எல்லாரோடையும் அவ! *(யமுனா, பவானி, காவேரி, சுரபி ஆகியோர் வருகின்றனர்)* அட, இஞ்ச இவையும் வருகினம். காவேரி இப்பிடித்தான் இருக்க வேணும்.

யமுனா - காவேரி இப்ப அந்த மாதிரி சரியான கலகலப்பு!

ஆசிரியை - அப்ப இனி "த்திறீ சிஸ்டேர்ஸ் செவிண் சிஸ்டேர்ஸ்" ஆகிவிடுவீங்களோ?

பவானி - அப்பிடி வாறதுதான் லட்சியம் ஆனா லட்சியம் நிறைவேறுறது கஷ்டம் தானே மிஸ்.

கங்கா - *(தந்தையிடம், வழமைக்குமாறான அமைதியோடு)* அப்பா இவதான் காவேரி

அருள் - ஆ காவேரி! அப்பா அம்மா இப்ப நேரத்துக்கு வருகினமா?

காவேரி - "ஓமங்கிள், தாங் யூ வெரி மச்" நீங்கள் நல்லா உறைக்கச் சொன்னீங்களெண்டு அவை சொன்னவை 'மிஸ்சு'ம் அவைக்குச் சொல்லியிருக்கிறா.

ஞானா - உங்கடை அம்மா அப்பா நல்லவை தெரியாதா காவேரி, உமக்கு? இப்ப எப்பிடி இருக்கு இந்த மாற்றம்....?

யமுனா - எங்களுக்கெல்லோ தெரியும் காவேரி எவ்வளவு மாறி இருக்கிறா எண்டது!

ஆசிரியை - எங்கை வேணியையும் வைகையையும் காணவில்லை

பவானி - கங்கா, நீ அவைக்குச் சொல்ல இல்லையா?

கங்கா - சொன்னனான்.....

ஆசிரியை - கங்காவை இப்பிடி அமைதியாப் பாக்க அந்தரமா இருக்கு. என்ன சுகமில்லையா பிள்ளை?!

கபிலன் - *(வந்து கொண்டு கையில் குடிபானங்களோடு)* அக்கா எப்ப சுகமா இருந்தவ? எப்பவும் அலட்டல் வருத்தந்தானே! *(பரிமாறுகிறான்)* *(அனைவரும் சிரிக்கலாம்.)*

யமுனா - முந்த நாள் முளைச்சவர், பெரிய பாட்டாக்கதை கதைக்கிறார்

கபிலன் - என்னை என்ன நினைச்சீங்கள்? எனக்கு வயது பதின்னாலு கட்டிளமைப்பருவம் தொடங்கி இரண்டு வருடங்கள்!

பவானி - கட்டிளமைக் காளையே என்னைக் கலியாணம் செய்து கொள்கிறாயா?

கபிலன் - இல்லைப் பெண்ணே, இப்போதைக்கு இல்லை!

காவேரி - அப்போ, இப்போதைக்கு?

கபிலன் - என் அம்மை அப்பனை மட்டுமே காதலிப்பேன்!

யமுனா - இப்போதைக் காலம் முடிந்த பின்?

கபிலன் - அப்போதைக்குப் பார்க்கலாம்!

பவானி - காத்திருக்கவா?

கபிலன் - காத்திருக்கும் வரை மூச்சிருக்கும்!

ஆசிரியை - நல்ல வாலுகள் சேர்ந்திருக்குதுகள்! ஆனால் இண்டைக்குப் பெரிய வால் பேசாமல் இருக்கு! கங்கா என்ன பிள்ளை...?

கங்கா - மிஸ் எனக்கு இப்பிடிச் செய்யிறதை விட வேறை வழி தெரிய இல்லை மிஸ்! இப்பிடி நான் செய்யிறது பிழையோ எண்டு இப்ப நான் யோசிக்கிறன்.

அருள் - சரி கங்கா, இப்ப எண்டாலும் கதைக்கத் தொடங்கியிருக்கிறீர் அது நல்லது.

ஆசிரியர் - ஓம், நீங்கள் சொல்லுங்கோ கங்கா.

கங்கா - சொன்னால், விளங்க வேண்டியவைக்கு விளங்க வேணுமெண்டதுக்காகத்தான் எல்லாரையும் வரச் சொன்னனான். அப்பிடி இருந்தும் வைகையும் வேணியும் வர இல்லை.

சுரபி - வைகைக்கு வீட்டை ஏதோ பிரச்சினையாம்......

யமுனா - ஏன்?

சுரபி - அவேன்ரை அப்பா அம்மா விட மாட்டினமாம்......

ஆசிரியை - என்னத்துக்காக?

சுரபி - வைகைக்கு ஒரு போயோடை...

ஆசிரியை - ஆர் சொன்னது?

சுரபி - அது தெரியாது......

ஆசிரியை - இதென்ன பிள்ளைகள் இது?

அருள் - பிள்ளைகள் எல்லாத்தையும் தாங்களாத் தீத்துக் கொள்ளலாமெண்டு நினைக்கிறதும் பிழை....

ஞானா - இப்பிடி வயதிலை இப்பிடி உணர்வுகளும் வருமெண்டது பெரிய புதினமோ, அதிசயமோ இல்லை.....

ஆசிரியை - அது சரி, உங்களைப் போல எதையும் நிதானமாப் பாக்கிற பெற்றோருக்கு இதுகள் விளங்கும். ஆனால் தொட்டதுக்கும் பதட்டப்படுகிற பெற்றோர் இதுகளைப் பெரிசு படுத்தி தாங்களும் குழம்பிப் பிள்ளைகளையும் குழப்பிப்போடுவினம்.

ஞானா - ஊர்லை உள்ள சிலர் இதுகளை நல்ல சுவையான கதையா எடுத்துக் கொண்டு தேசம் முழுக்கச் சப்பித் துப்பிக் கொண்டு திரிவினம்.

கங்கா - அம்மா, ஊர்லை மட்டுமில்லை வகுப்புப் பிள்ளைகள் சில பேருக்கும் இதுகள் இனிப்பான விஷயம்.!

அருள் - கங்கா நீர் மனதுக்குள்ளை எதையோ வச்சுக் கொண்டு கதைக்கிறீர். முந்தி ஒரு காலமும் நீர் இப்பிடி இல்லை....

கங்கா - ஓமப்பா எதையும் நான் சமாளிப்பன், எந்தப் பிரச்சினையையும் என்ரை தலையிலை கட்டி முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்க விடமாட்டன் எண்டு நான் நினைச்சிருந்தன் கிளாசிலை மற்றப் பிள்ளைகளின் பிரச்சினையளைக் கூடத் தீர்த்து வச்சிருக்கிறன்....

காவேரி - என்ரை பிரச்சினையைக் கூட கங்காவும் யமுனாவும் பவானியும் தான் முனைப்பாக நிண்டு தீர்த்து வச்சவை!

கங்கா - இப்ப எனக்கொரு பிரச்சினை வந்திருக்கு!

ஆசிரியை - உமக்கென்ன பிரச்சினை கங்கா?

கங்கா - வைகைக்கு உண்டாக்கி இருக்கிறது போல ஒரு பிரச்சினையை எனக்கும் உண்டாக்கி இருக்கினம்! எனக்குக் கேசவன் எண்ட ஒரு "போயோ"டை லவ்வாம். அந்தப் பெடியனை நான் கலைச்சுத் திரியிறனாம். இதுகளை இப்பிடிக் கதைச்சுத்திரியிறதிலை சில பேருக்கு ஒரு திறில், ஒரு திருப்தி! இப்பிடி ஏதாவது உண்மையிலை எனக்கிருந்திருந்தால் நான் அதைப் பற்றி முதல்லை அப்பா அம்மாவுக்கும் யமுனா, பவானிக்கும் எங்கடை ட்டீச்சருக்கும் சொல்லுவன்....

அருள் - ஆர் இப்பிடிக் கதைகளைக் கதைக்கிறவை?

கங்கா - *(சுரபியிடம் சென்று)* சுரபி நீர் நல்ல பிள்ளை சத்தியமா... நாங்கள் நர்மதா அக்காவின் கலியாணத்திலை, சும்மா ஒரு பம்பலுக்காக, வைகையையும் ராகுல் அண்ணாவையும் பகிடி பண்ணினம். நீர் சொல்றபடி பாத்தால், அது இப்ப வைகை, வேணி ரெண்டு பேற்றை படிப்பையும் நிறுத்தி இருக்குப் போல இருக்கு. சுரபி, இதிலை எனக்கும் பங்கிருக்கு, எங்களெல்லாருக்கும் தான்... ஆனால் சுரபி நாங்கள் அதை அண்டையோடை விட்டுட்டம். அதுக்குப் பிறகு அண்டை அயல்லை கதை கட்டிக் கொண்டு திரிய இல்லை... ஆனால், ஏன் சுரபி இப்பிடி.?

ஞானா - கங்கா! இதென்ன நீ! அந்தப் பிள்ளையை வீட்டிலை கூப்பிட்டு வச்சுக் கொண்டு?!

கங்கா - நாகரிக மில்லைத்தானம்மா. ஆனால் சுரபி என்ரை "கிளாஸ் மேட்!" அதோடை எனக்கும் அவவுக்கும் எந்தக் கோவமுமில்லை, வைகையோடையும் எனக்கும் சுரபிக்கும் கோவமுமில்லை, நாங்கள் தொடர்ந்தும் "கிளாஸ் மேட்சா" இருக்கப்போறம், சத்தியமா சுரபி எனக்கு உம்மிலை நம்பிக்கை இருக்கு... நீர் கடைசி வரை பொய்சொல்ல மாட்டீர்... விளையாட்டுக்காக நாங்களெல்லாரும் சொல்றனாங்கள் தான்: இல்லையே சுரபி? "பிளீஸ்" என்ன சுரபி? – *(சுரபியின் கண்களில் நீர் ''முட்டிக் கன்னங்களில் வழிந்தோடுகிறது அவள் விம்மி அழுகிறாள். கங்கா அவளை ஆதரவோடு அனைத்துக் கொள்கிறாள். கங்காவின் கண்களும் கலங்கி இருப்பது. தெரிகிறது. இந்த ஒரு கணத்து அமைதியில்'' "பொருள் தேடும் பூமியில் அருள் தேடும்*

*நெஞ்சமே" என்ற பாடலின் வரிகள் சில ஒலிக்கின்றன. – பவானியும் யமுனாவும் அவர்களருகே சென்று)*

யமுனா - சுரபி, அழாதையும் கங்கா....!

கங்கா - சுரபி எனக்குத் தெரியும் நீர் நல்லவ சத்தியமா நல்லவ.....

பவானி - சுரபி இனி அழக்கூடாது. நல்ல பிள்ளையல்லே நாங்களெல்லாரும் மிஸ்சையும் கூட்டிக்கொண்டு நாளைக்கு வைகை வீட்டுக்கு... போவம்....

ஆசிரியை - *(வந்து)* சுரபி அழாதையுங்கோ *(அவளை அணைத்து)* நான் வாறன் வைகை வீட்டுக்குப் போறதுக்கு... பின்னேரம் நாலு மணிக்குப் போவம்.....

அருள் - சுரபி அவகெட்டிக்காறி... என்ன இருந்தாலும் எங்கடை கங்காவும் சின்னப்பிள்ளைதானே.. சீச்சீ நீங்களெல்லாரும் பெரிய பிள்ளையளுந்தான். பெரியாக்களுக்கை பெரிய மனிசரே எத்தினை பிழைகளை விடுறம். நீங்கள் ஒரு பிழையை விட்டுட்டு இப்பிடி நிண்டால்?! நிறையப் பிழைகள் விட்டுத் திருந்தித்தான் பெரியாக்களாகிறம். *(தனது பகிடிக்கு அவர் தானே சிரித்து நிலையைச் சீர் செய்ய முனைகிறார். சிறிது வெற்றியும் காண்கிறார். பிள்ளைகள் சிலர் புன்னகை செய்கின்றனர்.)*

அருள் - கங்கா, நானும் அம்மாவும் வரவே உங்களோடை நாளைக்கு வைகை வீட்டை?

கங்கா - வேண்டாமப்பா, "மிஸ்சும்" நாங்களும் போதும்.

அருள் - சரி சரி நீங்கள் ஓராக்கள், நாங்கள் உங்களோடை சோலிக்கு வர இல்லையப்பா!

கங்கா - தேவையான நிலைமைவந்தா வரத்தான் வேணுமப்பா!

கபிலன் - உங்களுக்கு வேணுமப்பா!! *(அனைவரும் சிரிக்கட்டும் பின்வரும் பாடலோடு திரைமூடிக் கொள்கிறது.)*

*பாடல் :-*

எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
தெளிந்த நல்லறிவு வேண்டும்;
பண்ணிய பாவமெல்லாம்,
பரிதிமுன் பனியே போல்;
நண்ணிய நின்முன் இங்கு,
நசித்திடல் வேண்டும் அன்னாய்!

*(பாரதிபாடல் - தோத்திரப்பாடல்கள் - தெய்வப் பாடல்கள் - 14)*

(யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் 2000ம் ஆண்டு மேடையேற்றப்பட்டது ஆசிரியரே நெறியாள்கை செய்திருந்தார்)

(29.02.2000)

விமர்சனக் கட்டுரை

# பல்வேறு ஆக்கங்களை தாங்கி வரும் மாருதம் - 14

- எஸ்.காயத்ரி -

வவுனியா கலை, இலக்கிய நண்பர்கள் வட்டத்தால் வெளியீடு செய்யப்படும் "மாருதம்" எனும் சமூக, கல்வி, கலை, இலக்கிய சஞ்சிகையின் 14வது இதழ் பல்வேறு ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கியுள்ளது.

தமிழ்த்தூது வணபிதா தனிநாயகம் அடிகள் அட்டைப்படத்தை அணி செய்ய, அடிகளது வரலாற்றுச் சுருக்கத்தை ஏழு பக்கங்களில் எம் முன் கொணர்கிறார் கலாநிதி அகளங்கன்.

சர்வதேச உளநலத் தினத்தில் (11-10-2011) மேடையேற்றப்பட்டதாகக் கூறப்படும்; P.A.C ஆனந்தராஜாவின் சிறுவர் நாடகமான "பாப்பா யானை வீரனல்லோ? சிறுவர்களுக்கேயுரிய மொழி நடையில் பேச்சு வழக்காக அமைந்துள்ளது.

தேசியமட்ட விருதினையும் பலரது பாராட்டுக்களையும் பெற்ற அகளங்கனின் எழுத்துருவிலான "அசோகவனம்" எனும் இலக்கிய நாடகத்தை நெறிப்படுத்திய அனுபவங்களை நினைவு மீட்கும் கந்தையா ஸ்ரீகந்தவேள் இதன் மூலம் ஒவ்வொரு கலைஞரதும் நெறியாள்கை அனுபவங்களைக், குறிப்பாக நாடகத் துறையில் தன் அனுபவப் பகிர்வின் வாயிலாக அழகாக எடுத்துக் கூறுகிறார். கண்கண்ட தெய்வமாம் அன்னைக்கான "அம்மா" எனும் நந்தாவின் பாடலில் தாயின் மகத்துவம் வெகுவாகக் கூறப்பட்டுள்ளது.

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரான மு.கௌரிகாந்தன் அவர்களது மணிவிழாக்காணும் பீடாதிபதி க.பேர்ணாட் அவர்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் பீடாதிபதியின் திறன்களையும், சேவைகளையும், விருதுகளையும் பாராட்டுவதோடு அவரது கல்விப்பணியும், தமிழ்ப்பணியும் மேலும் தொடர வாழ்த்துவதாகவும் அமைகிறது.

தொடர்ந்து வரும் சிவநெறிப் புரவலர் சமூக சஞ்சீவி C.A இராமஸ்வாமி அவர்களின் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் மீதான அகவை அறுபது வாழ்த்துப்பா அழகான எதுகை நயத்துடன் படைக்கப்பட்டுள்ளது. அருட்கலைவாரிதி சு.சண்முகவடிவேல் ஸ்தபதியின் 'அருட்கீர்த்தியில் பெரிதான தட்சணாமூர்த்தி மூர்த்தம்' பற்றியும், அதன் அருட்தத்துவம் பற்றியும் எடுத்தியம்பும் ஆக்கம் அரிய, பெரிய பல தெரியாத விடயங்களை சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்தியம்புகிறது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரான ந.பார்த்திபன் அவர்கள் தன் "சிற்றிலக்கியங்கள். ஓர் அறிமுகக் குறிப்பு" எனும் ஆக்கத்தில் அந்தாதி, கோவை, உலா, கலம்பகம், சோழர் காலத்தில் பரணி, பிள்ளைத்தமிழ், பள்ளு, தூது, சதகம், குறவஞ்சி என்பன பற்றிய குறிப்புரைகளை வழங்கி உள்ளார்.

மாணிக்கம் ஜெகன் அவர்களின் "மாவீரன் பண்டாரவன்னியன்" பாடல் தமிழர் தம் வீரத்தை, பெருமையை வெகுவாகப் பறைசாற்றுகிறது. அதன் கீழ் மாவீரன் பண்டாரவன்னியன் நினைவு விழாவில் (31-10-2013) வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தால் மேடையேற்றப்பட்ட முல்லைமணியின் "பண்டாரவன்னியன்" நாடகத்தில் நடித்த கலைஞர்களின் புகைப்படமும் காணப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

V.S தனபாலசிங்கம், த.தனசீலன் ஆகியோரது தமிழ்மணி அகளங்கனின் அகவை அறுபது நிறைவு வாழ்த்துப்பாக்கள் தனித்தனியே ஓசை நயத்துடன் படைக்கப்பட்டுள்ளன. கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களின் தழிழ் மொழிபெயர்ப்பான "சுதந்திரம்" எனும் கவிதை சிறைவாழ்வின் இன்னல்களை சித்திரிக்கிறது. இதன் மலையாள மூலத்தைப் படைத்தவர் கே.ஐயப்ப பணிக்கர்.

சங்கரன் செல்வியின் ஆக்கத்தினாலான ஆங்கிலக் கலைச் செல்வர் விருது பெறும் திருமதி புவனநாயகி ஐயம்பிள்ளை, திரு சுப்பிரமணியம் பூபாலசிங்கம் ஆகியோரது வாழ்க்கைக் குறிப்புக்கள் மாணவர்களது ஆர்வக்கனலைத் தூண்டுவனவாக உள்ளன.

கந்தையா ஸ்ரீகந்தவேள் அவர்களின் "சின்னச்சிட்டு" எனும் சிறுவர் கவிதை, எதுகை நயத்துடன் படைக்கப்பட்டுள்ளது. நந்தாவின் "குரங்கினங்கள்" ப.எ. அன்ரனின் "உன் சுய மரியாதை", "மதங்கள்", "தானம்", "மனிதம்", ஆகிய கவிதைகள் பெரிய கருப்பொருட்களை சிறிய எழுத்துக்களில் கொண்டுள்ளன.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் "சூடக் கொடுத்த சுடர்க்கொடி" எனும் குறுநாடகம் சிறுவர்களின் களங்கமில்லாக் குழந்தை உள்ளங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களுடனான துஷி ஞானப்பிரகாசம் அவர்களின் நேர்காணல் ஈழத்து கலையின் நிலைமைகளை அலசி ஆராய்ந்து முன்வைக்கிறது. கூத்து, நாடகம், இலக்கியம், மொழிபெயர்ப்பு, இரண்டாம் மொழிக் கல்வி எனும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய அந்நேர்காணலில் அளிக்கப்பட்ட தெளிவான பதில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விரிவுரையை ஒத்து அமைந்துள்ளதாக காணப்படுகிறது.

செல்வி.து.நந்தீஸ்வரி மேற்படி வட்டத்தின் பதினைந்து ஆண்டு நிறைவு விழாப் பதிவுகளைப் பகிரும் வேளை, அகளங்கன் அவர்கள் வவுனியாவின் முதல் புதுக்கவிதைத் தொகுப்பு பற்றிய குறிப்புக்களை வழங்குகிறார்.

நா.தியாகராசா அவர்களின் "திரை இசையில் சாதனை படைத்த P.B ஸ்ரீநிவாஸ்" எனும் படைப்பு, ஸ்ரீநிவாஸின் வரலாற்றையும் திரையிசைப்பயணத்தையும் ஒரு திரைப்படத்தில் பார்ப்பது போன்றதான உணர்வைக் கொடுக்கிறது.

ஆங்கில பாடம் தொடர்பில் மாணவர்களிடையே விழிப்புணர்வு ஊட்டும் வகையில் தான் எழுதிக் கொண்டிருக்கும் நூலின் கருப் பொருளைத் தருகிறார் சு.பூபாலசிங்கம். ஓய்வு நிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளரான இவரின் "ஆங்கிலம் கற்பது எப்படி? எவ்வாறு ஆங்கிலம் கற்க வேண்டும்?"எனும் ஆக்கம் ஆங்கில இலக்கண விடயங்களை அழகாகக் கூறுகிறது.

சங்கர செல்வியின் கலை இலக்கியப் பதிவுகளும் த.பிரதாபனின் முழுநிலா நிகழ்வுகளின் பதிவுகளும் இலக்கிய நிகழ்வுகள் பற்றிக் குறிப்பிடுகின்றன. இங்கு சங்கர் செல்வி சர்வதேச மட்டத்தில் தன் கலை இலக்கியப்பதிவுகளை முன்வைக்கும் வேளையில் த.பிரதாபன் வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை முன் வைக்கிறார்.

'கறுப்புச் சூரியன் நெல்சன் மண்டேலாவுக்கு' எனும் அகளங்கனின் ஒரு கவிதையும் அமரர்கள் இ.கா.கணபதிப்பிள்ளை, க.தர்மதேவன், க.முருகையா மா.மார்க்கண்டு, க.ரணேஷ் ஆகியோருக்கான அஞ்சலிகளும், நிகழ்வுகள் சிலவற்றின் நிழற்படங்களும் நிறைவாக உள்ளன. அட்டைப்படம் உள்ளடங்கலான 100 பக்கங்களிலான இச் சஞ்சிகை பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி கைகளில் தவழ்வதோடு மதிப்பீடு செய்வதற்கு ஏற்ற ஒன்றாகவும் விளங்குகிறது. -நன்றி: வீரகேசரி (சங்கமம்)

# மழலை இன்பம்

- நந்தா -

பூமொழியே
பூவிசையே
உயிர் நனைக்கும்
தேன்மழையே – நீ
அழுதால் - நானும்
அழுகின்றேன் - உன்
ஒவ்வோர் அசைவிலும்
உயிர்க்கின்றேன்.
(பூமொழியே)

கானல் நீரான
என் வாழ்வில் - நீ
கனியாய் வந்து
விழுந்தாயே.
மழலை மொழியில்
உயிர் கடைந்தாய்.
என் மனதின்
கர்வம் நீக்கிவிட்டாய்.
(பூமொழியே)

பாஷை இல்லா
உன் மொழியில்
பால் அமுதம்
வடிகிறதே!
உலகப் பாஷை
அத்தனையும்
உனக்கு மட்டும்
புரிகிறதே - உன்
பாச மழையில்
நனைகின்ற - இந்தப்
பந்தம் எனக்கு பிடிக்கிறது – நீ
சிந்தும் சிரிப்பு முத்துக்கள்
வானில் தெளித்த
விண்மீன்கள்!
(பூமொழியே)

அழகு என்று வந்துவிட்டால்
உன்னைவிட யாருமில்லை
அன்பு என்று வந்து விட்டால்
எந்தத் தாயும் உனக்கு
நிகரில்லை

பிஞ்சுப் பாதம் தரும் இன்பம்
பிறவிப் பயனை அடைத்திடுமே.!
எந்தத் துன்ப நிலையையுமே
உந்தன் அன்பு
உடைத்திடுமே!
(பூமொழியே)

வானவில்லாய்
உனைக் கண்டேன் - ஒரு
மாயவில்லாய்
உனைக் கண்டேன்
சாயம் இல்லா
உன் உதடுகளில்
சரித்திரமே
சரியக் கண்டேன்
எழில் கொஞ்சும்
கோலமயில்
உந்தன் அழகில்
நான் கண்டேன் - நீ
இமைகள் கொட்டும்
கணப் பொழுதில் - என்
இதயம் சங்கீதம்
இசைக்கக் கண்டேன்.
(பூமொழியே)

நீலாம்பரியில் உனை
தூங்க வைத்த
நீண்ட பொழுதுகள்
மாண்டதம்மா!
நெடுந்தொடர் நாடகக்
கூத்துக்களும்
துள்ளிசை எனும்
பாட்டுக்களும் உனக்கு
என்ன சொல்லித்தரப்போகுதோ?
என் ஊமை நெஞ்சம்
துடிக்கிறது
உயிரே காதை
மூடிக் கொள்
காற்றில் அமிலம்
கசிகிறது.
(பூமொழியே)

# வெற்றுத்தூறல்

- மைதிலி தயாபரன் -

நேற்றைய பொழுதிலே
வான் நோக்கி நான் பார்க்கையில்
நீர்ப்பிடிப்பாகக் கருமையாக
நின்றவளே
இன்று வெளிறியதேனோ!

உன்னைத் தேடும் என்னை விட்டு
எங்கோ சென்று
இதழைப் பரப்பினையோ...?

உஷ்ணம் தருகையிலே
உன் இடம் இதுவென்றாய்
ஆக்கையை ஆக்கிடவே - என்
ஆவியில் நீர் கொண்டாய்!

உயரப் போனதுமே - உன்
உறைவிடம் மறந்ததுவா?
மாருதியின் பிடியிலேறி
மாளாது அலைந்துலைந்து
மலைகள் முட்டியதாலே - அங்கு
மழையைப் பொழிந்தனையா?

நீர் கொடுத்த நிலை நானிங்கே
நீட்டித்து நிற்கின்றேன்.
ஓடி வந்த துளி நீர் சேர்த்த
குளமல்லவா இது!

மேலும் சேர்க்க வேண்டும் நீர்
செழிக்க வேண்டும் வயல்
ஓங்க வேண்டும் பொருளாதாரம்.

தேவையென நானிருக்க
தேடிச் சென்றடைந்து
மலைமேற் பொழிந்தனையா!
மண் சரிவை உருவாக்கி
மக்களைக் காவு கொண்டனையா!

மனதற்ற மனிதன் போலே
மதியற்ற செய்கையுனக்கு
ஓட விதியின்றி
ஓடுவாய் வெள்ளமாய்
சேர இடமின்றி
சேருவாய் கடலுடன்

கடலுக் கென்ன தண்ணீர்ப் பஞ்சமா?
நீ இல்லாவிட்டால் அது
வாழாது வீழ்ந்திடுமா

நீர் கொடுக்கும் நீ...
ஒரு வெற்றுத் தூறல்
சேரிடம் புரியாமற் சேரும்
மனிதரைப் போல்
செய்ய வேண்டிய நேரத்தில்
செய்ய வேண்டியதை விட்டு
என்னனென்னவோ செய்கின்றான்.

கேட்டால்....
காற்றுள்ளபோதே
தூற்றிக் கொள்கிறானாம்

மற்றவர்க்குதவா மனிதன் என்றும்
மக்கட் பதரே
பருவத்திற் பெய்யா மழையே நீயும்
வெற்றுத் தூறலே.!

# இயற்கையின் அழகு

தரணிகா

தாயின் அன்பு
மழலையின் சிரிப்பு
இதமாக வீசும் தென்றல்
தென்றலோடு கலந்து வரும்
மலரின் வாசம்
புல்லின் மேல் பனித்துளி
காதலை யாசகம் கேட்கும்
காதலன்
கரை தொட்டுவிட துடிக்கும்
கடலலை
பகலில் சுடும் கதிரவன்
இரவு வானின் நாயகன்
மலரின் மௌனம்
மொனம் கலைக்கும்
குயிலின் கூவல்.
சூரியனுக்காய் தவமிருக்கும்
சூரியகாந்தி
மழைக்காய் தவமிருக்கும்
மரங்கள்
இவை
இயற்கையின் இயற்கையான
அழகுகள்
ஒன்றோடொன்று கொண்டுள்ள
காதலின் பிணைப்பு
இவ்வுலகத்தின் படைப்பு



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
ஓய்வுநிலைப் பீடாதிபதி திரு.க.பேனாட்
அவர்கள்

மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவர்
வண.பிதா.தமிழ்நேசன் அடிகளார்
அவர்கள்



கட்டுரை

# "கலாகீர்த்தி" பேராசிரியர், கலாநிதி பொ.பூலோகசிங்கம்

- முருகேசு கௌரிகாந்தன் - சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

*அறிமுகம்*

தமிழுக்காகத் தங்களை அர்ப்பணித்து அரிய பல பணிகளை ஆற்றிய - ஆற்றிவருகின்ற எமது நாட்டைச் சேர்ந்த தமிழ்க் கல்விமான்களைப் பற்றி அவர்கள் மறைந்தாலென்ன எம்முடன் இப்போதும் வாழ்ந்து கொண்டிருந்தாலென்ன வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருந்தாலென்ன அவர்களின் பணிகள் தொடர்பாகப் பேசுவதும் எழுதிக் கொண்டிருப்பதும் நன்றிக்கடன் செலுத்துவதும் பயன்மிக்கதுமான முயற்சியென்று தெரிகிறது.

பொ.பூலோகசிங்கம் அவர்கள் நீண்டகாலமாக எமது நாட்டிலுள்ள கொழும்பு, களனி, பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களிலே விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் பணியாற்றி தற்போது அவுஸ்ரேலியாவிலுள்ள சிட்னி நகரில் வாழ்கின்றார். இலங்கை, அவுஸ்ரேலியா ஆகிய இரு நாடுகளிலும் வாழும் உரிமையினைப் பெற்ற பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்கள் உலகம் வாழ் தமிழ் அறிஞர்களாலும் பிறமொழி பேசும் அறிஞர்களாலும் நன்கு மதிக்கப் பெறுபவர்.

பேராசிரியர் பூலோகசிங்கம் 1936 ஆம் ஆண்டு சித்திரை முதலாந் திகதி வெங்கலச் செட்டிகுளத்தைச் சேர்ந்த கதிரவேலு பொன்னையா உடையார் (29.09.1901 - 23.12.1949) அவர்களுக்கும் சோதிரத்தினம் அவர்களுக்கும் நான்காவது புத்திரராகப் பிறந்தார். ஆரம்பக்கல்வியை செட்டிகுளம் அரசினர் தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை யாழ் சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்றுத் தேறி அங்கிருந்து இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு (பேராதனை) அனுமதி பெற்று அங்கே 1961 ஆம் ஆண்டு தமிழில் முதலாம் வகுப்புச் சித்திபெற்றார். பேராசிரியர்களான வி.செல்வநாயகம் (1907 - 1973) ஆ.சதாசிவம் (15.02.1926 - 01.07.1988) ச.தனஞ்சயராசசிங்கம் (01.01.1933 - 26.10.1977) சு.வித்தியானந்தன் (08.05.1924 - 22.01.1989) ஆகியோரின் மாணவர் 1963 - 1965 காலப்பகுதியிலே பிரித்தானிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலே திராவிடமொழியியல் அறிஞர் தோமஸ் பரோவின் (T.Burrow) கீழ் மொழியியல் ஆய்வினை மேற்கொண்டு டாக்டர் பட்டம் பெற்றவர். இறுதியாக 1997 ஆம் ஆண்டு பேராதனைப்பல்கலைக்கழகத்திலிருந்து விலகி அவுஸ்ரேலியாவுக்குச் சென்றார்.

*இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு பேராசிரியரின் பங்களிப்பு*

இவர் தமிழ் இலக்கியத்தில் "ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள்", 'ஈழம் தந்த நாவலர்' (1993) 'நாவலர் பண்பாடு' (2000) 'சிலப்பதிகார யாத்திரை' (2002) Poet Tambimuttu - A profile ஆகிய நூல்களின் ஆசிரியர். இந்துக் கலைக்களஞ்சியம் பகுதி I (1990), பாவலர் சரித்திர தீபகம் என்பனவற்றின் பதிப்பாசிரியர். உலாப்பிரபந்த வளர்ச்சி (1963) அரனடியாரும் அகப்பொருளும் (1967), பண்டைத்தமிழ் இலக்கியத்தில அகப்பொருள் நெறி (1969), சுப்பிரமணிய பாரதியாரின் உரைநடை (1983), இலங்கையில் முருக வழிபாடு (1996), முருக வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் (1999), முதலான இலக்கியக் கட்டுரைகளையும், தமிழ் இலக்கண விசாரம் (1990), தமிழ் மொழியியல் -

இலக்கணப்பிரச்சினைகள் (1991), முதலான இலக்கண கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

சென்ற செப்டம்பர் மாதம் மஹரகமவில் உள்ள தேசிய கல்வி நிறுவகம் நடாத்தும் கல்விமாணிப் பட்டக் கற்கைநெறியில் அடங்கும் 'தமிழ்மொழியும் பண்பாடும்' பாடத்திட்டத்தைச் செம்மைப்படுத்தும் செயலமர்வில் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கே செயலமர்வைத் தலைமையேற்று நடாத்திய பேராசிரியர் கலாநிதி.செ.யோகராசா (பேராசிரியர் பூலோகசிங்கத்தின் மாணவர்) அவர்களால் எழுதப்பெற்ற இரண்டு கட்டுரைகள் ஈழத்துத் தமிழ் இலக்கியம் கற்போர்க்கு மிகவும் உபயோகமான தென்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார். அவரது கருத்தினால் தூண்டப்பட்டே இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

கட்டுரைத் தலைப்பைத் தீர்மானித்துக் கொண்டு, பேராதனைப் பல்கலைக்கழகத்திலே முதுகலைமாணி (தமிழ்) கற்கின்ற காலத்திலே ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றினைக் கற்பித்த பேராசிரியர்.இரா.வை.கனகரத்தினம் அவர்களிடம் கட்டுரை எழுதும் எனது முயற்சிபற்றிக் கூறினேன். அவர் "நல்ல விடயம்" என்ற கூறி, "முதன்முதலில் பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்கள்தான் பல்கலைக்கழகத்திலே ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கான பாடத்திட்டத்தை தலைமையேற்று எழுதிக் கொடுத்தார். கலாநிதி பூலோகசிங்கம் எங்களுக்கு முதலில் படிப்பித்தார். நாங்கள் உங்களுக்குப் படிப்பித்தோம். கலாநிதி பூலோகசிங்கத்திற்குப் பின்னர் தான் ஏனையோர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு படிப்பிக்கத் தொடங்கினார்கள். இதுதான் வரலாறு ஆனால் இன்று யார் யாரையோ எல்லாம் ஈழத்து இலக்கிய வரலாறு கற்பித்தலில் முன்னோடிகளாகக் கூறுகின்றார்கள் என்று கேள்விப்படுகிறேன்" என்று கூறினார். இனி பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்கள் கூறுவதையும் நோக்குவோம்.

"மேலிடத்தினர் புதிய பாடத்திட்டம் ஒன்றினை அமைக்குமாறு சகல துறைகளையும் பணித்தனர். கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி ஆ.சதாசிவம் அவர்களின் தலைமையிலே தமிழ்த்துறையின் புதிய பாடத்திட்டத்தை வகுக்க முனைந்தோம். தமிழை முக்கிய பாடமாகக் கொண்டு, பயில்பவர்களுக்கு "ஈழுத்துத் தமிழ் இலக்கியம்" எனவொரு பாடத்தை முதன்முதலாக நாங்கள் அளிக்க முன்வந்தோம். அதன் பாடத்திட்டத்தை வகுக்கும் பணியிலே ஈடுபட்டபோது ஈழத்தின் பழைய தமிழ் இலக்கியத்திற்குப் பரிச்சயமாயினேன்" (தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள் 1970, முன்னுரை, பக் VII)

1968ஆம் ஆண்டு கொழும்பு வளாகம் தனிப் பல்கலைக்கழகமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், அங்கே இந்துநாகரிக பாடத்தைச் சிறப்புப்பாடமாகக்கற்ற இன்று பிரபல்யம் பெற்று விளங்கும் பேராசிரியை திருமதி கலைவாணி இராமநாதன், திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் ஈழத்தமிழ் இலக்கியத்தை பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்களிடம் உபபாடமாகக் கற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களிலே பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் "தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்" என்ற நூல் எவ்வாறு முக்கியத்துவம் பெற்றதாகப் பேசப்படுகின்றதோ அவ்வாறே இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்று நூலுக்கு பேராசிரியர் கலாநிதி பூலோகசிங்கம் அவர்களின் "தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள்" எனும் நூல் விளங்குகின்றது. சைமன் காசிச்செட்டி அவர்கள் தந்த "தமிழ்ப்புலவர் சரிதம்" "தமிழ் இலக்கியத்துக்கு நாவலர் புரிந்த பணி", "கனகி புராணம்", "பாவலர் சரித்தர தீபம்", "பதிப்புப் பேராசிரியர்

தாமோதரம்பிள்ளை" எனும் ஐந்து கட்டுரைகளைக் கொண்டு இந்நூல் காணப்படுகின்றது. ஆய்வுநோககோடு அடிக்குறிப்புக்கள் கொடுக்கப்பட்டு மிகவும் ஆழமாகவும் அகலமாகவும் தெளிவாகவும் கட்டுரை ஒவ்வொன்றும் எழுதப்பட்டுள்ளமை தமிழின் பேரால் பேராசிரியரை நேசிக்க வைக்கின்றது. இது தவிர இவரது "ஈழம் தந்த நாவலர்", "நாவலர் பண்பாடு" எனும் இரு நூல்களும் ஈழத்தமிழ் இலக்கியத்துக்கு அரிய பங்களிப்பே எனலாம்.

நூலாக்கப் பணியைத்தவிர, நூற்பதிப்புப் பணியும் இவரின் பணிகளில் முக்கியமானதொன்றாகும். இந்தவகையில் அ.சதாசிவம்பிள்ளை (1820 - 1895) அவர்களின் பாவலர் சரித்திர தீபகம் பகுதி I (1975 இரண்டாம் பதிப்பு, 2001 மீள்பதிப்பு), பாவலர் சரித்திர தீபகம் பகுதி 2 (1979 - 2001) என்பனவற்றை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடாகப் பதிப்பித்தமையினைக் குறிப்பிடலாம். இவையிரண்டுக்கும் இவரால் எழுதப்பட்ட ஆராய்ச்சிக்குறிப்புகளும் பகுதி 1இல் இவரால் எழுதப்பட்ட பதிப்புரையும் இந்த நூலை ஆய்வுநோக்குடன் படிக்கவும் இதற்குமுன் தோன்றிய சைமன் காசிச்செட்டி (1807 - 1860) அவர்களின் தமிழ் புளூராக் நூலையும் படித்து ஈழத்து இலக்கிய அறிவை விருத்தி செய்து கொள்ளவும் பெருந்துணை புரிவனவாகும்.

1974 ஆம் ஆண்டு முன்னர் குறிப்பிட்ட மாநாட்டு மலரிலே, "ஈழத்துத் தமிழ் இலக்கியம்" (பதினெட்டாம் நூற்றாண்டுவரை) "பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் வளர்ச்சி" எனும் இரு கட்டுரைகளையும் எழுதிய காலத்திலே அவற்றைப் படித்த பலர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி தொடர்பாக இவரின் தனியான நூல் வெளிவரப்போகின்றதென்று எதிர்பார்த்தனர். அது நடைபெறவில்லை.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு மேலும் பயன்படக்கூடிய இன்னொரு கட்டுரை "ஈழத்துப் புராணங்கள்" (திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சனமலர், 4.7.1976). எட்டுப்பக்கங்களைக் கொண்ட நீண்ட இக்கட்டுரை வெளிவந்த பின்னர் தான் ஈழுத்துப் புராணங்கள் தொடர்பாக மேலும் பலர் கவனஞ்செலுத்தி எழுதியமை இவரின் கட்டுரையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டப் போதுமானதாகும்.

இது தவிர "உலகியல் விளக்கம்" (1969) "தத்தை விடுதூது" (1972) "தமிழ் ஈழுமும் தமிழ் இந்தியாவும்" (1977) "கோணேசர் கல்வெட்டு" (1993) "ஈழத்து இசுலாமிய இலக்கியம்" முதலான இவரது கட்டுரைகளும் இலங்கைத் தமிழ இலக்கிய வரலாற்றுக்கு வளம் சேர்ப்பானவாகும்.

பேராசிரியரால் அவ்வப்போது அரும்பாடுபட்டு பத்திரிகைகளிலும் ஆண்டிதழ்களிலும் சஞ்சிகைகளிலும் எழுதப்பட்ட காலத்தால் அழியாத பெறுமதிவாய்ந்த பல கட்டுரைகளைப் பலர் இன்றும் பேணி வைத்திருக்கின்றமையினை அறிவோம். எடுத்துக்காட்டுக்கு கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க வெளியீடான இளந்தென்றல் 1969/70 இல் பேராசிரியரால் எழுதப்பட்ட கனகி புராணம் என்ற கட்டுரை ஒன்றுக்காகவே அச்சஞ்சிகையினை எமது இல்லத்தில் அக்காலந்தொட்டு பேணிவந்தமையினைக் குறிப்பிடலாம்.

ஈழத்து இலக்கியம் தொடர்பாக பல தலைப்புக்களிலே எழுதப்பட்ட பேராசிரியரின் கட்டுரைகளும் அவற்றின் பின்னாற் கொடுக்கப்பட்டுள்ள உசாத்துணைகளும் ஈழத்து இலக்கியம் தொடர்பான பல மூல நூல்களைப் படிக்கவும் தேடலுடனான கற்றலை மேற்கொள்ளவும் அண்மைக்காலங்களில் தோன்றிய இலங்கைத்தமிழிலக்கிய வரலாறு தொடர்பான நூல்களின் தாரதம்மியங்களை அறிந்து தரமான கட்டுரைகளையோ, நூல்களையோ எழுதவும் அருந்துணை புரியும், எனவே தனித்தனியாக இருக்கும் கட்டுரைகளை ஒழுங்குபடுத்தி நூலாக வெளியிட்டால் ஈழத்தமிழலகு பெரும்பயனை அடையும்.

நாடக விமர்சனம்

# "எங்கள் தோள்களில்" விழிப்புணர்வு நாடகம்

## (ஒரு கண்ணோட்டம்)

- பாரதி -

மனிதன் என்றால் அவனுக்கு மொழி, மதம், பழக்க வழக்கம், உணவு, உடை, கலை எனப் பல்வேறு அடையாளங்கள் உண்டு, தான் சார்ந்த சமுகத்தின் அடையாளங்களை ஒருவன் தவிர்க்க நினைக்கையில் அவன் காணாமல் போய்விடுவான். தொன்று தொட்டு இவ்வடையாளங்கள் பேணப்பட்டு வருதலே பண்பாடு எனப்படுகிறது.

ஆனால் நவீனமயமாக்கலுக்குள் சிக்குண்டு நான் யார்? என் அடையாளம் என்ன? எனத் தெரியாமல் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனக் காலத்தை ஓட்டும் ஒரு நிலைப்பாடே எம்மிடம் ஓட்டிக் கொண்டுள்ளது. இதனால் வாழ்வில் சலிப்பும் சோர்வும் பற்றின்மையும் மேலெழுகின்றன.

உண்பதும், உடுப்பதுமாய், ஏதோ இருக்கிறோம் என்ற விரக்தி நிலை வாழ்வு முறையும், எப்படியாவது வாழ்ந்து விடுவோம் என்ற வன்முறைப் போக்கு வாழ்வுமுறையும் எம்மிடையே நிலவுகின்றன. இத்தகைய வேண்டப்படாத மாற்றங்களைக் களைந்து, தக்கதோர் பண்பாடு சார்ந்த வாழ்வு முறையை நிலைநிறுத்த, பல்வேறு காப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பண்பாடு சாரந்த வாழ்வியல் ஓட்டத்தை செம்மைப்படுத்த பொருத்தமான வலிமைநிறைந்த ஊடகம் வீதியோர நாடகங்கள். இதனை உணர்ந்து கொண்ட வடமாகாண கல்வி மற்றும் கலை பண்பாடு விளையாட்டுத் துறை அமைச்சு, பிரதேச செயலகங்கள் ஊடாக பண்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்த வீதிநாடகங்களை ஆற்றுகைப்படுத்தும் நிகழ்ச்சி நிரலை ஏற்பாடு செய்தது. இச் செயற்றிட்டத்தினூடாகவே "எங்கள் தோள்களில்" எனும் வீதி நாடகம் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின் கிராமங்கள் தோறும் ஆற்றுகை செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை பதினைந்து ஆற்றுகைகளைக் கடந்துள்ள இவ் வீதி நாடகத்தின் ஆரம்பம், வீச்சு நிறைந்த பாடல் வரிகளுடன் ஆரம்பமாகின்றது "நம்நாடு சீரழிஞ்சு பாழாகித்தான் மாறிப்போச்சு, பண்பாடு நாகரீகம் மண்ணாகித் தான் ஆகிப்போச்சு", "பெரியோரைப் பேணுவது மடமை என்றே ஆகிப்போச்சு, பெற்றோரைப் பேணுவது தொல்லை என்றே ஆகிப்போச்சு", "சிறியோரைப் பேணுவதெல்லாம் சீரழிஞ்சு போயே போச்சு, கலைகளைக் காப்பதெல்லாம் காணாமலே போயே போச்சு".

எனப் பாடி ஆடி சபையோரை முதலில் தம்மோடு இணைத்து கட்டிப் போட்டுவிட்டனர் ஆற்றுகையாளர். முற்பாடலூடாக முதியோர் இல்லங்கள் அநாதை இல்லங்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் மரபுக் கலைகளின் நிராகரிப்பு என்பனவற்றை எடுத்தியம்பி ஆற்றுகைக்குள் நுழைந்தனர்.

இளைஞர் அணியை குறி வைத்து ஆற்றுகை நிகழ்த்தப்பட்டது. இந்த ஆற்றுகையின் நடிகர்கள் அனைவரும் இளையவர்கள் தான். அவர்களது நடிப்பாற்றல் அவர்கள் இந் நாடகத்தினூடாக வெளிப்படுத்த முனைந்த சமூகப் பொறுப்பை வெளிப்படுத்துவதாகவே இருந்தது. நடிகர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

எங்கள் தோள்களில்...." முதன் முதலில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் பதினாறாண்டு நிறைவு விழாவிற்காக மேடை நாடகமாக மேடையேற்றப்பட்டது. தொடர்ந்து வவுனியா பிரதேச செயலக கலை இலக்கிய விழாவில் மேடையேற்றப்பட்டது. பின் வவுனியா பிரதேச செயலகத்தின் கலாசார விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டத்திற்காக வீதி நாடக வடிவில் மாற்றம் செய்யப்பட்டு தற்போது ஆற்றுகை செய்யப்படுகிறது.

இன்றைய சமூக ஓட்டத்தின் இருவேறுபட்ட நிலைகளை, அதாவது தமது பாரம்பரியம் பண்பாடு என்ன என்ற அறியாமை காரணமாக தாம் காண்பதெல்லாம் தமது பண்பாடு என்று பின்பற்றி வாழும் மக்களின் அபாய வாழ்வு முறையைக் காட்டுவதோடு அவ்வபாய வாழ்வு நிலையிலிருந்து அவர்களை மீட்டெடுக்கும் பணியையும் இவ்வாற்றுகை சமாந்தரமாக சுமந்து செல்கின்றது.

வீதியோர நாடகக் காட்சிகள் பார்வையாளரிடையே மிக்க குறுகிய நேரத்தில் உள்ளத் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற, விளக்கம் மிக்க எளிமையான காட்சிகளாக அமைக்கப்பட்ட வேண்டும். இல்லையெனில் பார்வையாளர் கணப்பொழுதில் நாடகத்தில் இருந்து விடுபட்டு வெளியேறிவிடுவர். இந்த நாடகம் பார்வையாளரை இறுதிவரை தன்னுடன் உறவாட வைத்துக் கொண்டேயிருந்தது. இதுதான் இந்நாடகத்தின் வெற்றிக்கான அத்திவாரம் எனலாம்.

இந்த ஆற்றுகையின் போது பார்வையாளர் அதிகம் வாய்விட்டுச் சிரித்தபடியே இருந்தனர். அவர்களை மிகிழ்வு நிலையில் ஆற்றுகை அதிக நேரம் தன்னுடன் கூட்டிச் சென்று கொண்டிருந்தது.

ஆடுகின்ற மாட்டை ஆடியும் பாடுகின்ற மாட்டை பாடியும் கறப்பது போல நகைச்சுவையில் திளைத்திருந்த பார்வையாளருக்கு இடையிடையே தோன்றிய உரைஞன். நாடகம் சொல்ல வந்த செய்திகளை ஆடிப்பாடி அழுத்தி எடுத்துரைத்த விதம் சிறப்பாக இருந்தது. உரைஞன் வருகையானது, பார்வையாளர் தாமாக சிந்தித்து மீள்வதற்கு உதவியாக இருந்தது.

இனி நாடகம் சொன்ன செய்திகளை தொட்டு வருவோம். நவீன தொழில்நுட்ப தொடர்பாடல் வளர்ச்சிக்கு ஆட்பட்ட பெற்றோரும் பிள்ளைகளும், அதனை அப்படியே உள்வாங்கி பின்பற்றி தவிக்கிறார்கள். தாம் உள்வாங்கும் மாற்றங்கள் தமது முன்னேற்றத்திற்கும், வாழ்வின் இருப்பிற்கும் பொருத்தமானவையா என சிந்திக்க மறுக்கிறார்கள். இவ்வாறு சிந்திக்க மறுக்கும் மக்கள் கூட்டத்தை நாடகம் காட்சிப்படுத்திச் செல்கிறது.

நிறக் கண்ணாடிகளையும் ஒற்றைத் தோடுகளையும், மிகக் குறைந்த துணியில் தைத்த ஆடைகளையும் அணிந்து, கொக்கோ கோலா போன்ற பானங்களை அருந்தியபடி உலாவரும் இளைஞர் கூட்டம் பார்வையாளருக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

கட்லட், பற்றிஸ் கேக் தான் எமது பாரம்பரிய சிற்றுண்டிகள் என சிறார்கள் கூறுகின்றனர். பொங்கலும் மோதகமும், அரியதரமும் ஒளிக்கப்பட்டுவிட்டன. இவற்றை உண்பதும் உண்ணக் கொடுப்பதும் அநாகரிகம் என அஞ்சுகிறார்கள். தமிழர் ஆடைகளான வேட்டியும் சேலையும் நாகரிகமற்றவை என்ற விஷ விதை விதைக்கப்பட்டுள்ளது. இவற்றை ஆற்றுகை, பெற்றோரின் ஆதங்கங்களாக நன்கு வெளிப்படுத்துகிறது.

இளம் யுவதி ஒருத்தி, இளைஞனின் காதலை நிராகரித்து விட்டாள் என்பதற்காக அவளை முகநூலினூடாக மிக மோசமான ஒரு விபச்சாரியாக சித்திரித்து அவளது உயிரையே காவு கொண்டதை இளைஞர் அடாவடிகள் மூலமும், பிள்ளையை இழந்த ஒரு தாயின் ஓங்கி அறைந்த ஒப்பாரி அலறல் மூலமும், இன்று உடனடியாக சட்ட நடவடிக்கை மூலம் ஒடுக்கப்பட வேண்டிய சில அவலங்களை புட்டுக் காட்டிச் செல்கிறது ஆற்றுகை.

"பார்ட்டி" என்ற விருந்துபசார சீர் கெட்ட கோலங்களை ஒரு காட்சி விபரிக்கின்றது. மேலைத் தேய மதுவகைகளும், மேலைத்தேய இசையும் மேலைத்தேய நடனமும் தான் பார்ட்டியின் மூல வேர்கள். இன்று பார்ட்டி வை என்று பெற்றோரை பத்து வயதுப் பிள்ளை கூட கட்டாயப்படுத்துகிற இதன் அத்தியாவசியத்தை ஆற்றுகை முன்வைத்து நகர்கிறது.

தான் மட்டுமே உண்டும் உடுத்தும் குடித்தும் வாழப்பிறந்தவன் மனைவியும் பிள்ளைகளும் தனக்காக - உழைக்கப் பிறந்தவர்கள் என்னும் மனநிலை கொண்ட உழைக்கச் சோம்பற்படும் கணவன் பாத்திரம் நிறைய சிந்திக்க வைக்கிறது. தன் சிறு குழந்தை கெஞ்சியும் கொஞ்சியும் கேட்டும் மனமிளகாது தனக்கு மட்டும் முட்டை பொரிப்பித்து உண்ணும் தந்தை யொருவன் இங்கு முகமூடி கிழித்து முன்னிறுத்தப்படுகிறான். இப்படியான பந்த பாசமற்ற தந்தைகள் எம்மிடையே உள்ளார்கள் என்பதை பார்வையாளர் பிரித்து இனங்காண்பர். இப்படிப்பட்ட சில தந்தையர் தான் தம் பெண்குழந்தைகளை பாழாக்கிப் புதைப்பவர்களும் கூட.

இன்றைய சமூகத்தினை ஆட்டிப் படைக்கும் மிகப் பெரிய தொற்று நோய் லீசிங் எனப்படும் கடன் கொள்வனவு முறைதான். "லீசிங்" பெற்ற பல குடும்பப் பெண்கள் கட்டுப் பணத்திற்காக கற்பை விற்கும் அல்லது இழந்து போகும் துர்ப்பாக்கியங்கள் இன்னும் பரவலாக வெளிக்கொணரப்படவில்லை. இதன் தொடர் சங்கிலியாக லீசிங்கில் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்து உல்லாசமாய் உலா வந்த உழைப்பற்ற இளைஞன் முன்னிறுத்தப்படுகிறான். கட்டுப்பணம் செலுத்த அவன் ஓர் பெண்ணின் தங்கச் சங்கிலியை வழிப்பறி செய்து மாட்டிக் கொள்கிறான். அவன் தொலைக்கப்போகும் வசந்தங்கள் முன்னெச்சரிக்கையாக இங்கு காட்டப்படுகின்றன.

தெருவோரங்களும், சந்திகளும் உடலுழைப்புக்கு அஞ்சும் இளைஞர்களின் இருப்பிடங்களாகி, பண்பாட்டுச் சிதைவுக்கு வழிகோலும் இடங்களாக விளங்கும் விதம் காட்டப்பட்டது. இக்காட்சி பார்வையாளராக இருந்த இளைஞர்சிலரை எதிர்ப்புணர்வை காட்டத் தூண்டிவிட்டு விட்டது. குடும்பங்களின் குச்சு வீடாகவும பார்ட்டி நடக்கும் ஆடம்பர வரவேற் பறையாகவும் இளைஞர் வெட்டிப் பொழுது கழிக்கும் தெருவாகவம் போக்குவரத்து நெரிசல் மிக்க வீதியாகவும் நம்பிக்கையோடு சடங்காற்றும் குலதெய்வ இருப்பிடமாகவும் எனப் பல களங்களை ஆற்றுகைத்தளம் முன்னிறுத்தியிருந்த நுட்பம் பாராட்டுக்குரியது. பார்வையாளர் களங்களை சுலபமாக இனங்கண்டு ஒன்றியிருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பண்பாட்டுச் சிதறல்களை "எங்கள் தோள்களில்" ஆற்றுகை வெளிக்கொணர்வதில் வெற்றியடைந்துள்ளது என்றே கூறலாம். இருப்பினும் பாடல்கள் ஆட்டங்களை இன்னும் அதிகப்படுத்துவது எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாற்றுகையின் தயாரிப்பினை வவுனியா திருமறைக் கலாமன்ற இணைப்பாளர் திரு.பாலசுப்பிரமணியம் பாலேந்திராவும், பிரதியாக்கம் நெறியாள்கை ஒப்பனையை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசிரியை கஜரதி பாண்டித்துரையும், இசையமைப்பினை வவுனியா இராயப்பு ஜெயரூபனும் பாடல் ஆக்கத்தை கவிஞர் தர்மலிங்கம் பிரதாபனும் மேற்கொண்டிருந்தனர்.

அத்தோடு ஆற்றுகை ஆலோசனைகளை கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களும், ஆற்றுகைப் பிரதேசங்களின் நெறிப்படுத்தலை வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு.இ.நித்தியானந்தன் அவர்களும் வழங்கியிருந்தனர்.

வவுனியா பிரதேச செயலாளர் திரு.கா.உதயராசா அவர்கள் பல கிராமங்களுக்கு ஆற்றுகைக் குழுவோடு இணைந்து சென்று அவர்களை உற்சாகப்படுத்தியிருந்தமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய முன்னுதாரணம் ஆகும்.


# வாணியே வரம் அருள்வாய்!

- ப.எ.அன்ரன்

வள்ளுவனுக்கும்
வரம் ஈந்தாய்
வால்மீகிக்கும் வரம் அளித்தாய்
கம்பனுக்கு கவி வரம்தத்தாய்
காள மேகனுக்கு
கடிந்து பாட கருணை செய்தாய்
நக்கீரனிற்கு நாவன்மை
தந்தாய்
வாணியே உன் புகழ் பாட
வரம் தருவாய்
முத்தமிழுக்காய்
முக்கூடல் நகரில் உறைந்தாய்.
திருப்பதிகங்களில்
திருஞானம் தந்தாய்.
திருநாவுக்கரசும் தந்தாய்.
அருந்தமிழ் அவ்வை தந்தாய்.
பெருந்தமிழ்
புலவர்க்கெல்லாம்
பெருமை சேர்த்தாய்.
பொய்யுரைப்போர்.
புனைகவிதைகளிலும்
புகுந்திருப்பாய்...
பொய்யுரைப்போர்
வரம் கேட்டலில்
வாணியே மனமிரங்கி
வரம் தந்தாயோ?
வரமருள்வாய் வாணியே
வறுமைக்கு
வாழ்க்கைபட்டவன்
யாசகம் இது



வவுனியா தெற்கு
வலயக்கல்விப் பணிப்பாளர்
திருமதி.செ.அன்ரன் சோமராஜா



பேராசிரியர் சி.மௌனகுருவின்
இராவணேசன் நாட்டுக்கூத்து

# எழுந்து வாரீர்....

- பாலா.பா. -

வவுனியா
பசியால் மரணம்
பேஸ்புக் செய்தியிது
உறுத்துகிறது மனசு

இடப்பெயர்வு தொடர்ந்திட
இருப்பிடம் மறைந்திட
சும்மா இருத்தியே
சோறு போட்டது
முள்வேலி முகாம்கள்
ரீவி சீரியலும்
கேலிக் கதைகளும்
ஊர் வம்புகளும்
தொலைபேசி தொல்லைகளும்
சுகங்களாயினவே எம்மவர்க்கு - இவை
வரங்களாயினவே நம்மவர்க்கு

வெளியே வந்து
வேலைகள் செய்வது
ஏலாது என்று
சொல்லிச் சொல்லி
கனபேரிடம் கைநீட்டி
காசு வாங்கியே
கடனாளியாகினர்

லோனுக்கு இவர்கள்
லோ லோ எண்டலைந்து
லோன் எடுத்து
லோன் கொடுத்தவன்
லோன்சு கழண்டு விழுந்தாலும்
லோனே கட்டாத கூட்டம் இது

பாவம் இவர்களெல்லாம் - என்றே
பாவப்பட முடியவில்லை

கோபம் தான் வருகிறது - என்று
கோபிக்க நாதியில்லை...

வருமானத்தை கூட்டவென
வளமான மண்டபத்தில்
பனை ஓலை பயிற்சியொன்றை
பகல் முழுக்க நடத்துகின்றோம்
பயிற்சிக்கு வரவுமில்லை
பயன்பெற பலருமில்லை
ஏன் என்று கேட்டாலோ
பனை ஓலையை வைச்சுத்தான்
என்னதான் கிழிக்கப்போறம் - என்றே
பல்லுக்கு சிரிப்பு வேற
நெஞ்சுக்குள் நினைப்பு வேற

வளர்ந்து வரும் சந்ததிக்கு
உயர்த்திவிட தோளில்லை
ஒரு மணிநேரத்தையும்
ஒதுக்கிடவும் யாருமில்லை

ஓலை கிடைக்கவில்லை
ஓய்வும் கிடைக்கவில்லை
சாக்கு போக்கு ஏராளம்
கேலிப்பேச்சு தாராளாம்

இவர்களுக்கு அப்படி
என்ன தான் வேலைகள்
வெட்டி விழுத்துகிறார்களாம்
வீட்டுக்கு போய் பாருங்கள்...

இருப்பவர்கள் உழைக்க வேண்டும்
இனிதாக வாழ வேண்டும்
இனியொரு விதிசெய்வோம்
எழுந்து நீர் வாரீர்....?

# தொல்லை வினைகள் வேண்டாம்

கந்தையா ஸ்ரீ கந்தவேள்

பூலோக வாழ்வில் புரிந்திடும் வினைகள்
பூதங்கள் ஐந்தும் கிளர்ந்தெழுந்ததுவோ
பூமிப்பந்தில் நிகழ்ந்திடும் தொல்லைகள்
பூத்துக் குலுங்கிடலாமோ. ஐயா!

அலையதுவாய் கெம்பிஎழுந்து வீரம் புரிந்தீர்
மலையினைச் சரித்து சாகசம் புரிந்தீர்
மழையாய்ப் பொழிந்து மாளச் செய்தீர்
ஏழை மக்களை பாழ்பட வைத்தீர்

சூறாவளியாய் சுற்றியே அடித்தீர்
சூழலை மாசுபடுத்தியே நின்றீர்
சூரிய பகவானாய் நின்று வாட்டி எடுத்தீர்
சூரனைக் கூட சங்காரம் செய்தீர்

தீயால் நாட்டை பொசிங்கிடச் செய்தீர்
தீய செயல்கள் யாவும் புரிந்தீர்
தீண்டும் இடியால் உயிரினை பறித்திடச்செய்தீர்
மீண்டும் மீண்டும் தொல்லைகள் செய்தீர்

பஞ்சம் பசியை விதைத்திடச் செய்தீர்
பாவச் சுமைகளை அறுவடை செய்தீர்
பருவங்கள் மாறிடும் பாகமாடிடச் செய்தீர்
பகட்டாய் பல்விளைவுகள் புரிந்தீர்

நிலமது சரிந்து நிர்க்கதியாக்கிடும்
நிலையது கண்டு வருந்திடும் மக்கள்
லயமது அழிந்து வஞ்சனை செய்திடும்
செயலது வேண்டாம் ஐயா!

பாவம் மக்களைப் பழிதீர்த்திட வேண்டாம்
பாரில் உந்தன் சங்காரம் வேண்டாம்
பாசங் கொண்டவராய் நடித்திட வேண்டாம்
பாழாய்ப் போடும் பழியது வேண்டாம்.

சாவு மலிந்திடும் காட்சிகள் வேண்டாம்
காவு கொள்ளும் எண்ணமும் வேண்டாம்
காலனாய் உயிரினைக் களைந்திட வேண்டாம்
காவலனாய் இருந்து காத்திட வேண்டும் ஐயா

# தமிழன்

- தர்மலிங்கம் பிரதாபன் -

தமிழா!
நீ
கப்பல் ஓட்டி
காவியம் படைத்தாய்!
விண்ணில் பறந்து!
வீரம் படைத்தாய்!
குமரிமுதல்
இமயம் வரை
கொடிகட்டிப் பறந்தாய்!

ஒன்று பட்டால்
உண்டு வாழ்வு - என்று
சொன்னவன்
நீதானே!
நீ மட்டும்
ஏன் - இன்று கூறுபடுகிறாய்

தமிழா - நீ
திருந்த வேண்டும்!
உன் இனத்தை
நீயே
மதிக்க வேண்டும்!

பதவி மோகத்தை
நீ துறக்க வேண்டும்!
உதவி யாகத்தை
நீ தொடக்க வேண்டும்!

தமிழா - நீ
ஒன்று பட்டால்
உண்டு வாழ்வு
கூறுபட்டால்
என்றும் வீழ்வு!

தமிழன் ஒவ்வொருவனும்
தானாகத் திருத்த வேண்டும்

தமிழனாய் பார்த்து
திருந்தா விட்டால்
தமிழனைத் திருத்த
முடியாது

ஆதலால்
தமிழா நீ
ஒன்றுபடு!

வரலாற்றை
நீயே
வென்று விடு!

பதிவு: வாசகர் கடிதம்

"மாருதம்"கலை இலக்கிய அம்சங்களை மட்டுமன்றி சமூகம் சாரந்த, கல்வி சார்ந்த அம்சங்களையும் வெளியிடுகின்றது. "சமூக, கல்வி, கலை, இலக்கிய சஞ்சிகை" என்ற மகுடத்துக்குப் பொருத்தமாக உள்ளதை அவதானிக்க முடிகிறது. கவிதைகள் பல உள்ளடக்கப்பட்டுள்ளதைப் போல சிறுகதைகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டால் சிறப்பாக அமையும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். சண்டை முடிந்தும் 5 வருடங்களாகி விட்டன. சஞ்சிகைகள், பத்திரிகைகள், நாடெங்கும் தடையின்றிகப் பயணிக்கின்றன. இருந்தும் "மாருதம்" இவ்வளவு காலமும் என் கண்ணில் தட்டுப்படவில்லையே! என்று கவலையாக உள்ளது. எனது வாசிப்புத்தேடல் போதாதோ என்ற கவலையும் முதன்முறையாக ஏற்படுகின்றது. "எங்கடை வவுனியாவிலை" இவ்வளவு கல்விமான்களும், அறிஞர்களும், இலக்கிய வாதிகளும், எழுத்தாளர்களும், இருக்கிறார்கள். இவர்களுடன் இவ்வளவு காலமும் தொடர்பு ஏற்படவில்லையே என்ற எண்ணமும் ஏற்படுகின்றது. நான் 69ம் ஆண்டுக்குப்பின் வன்னிப்பகுதியில் வசிக்கவில்லை என்பதே இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இப்பவென்றாலும் "வவுனியாத்தொடர்பு" கிடைத்தது பற்றி மிக்க மகிழ்ச்சி. முழுநிலா நாள் கருத்தரங்குகளுக்கு வருவேன்.

கா.தவபாலன்.

# இசைச்சக்கரவர்த்தி T.M.சௌந்தரராஜன்

நா.தியாகராசா **B .A**

*பிறப்பும் பயிற்சியும்.*

தென்னிந்திய திரைப்பட பின்னணிப் பாடகர்களில் இன்றுவரையும் முன்னணியில் வைத்துப் புகழப்படுபவர், "பாட்டும் நானே பாவமும் நானே" என்று பாடிய திரு. TM சௌந்தரராஜன் அவர்களேயாவார். TMS அவர்கள் மதுரையில் சௌராஸ்ட்டிரா மொழிபேசும் குடும்பத்தில், மீனாட்சி ஐயங்கார் அவர்களுக்கும், வேங்கடம்மாள் அவர்களுக்கும் மகனாக 24-03-1923 ல் பிறந்தார். துகுலுவ மீனாட்சி ஐயங்கார் சௌந்தரராஜன் என்பதையே T.M. சௌந்தரராஜன் என்று எழுதினார். அதுவே TMS ஆகியது.

சிறுவயதிலிருந்தே தமது தந்தையார் ஐயங்கார் அவர்களுடன் கோவில்களிலும் மேடைகளிலும் TMS பஜனைப் பாடல்களைப்பாடி வந்தார். தந்தையார் மதுரை வரதராஜப் பெருமாள் கோவிலில் அர்ச்சகராக இருந்ததுடன், பஜனைக் கச்சேரிகளில் கதாகாலட்சேப வித்துவான்களுக்காகப் பின்னணி பாடிக்கொண்டுமிருந்தார்.

TMS தமது 7ஆம் வயதிலிருந்து காரைக்குடி ராஜாமணி ஐயங்கார் அவர்களிடம் முறையாகச் சங்கீதத்தைப் பயிலத் தொடங்கினார். ஏழிசை மன்னர் M.K. தியாகராஜ பாகவதர், P.U. சின்னப்பா, ஆகியோரது சினிமாப் படங்களைப் பார்த்தும், அவர்களது சினிமா, நாடகம், மற்றும் மேடைக்கச்சேரிப் பாடல்களைப் பாடியும், மற்றும் கிட்டப்பாவினது நாடகப்பாடல்களைப் பாடியும், தனது இசை ஆர்வத்தை TMS வளர்த்து வந்தார்.

ஆரம்பத்தில் கோரஸ் (chorus) பாடல்களையே பாடினார். 1946 ல் சுந்தர்ராவ் நட்கர்னி என்ற இயக்குனர், "ஸ்ரீ கிருஷ்ண விஜயம்" என்ற படத்தில் ஒரு முழுப்பாடலைத் தனியாகப் பாடும் சந்தர்ப்பத்தை இவருக்குக் கொடுத்தார். (இப்பாடலின் இறுதியில் ஒரு பெண் குரலும் ஒலிக்கிறது.) நடிகர் நரசிம்மபாரதிக்கு TMS குரல் கொடுத்திருந்தார்) இப்பாடலுக்கு C.Sஜெயராமன் இசையமைத்திருந்தார். "சிந்தாமணி" என்ற படத்தில் M.K. தியாகராஜ பாகவதர் பாடிய "ராதே உனக்குக் கோபம் ஆகாதடி" என்ற பாடலை TMS அவர்கள் அதே மெட்டில் "ஸ்ரீ கிருஷ்ண விஜயம்" என்ற படத்தில் "ராதே நீ என்னை விட்டுப்போகாதடி" என்று பாடி, M.K. தியாகராஜ பாகவதர் உட்பட எல்லாரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டார். அப்போது அவரது வயது 24.

பின்னர் TMS மந்திரி குமாரி என்ற படத்தில் "அன்னமிட்ட வீட்டிலே கன்னக்கோல் வைக்கவே எண்ணங் கொண்ட பாவிகள் மண்ணாய் போக நேருமே" என்ற பாடலைப் பாடினார். ஒரு அறிமுகம் இல்லாத கலைஞருக்காக இப் பாடலை TMS பாடியிருந்தார்.

TMS முதல் சோடிப்பாடலாக (duet) **M.S.** ராஜேஸ்வரியுடன் "செல்லப்பிள்ளை" படத்துக்காக "நாடு நடக்கிற நடையிலே" என்ற பாடலைப்பாடினார். அதன் பின்னர் **K.** ஜமுனாராணியுடன் "வளையாபதி" என்ற படத்தில் பாரதிதாசன் எழுதிய "குலுங்கிடும் பூவிலெல்லாம் தேனருவி கண்டதனால் வண்டு காதலினால்" என்ற பாடலை தட்சிணாமூர்த்தியின் இசையில் பாடினார்.

TMS அவர்கள் MGR க்காக முதன்முதலாக "எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே சொந்த நாட்டிலே நம் நாட்டிலே" என்ற தஞ்சை ராமையாதாசின் பாடலை S.M சுப்பையா நாயுடுவின் இசையில், "மலைக்கள்வன்"

படத்தில் பாடினார். திரை உலகத்தின் கவனத்தைப் பெறுவதற்காக TMS மிகவும் கஸ்டப்பட்டதுடன் பல தடைகளையும் தாண்டி எதிர் நீச்சல் போட்டார்.

பாடகரும், இசையமைப்பாளருமான G.ராமநாதன் அவர்கள், "தூக்கு தூக்கி" படத்தில் தமது இசையில் முதன் முதலாக சிவாஜிகணேசனுக்காக பின்வரும் 6 பாடல்களைப் பாடும் சந்தர்ப்பத்தை TMS க்கு கொடுத்தார்.

- சுந்தரி சவுந்தரி நிரந்தரியே (TMS + AP கோமளா+P.லீலா)
- குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் (TMS +AP கோமளா+P.லீலா)
- கண்வழி புகுந்து கருத்தினில் கலந்த (TMS +MS ராஜேஸ்வரி)
- ஏறாத மலைதனிலே ஜோரான கௌதாரி ரெண்டு.
- பெண்களை நம்பாதே கண்களே.
- அபாய அறிவிப்பு ஐயா அபாய அறிவிப்பு.

*பின்னணியில் முன்னணி*

ஆரம்பகால நடிகர்களெல்லோரும் தமக்குரிய பாடல்களைத் தாமே பாடி நடித்தனர். TMS.ன் திரைப்பிரவேசம் பாடத் தெரியாத நடிகர்களுக்கெல்லாம் மிகவும் வரப்பிரசாதமாக அமைந்தது. கதாநாயகர்கள், வில்லன்கள், ஹாஸ்சிய நடிகர்கள், அப்பா நடிகர்கள் என்று எல்லா நடிகர்களுக்கும் பாடல் காட்சிகளில் நடிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. காட்சியில் நடிக்கும் எந்த நடிகருக்கும் ஏற்ற குரலில் பாடி நடிகர்களுக்குப் புகழ் சேர்த்தார். நடிகர்களும் பாடல் காட்சிகளில் மிகப் பொருத்தமாக நடித்ததனால், TMS க்கு மேலும் மேலும் புகழ் கிடைத்தது. MGR, சிவாஜி இருவருக்கும் TMS ன் குரல் கனகச்சிதமான பொருத்தமாக இருந்தது. இந்தப் பொருத்தம் மூவருக்குமே வரப்பிரசாதமானதாகும்.

*உணர்ச்சியும், உச்சரிப்பும்*

TMS. பாடல்களை தெளிவாக உச்சரித்துப்பாடும் அழகு தனியழகு பல நடிகர்களுக்கு பின்னணி பாடல் குரல் கொடுத்து அவர்கள் முன்னணிக் கலைஞர்களாகுவதற்கு உதவினார். மேலும் TMS அவர்கள் கதாநாயகன், வில்லன், ஹாஸ்ய நடிகன், அப்பா நடிகர், இரண்டாம், மூன்றாம் தர கதா நாயகர்கள் என்று எல்லா கதா பாத்திரங்களினதும், குணப்பண்புகளையும் மனதிலே பதித்துக்கொண்டு அவரவர்களின் பாத்திர உணர்வுகளுக்கேற்பவும், குரலுக்கேற்பவும், மொழி நடைக்கேற்பவும் பாடிப் புகழ் பெற்றார். படத்தில் வரும் கதா பாத்திரங்களுக்கு ஏற்றதாக நவரசங்களும் ததும்ப பாடக்கூடிய உணர்ச்சிப்பாடகராக TMS மாறினார்.

ஜெமினி கணேசனுக்காக, S S ராஜேந்திரனுக்காக, ஜெய்சங்கருக்காக, முத்துராமனுக்காக, ரவிச்சந்திரனுக்காக, துணை நடிகன், கதாநாயகன், குணசித்திர நடிகன், சிறப்பான வில்லன், பாடகன் என்று பாராட்டப்படும் SA அசோகனுக்காக, AVM ராஜனுக்காக, ஹாஸ்ய நடிகர், குணசித்திரநடிகர், வில்லன்நடிகர், என்றெல்லாம் புகழப்படும் நாகேசுக்காக, சிவகுமாருக்காக, C.L. ஆனந்தனுக்காக, கன்னட திரை உலகின் Super Star, முடிசூடா மன்னன் என்று புகழப்பட்ட நடிகரும் பாடகருமான ராஜ்குமாருக்காக, பல படங்களில் நாகரீக வில்லனாகவும், பின்னர் குணசித்தர நடிகனாகவும் பாராட்டப்பட்ட ஸ்ரீகாந்துக்காக, வில்லன்நடிகர், அப்பாநடிகர், ஹாஸ்யநடிகர், குணசித்திரநடிகர் என்றெல்லாப் பரிமாணங்களிலும் புகழ் பெற்றT.S பாலையாவுக்காக, முதல்தரபாடகரும், ஹாஸ்யநடிகரும், குணசித்திர நடிகரும், படத்தயாரிப்பாளருமாகிய K.P சந்திரபாபுவுக்காக, துணை நடிகர் கதாநாயகன் என்று ஆரம்பித்து, முற்றாக வில்லனாகவே திரை உலகில் தடம் பதித்த R.S. மனோகருக்காக, கலைஞர் கருணாநிதியின் மகன் மு.க.முத்துவுக்காகவும் பாடல்களை பாடினார். றஜனிகாந், கமலஹாசன் என அடுத்த தலைமுறை நடிகர்களுக்கும் குரல் கொடுத்தார்.

MS ராஜேஸ்வரியுடன், K. ஜமுனாராணியுடன், MLV யுடன், P. பானுமதியுடன், P.சுசீலாவுடன், P.லீலாவுடன், பாலசரஸ்வதி தேவியுடன் , T.S பகவதியுடன், சூலமங்கலம் ராஜலட்சுமியுடன், S. ஜானகியுடன், LR. ஈஸ்வரியுடன், வாணி ஜெயராமுடன், ஜெயலலிதாவுடன், B. வசந்தாவுடன் இணைந்து TMS பாடிய பாடல்கள் பிரசித்தமானவை

TMS அவர்கள் இருகுரல் இசையாக ஏனைய ஆண் பாடகர்களுடன் பாடியுள்ளார்.பிரபல கர்நாடக இசைப்பாடகரும், நடிகருமான டொக்டர் சீர்காழி S. கோவிந்தராஜனுடைய வெண்கலக்குரலுக்கு இணையாகப் பாடியுள்ளார். நடிகரும், பாடகரும் நடிப்பிசைப்புலவர் என்று பட்டம் பெற்றவருமான, K.R ராசாமி அவர்களுடனும் பாடியுள்ளார்.

மெல்லிசையில் ஒரு வசந்தம் என்று சொல்லப்படுபவரான P.B.ஸ்ரீநிவாஸ் உடனும், S P பாலசுப்பிரமணியத்துடனும், இஸ்லாமிய கீதங்களை இதமாகப்பாடிய E.M. ஹனிபாவுடனும் இணைந்து பாடியுள்ளார். பல படங்களில் குத்துப்பாடல்களும் பாடியிருந்தார்.

*இசையமைப்பாளராக **TMS***

TMS சில தெலுங்கு, கன்னடப் படங்களிலும் மற்றும் "ராஜசங்கமம்" என்ற ஒரே ஒரு மலையாளப்படத்திலும் பாடியுள்ளார். "பலப்பரீட்சை" என்ற முத்துராமன் நடித்த முக்தா சீனிவாசனின் படத்துக்கு மட்டுமே இசையமைத்துள்ளார் "படுக" என்ற இனத்தவர்களுக்கான "படுக" மொழியில் எடுக்கப்பட்ட படத்தில் ஒரு பாடலைப்பாடியுள்ளார் " தாய்நாடு" "ஞானப்பறவை" "வாஞ்சி தேசம்" என்ற படங்களிலும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட சூர்யா' என்றபடத்திலும் இறுதியாகப்பாடியுள்ளார். சிவாஜியோடு மனோரமா கதாநாயகியாக நடித்த ஒரே படம் ஞானப்பறவை. இந்தப்படத்தில் "ஆணவம் கொள்ளாதே ஞானப் பெண்ணே" என்றபாடலை TMS சிவாஜி கணேசனுக்காக கடைசியாகப் பாடியிருந்தார்.

*திரைப்பட நடிகனாக **TMS***

TMS க்கு சிறு வயதிலிருந்தே நாடகங்களில் நடித்த அனுபவம் இருந்ததால், திரைப்படங்களிலும் திறமை காட்டி நடித்தார். "தேவகி", "பெண்ணரசி", "நவக்கிரக நாயகி", "தெய்வம்" ஆகிய படங்களில் கௌரவ வேடத்தில்தோன்றினார். தேவகி படத்தில் "இப்போ தீராத துயராலே பாழாகியே பெண்களே ஏங்கி ஓடாக திண்டாடுறாங்க" என்ற பாடலைப் பாடி நடித்தார் "பட்டினத்தாராகவும்", "அருணகிரி நாதராகவும்", "கவிரராஜ காளமேகமாகவும்" நடித்து பக்திப்பட நாயகன் என்றும் சாதனை படைத்தார். பட்டினத்தாரும், அருணகிரி நாதரும் பாடிய பாடல்களை TMS அவர்கள் பக்தி ரசம் சொட்டச் சொட்டப் பாடியிருக்கிறார். "கல்லும் கனியாகும்" என்ற படத்தை அவரது சமூகத்தவரும் பாடகருமான A.L. ராகவன் (நடிகை M.N ராஜத்தின் கணவன்) அவர்களுடன் சேர்ந்து தயாரித்து தானும் நடித்திருந்தார்.

***TMS** க்கான விருதுகள்*

இவரது இணையற்ற இசை ஆற்றலுக்காக 50ற்கும் மேற்பட்ட விருதுகள் வழங்கப்பட்டன. 2003ல் இந்திய அரசின் உயரிய விருதான "பத்மஸ்ரீ" பட்டம் பெற்றார். மேலும் "பத்மவிபூசன்" "பத்மபூசன்" "கலைமாமணி" "ஏழிசை மன்னன்" "ஞானகலாபாரதி" ஆகிய பட்டங்களும் TMS க்குக் கிடைத்தன.

***TMS**ன் சாதனை.*

வென்றிடுவேன் எந்த நாட்டையும் நாதத்தால் வென்றிடுவேன்" என்று பாடிக் கொண்டு, TMS அவர்கள் சுமார் 40 வருடங்கள் தமிழ் திரை உலகின் முடிசூடா மன்னனாக விளங்கினார். 1955 லிருந்து 1985 வரை இவர் மிகவும் உச்சமான புகழோடு இருந்தார். 500 க்கும் மேற்பட்ட சினிமாப் படங்களில் பாடியுள்ளார். மேலும்

3000 பக்திப்பாடல்களும் பாடியுள்ளார். மொத்தம் 10 ஆயிரம் பாடல்கள் வரை பாடியுள்ளதாக அறியக்கிடக்கிறது.

*பெயர்ப் பொருத்தம்*

துகுலுவ மீனாட்சி சௌந்தரராஜன் (**TMS**) என்பதற்கு மேலதிகமாக M.K. தியாகராஜ பாகவதர் என்பதில் T ஐயும், மதுரை சோமு என்பதில் M ஐயும், சுந்தராம்பாள் என்பதில் S யும், சேர்த்துதான் தன் பெயர் TMS என்று ஒருமுறை சொன்னார். இன்னொரு சந்தர்ப்பத்தில் சங்கீத மும்மூர்த்திகளில் தியாகராஜசுவாமிகள் என்பதில் T ஐயும், முத்துச்சாமி தீட்சிதர் என்பதில் M ஐயும், சியாமா சாஸ்திரிகள் என்பதில் S ஐயும் சேர்த்து TMS என்றும் சொன்னார்.

சிறந்த தமிழ் உச்சரிப்பும், கதாநாயகனுக்குரிய கம்பீரமான தோற்றப் பொலிவும், நவரச உணர்வுகளைக் காட்டக்கூடிய முக அமைப்பும், அநாயாசமாகப் பாடும் குரல் வளமும், TMS க்கு இருந்தும், அவரால் சினிமாவில் ஒரு கதா நாயகனாகப் பிரகாசிக்க முடியவில்லை. TMS எல்லோருக்கும் குரல் கொடுத்தார். அவருக்காக யாரும் குரல் கொடுக்கவில்லை. சினிமா உலகம் TMS அவர்களை கதாநாயகனாகவும் அரவணைத்திருந்தால் இன்னொரு MKT யாக TMS பிரகாசித்திருப்பார்.

***TMS* ன் மறைவு**

"இசை கேட்டால் புவி அசைந்தாடும் அது இறைவன் வரமாகும் ஏழாம் கடலும் வானும் நிலவும் என்னிடம் விளையாடும் இசை என்னிடம் உருவாகும்"(தவப்புதல்வன்) என்று பாடிய TMS எம்மை விட்டு மறைந்து விட்டார்.






# தேர்தல் நட்பு

என்
பழைய நண்பனே!
நீ....
தேர்தல் வரும் போதெல்லாம்
என் நட்பை விரும்புகிறாய்.
பழைய நட்பைப் பற்றிப்
பெருமையாகப் பேசுகிறாய்.
போலியாகப் பேசிப்
பாசாங்கு செய்கிறாய்.
புதுப்பிக்க விரும்புகிறாய்.
உனக்கு நினைவிருக்கிறதா
நாங்கள் இருவரும்
நண்பர்களாக இருந்த போது
பிரித்தானியர்களின்
அடிமைகளாக இருந்தோம்.
இருவரது கால்களும்
விலங்கிடப்பட்டிருந்தன.
சேர்ந்தே போராடினோம்.
விடுதலை பெற்றோம்.
ஆனால் நீயோ
உன் கால் விலங்கையும்
சேர்த்து
என் கால்களில்
இரட்டை விலங்காய்ப்
பூட்டினாய்.
அது உன்னால் முடிந்தது.
ஏனெனில்
நீ எண்ணிக்கை அளவில்
ஜன நாயகப்
பலவானாய் இருந்தாய்.
நான்
என் விலங்கை ஒடித்து
விடுதலை பெற
முயன்ற பொழுதுகளிலெல்லாம்.
என்னைத் துன்புறுத்தினாய்.
அடித்து அடக்கினாய்.
என் விலங்கு
உடைபடும் நிலை வந்த போது
உலக நாடுகளின்
உதவி பெற்று
உடைக்க முடியாத படி
செய்தாய்.
இன்னும் இன்னும்
சிறிதும் பெரிதுமாய்
பல விலங்குகளைப்
பூட்டுகிறாய்.
இப்போது நீ
மீண்டும்
நண்பா! என்று
அழைப்பது அருவருப்பாக
இருக்கிறது.
நான் என் கால்விலங்குகளை
உடைத்து
விடுதலை பெற்ற பின்
நானே உன்னை
நண்பா! என்று அழைப்பேன்.
அதுவரை
நீ என்னை

அந்தப் புனிதமான
வார்த்தையால் அழைக்காதே.
அந்த வார்த்தையின்
அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாத
உன்னோடு
எப்படி நட்புப் பூணுவது.
முடிந்தால்
நீ போட்ட விலங்கை
நான் உடைக்க
நீ துணை செய்.
பின்
சமத்துவத்தோடு
சினேகிதம் கொள்வோம்.
தேர்தல் நட்பு
ஒரு போதும்
உண்மை நட்பாகாது.

*-அகளங்கன்-*

## சிறுவர் கவிதை - நட்பு

சில்லென வீசும் இளங்காற்றில்
சிரித்து விளையாடி மகிழ்ந்தோமே!
வில்லென வளைந்து ஆடி நீ-எம்மை
வியக்க வைப்பாயே
மெல்லென வந்த துயர்-எம்மை
மறைவாய்த் தாக்கிற்றே!
சூரியன் கலைந்த வானத்திற்கு
காரிருள் மேகம் வந்தாலும்
இரவு நிச்சயம் மீண்டும்வரும்.
பாரில் பஞ்சம் நிலைத்தாலும்
பட்டென மழைவரும்.
ஊரில் நம்பிரிவு நிலைத்தாலும்
நிலாவுடன் உடுக்களாய்-நாம்
நிச்சயம் ஒன்று சேர்வோம்.

*-சி.சஸ்மீரா- 2010*

## எஞ்சியதும் என்ன?

கொட்டிக் கிடக்கும்
காட்சிக ளெல்லாம்....
கற்பூர வாசனையாய்
கருவாட்டுக் கூடையில்....
சிந்திக்க மறந்து
சந்திகளும் சிரிக்க....
சாக்கடைகளிலெல்லாம்
சல்லாபங்கள்....
நாகரிக மென்று
நாடகமாடி....
நாற்றமடிக்கும்
ஊத்தைகள்....
கட்டிக் கிடக்கும்
கோவணத்தையும்...
கழற்றிப் போடும்
கைங்கரியங்கள்...
பிறப்புக்கள் கூட
திரை மறைவில்....
நளினங்கள் மட்டும்
நிர்வாணமாய்....
கட்டிய தடங்களுக்கும்
வட்டியை கேட்குது....
வேட்டி அவிழ்ந்த போதும்
வேசம் போடும் வர்க்கம்....
தம்முலை மறந்தும்
தலைமுறை திரியுது....
தலைகள் கழற்றிக்கொண்டு
விலைகள் கேட்பதால்....
இழந்தவைகளுடன் - எம்
விருப்புக்களும் சேருது....
இருட்டறையின் - உள்
ஓட்டடைகளாய்....

*வே.முல்லைத்தீபன்*
*ஒட்டுச்சுட்டான்.*

## வெறுமை

சின்ன வயதில்
சிறகடித்த நாட்களிலே
வண்ணமயமாய்க் கனவு
வாரிக்கிடந்த வேளையிலே......
சொன்னவையும் கேட்டவையும்
சுகங்களாகிக்கிடந்தன!.

கால்களிலே சக்கரங்கள்..........
கரை(கறை)யில்லா எண்ணங்கள்......
அக்கம் பக்கம்:.
அருமை நண்பர்...
புத்தகக் கட்டு...
பூரித்த இளமை...
எல்லாமே சொர்க்கமென
இலங்கி நின்ற காலமது!

'கெந்திக் கோடும் 'கிளித்தட்டும்'
'ஒப்பும்'ஓட்டமும்
'கொக்கான்'தாயம்
'தூத்தி'........
மண்சோறு விளையாட்டு
சின்னக்குடிலமைத்து
சித்திரமாம் உறவுகளை
கற்பனைப் பாத்திரமாய்
கலகலப்பாய் உருவாக்கி
குடும்பச் சுகத்தை
விளையாட்டில் கண்டோம்!
இன்று.........
சுமையாய் குடும்பம்!
விளையாட்டாய் வாழ்க்கை!

எண்ணத்தில் வார்த்த
வண்ணக் கனவுகளை
நிஜங்களாக்கி நிமிர்ந்து நிற்க
கொண்ட வேட்கைகள்......
இன்று......
அவை பலிக்கவில்லை
கனவே மறந்து......
முதலுக்கே மோசம்வந்தது!

ஓ!
காலம் என்பதும்
கனவுகள் என்பதும்
இப்படித்தானோ!
ஆப்பசைத்த குரங்குகளாய்
அகப்பட்ட மனங்களதை .
அசைத்து மீட்க ஆசையில்லை!
மரப்பிளவு மூடி
மாளவும் விருப்பமில்லை!
ஏதோ சுழி! இறுகியகட்டு!
எங்கோ போகிறோம்!
எதற்கோ வாழ்கிறோம்!
வாழ்வை நாமோ
எம்மை வாழ்வோ
என்றோ முடிக்கும்

*த.நிறைமதி*

# மன்னார் மாதோட்டத்து முருங்கன் முத்தமிழ் கலா மன்ற பொன்விழா

சங்கர செல்வி

1964 ஆம் ஆண்டு முருங்கனில் கூத்துக் கலைஞர் குழந்தை செபமாலை அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு இவ் ஆண்டு பொன்விழா காணும் முருங்கன் முத்தமிழ் கலா மன்றத்தின் பொன்விழா நிகழ்வுகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி முருங்கன் புனித யாகப்பர் ஆலய வளாகத்திலே சிறப்புற நடைபெற்றது,

மன்னார் மறைமாவட்ட ஆயர் இரா.யோசேப்பு ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அவர்களோடு யாழ்ப்பாண பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர்கள் கலாநிதி. த.கலாமணி, கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் ஆகியோரும் கவிஞர் சோ.பத்மநாதன், தமிழ்மணி அகளங்கன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.சிவசக்தி ஆனந்தன், திரு.வினோநோகராதலிங்கம் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.M.M.சியாம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். அருள்பணி தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற பொன்விழா நிகழ்வுகள் கூத்துப் பாரம்பரியத்தை இனிவரும் காலங்களிலும் வாழும் கலையாக பேணமுடியும் என கட்டியம் கூறி நின்றன.

2014ஆம் ஆண்டு வடமாகாணத்தில் நடாத்தப்பட்ட கூத்துவழி நடனப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நிகழ்வு முதலில் மேடையேறியது. செபமாலை குழந்தை அவர்களின் பிள்ளைகளாகிய திருமதி.மலர்விழி ஓஸ்மன் மற்றும் திருமதி கயல்விழி நிக்ஸன் ஆகியோர் இந்நிகழ்வை வடிவமைத்திருந்தனர்.

கலை நிகழ்வின் தொடர்ச்சியாக செபமாலை குழந்தை அவர்களின் எழுத்தில் உருவான 'யார் குழந்தை' வடமோடிக் கூத்து நாடகம் சிறுவர்களால் மேடை ஏற்றப்பட்டது. நிறைவாக வடமாகாண நாட்டுக்கூத்து போட்டியில் முதலில் இடத்தைப்பெற்ற கலாபூசணம் மாசிலாமணியின் இயக்கத்தில் மன்னார் கார்மேல் அன்னை கலாமன்றம் வழங்கிய 'பாஞ்சாலி சபதம்' மேடை ஏற்றப்பட்டது.

எமது கலை வடிவங்களைப் பேணி பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கடத்தும் மகத்தான காரியத்தை செய்து வரும் குழந்தை செபமாலை போன்ற கலைஞர்களும் அவற்றை தொடர்ந்து பேணி வரும் அவரின் புதல்வர்களாகிய ஆனந்தராசா, இன்பராசா மற்றும் அருட்பணி அன்புராசா ஆகியோர்களும் பாராட்ட வேண்டியவர்களே. இந்நிகழ்ச்சியில் வெளியிடப்பட்ட 'நாம்' எனும் பொன்விழா மலரை அழகுற வெளியிட்ட அருட்பணி தமிழ்நேசன் அடிகளார் மற்றும் அருட்பணி அன்புராசா (அ.ம.தி) ஆகியோர் மக்களின் மனதில் என்னும் நிலைத்திருப்பார்கள். எமது மண் சார்ந்த கலைகளுக்கு மேலும் ஊக்கம் கொடுத்து நிற்போம்.

# இது புதினம்

என்ன புது தலைப்பு இதென்று
எனைப் புதினம் பார்ப்போரே
எழுதுகின்றேன் புதினங்களை

காலையிலே கண்விழித்து
கடவுளினை தரிசித்து
மௌனமாக தியானித்தால்
மனைகளிலே இது புதினம்

காண்பவரை வீதிகளில்
கைகூப்பி வணக்கம் என்றால்
மாண்புடையோர் தவிர
மற்றோர்க்கு இது புதினம்

பாதையிலே விழுந்தவனை
பார்த்துச் செல்வோர் மத்தியிலே
பதை பதைத்து உதவிசெய்தால்
பலருக்கு இது புதினம்

முறைப்படி நாம் நெற்றியிலே
முழுப் பூச்சாய் நீறணிந்தால்
முன் காணும் சைவர் பலர்
முழிக்கின்றார் இது புதினம்.

இளையோர் தம் விருந்துகளில்
இவன் ஒருவன் குடிக்கவில்லை
மது குடிக்கும் மற்றோர்கள்
மத்தியிலே இது புதினம்

தலை பின்னிப் பூ சொருகி
தரை தட்ட ஆடை கட்டி
தலை குனியப் பெண் வந்தால்
தமிழ் மண்ணில் இது புதினம்

இலக்கிய விழா ஒன்றில்
இடை வெளிகள் இல்லாமல்
இருக்கைகள் நிரம்பி விட்டால்
இன்றளவில் இது புதினம்

சீரியலில் சிக்காமல்
சீச்சீ இதுவென்று
யாரொருவர் சினந்தாலும்
யாவருக்கும் இது புதினம்

ஏதோ ஒன்றேனும்
எடுத்து முகம் சிவக்க
அப்பாத பெண் இருந்தால்
அனைவருக்கும் இது புதினம்

செல் போன் இல்லாத
செல்வந்த வீடிருந்தால்
செய்தியாய்ப் பிரசுரிப்போம்
செம்மையான இது புதினம்

அழகாய் தமிழ் எடுத்து
அன்பு அதில் கலந்து
மகிழ உறவுக்கோர்
மடல்வரைந்தால் இது புதினம்

காப்புக் கட்டாமல்
கன்னிப்பெண் மட்டுமல்ல
சிறுமியைக் கண்டாலும்
சிரிக்காதீர் இது புதினம்

ஆட்டுக்கல் அம்மிஉரல்
வீட்டுக்குள் வைத்திருந்தால்
பாலகர்க்கு மட்டுமல்ல
பாட்டிக்கும் இது புதினம்

கேட்டவுடன் தேவாரம்
போட்டிபோட்டு பாடவந்தால்
வீட்டினில் மட்டுமல்ல - வழி
பாட்டினிலும் இது புதினம்

பழந்தமிழ் இலக்கியங்கள்
சிலவேனும் சேகரித்த
இளந் தமிழ் உள்ளங்கள்
இருந்திட்டால் இது புதினம்

உழைத்தது போதுமென
ஊருக்கு மீண்டுவந்து
உறவுக்கு கைகொடுத்தால்
உண்மையிலே இது புதினம்

பேருக்கு பிள்ளையென
பெருமைபேசித் திரியாமல்
ஆதரித்தால் பெற்றோரை
அவனியிலே இது புதினம்

பாண்பருப்பு விலையெல்லாம்
பவுண் பெற்ற நிலையெல்லாம்
பட்டென்று சரிந்திட்டால்
பதறாதீர் இது புதினம்

கட்டுரைகள் எழுதி விட்டு
கவிதை என்று கர்ச்சிப்போர்க்கு
பட்டங்கள் பலகொடுப்பார்
பாவலர்க்கு இது புதினம்

இன்னும் எழுத இருக்கிறது
இதைவிடவும் பல புதினம்
என்னை புதினம் ஆக்கிடுவார்
என்பதனால் முடிக்கின்றேன்.

*கவிஞர் குரும்பையூர் ஐங்கரன்*

# அஞ்சலி

ஈழத்தின் தலை சிறந்த படைப்பாளிகளாக மிளிர்ந்து இந்த ஆண்டில் அமரத்துவமடைந்த

திரு.எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ)
ந.பாலேஸ்வரி,
திரு.K.S பாலச்சந்திரன்.
பேராசிரியர்.செல்வா கனகநாயகம்
காவலூர் இராஜதுரை ஆகியோர்க்கும்
*இந்திய திரைக் கலை மேதைகள்*
பாலு மகேந்திரா
K.பாலச்சந்தர் ஆகியோர்க்கும் வட்டத்தின் அஞ்சலி.

### ஈழத்து மட்டுநகர் அகிலத்திற்குத் தந்த

## திரையுலக மேதை பாலுமகேந்திரா ஒரு சகாப்தம்

தோற்றம் :- 20.05.1939 மறைவு :- 13.02.2014

கலைமகளின் பேரருளோ பாலநாதன் தம்பதியர்
கலைமகளுக் கொப்புவித்த பாலுமகேந் திராமகனார்
கலையுலகில் பேரொளியாய் ஒளிபரப்பி மிளிர்ந்திட்டுக்
கலைமகளின் பாதத்தில் விழிமூடித் துயில்கின்றார்.

கலைமகளின் தாயகமாம் மட்டுநகர் தந்திட்ட
கலைமகன் பாலுமகேந் திராவிலங்கைத் தீவதனில்
கலைவளமும் பெருக்கிடவாய்த் திரைக்கலையைத் தான்தேற
கலைத்தமிழன் சிறப்புறவும் வாழ்வுநெறி யிங்குண்டோ

தெலுங்கு,தமிழ், மலையாளம், ஹந்தி, கன்னடமாம் பலமொழிகள்
குலுங்குமலர்ச் சரமதுவாய்த் திரையுலகில் நடமாட
இலங்குபுகழ் இயற்கையொளி கையாண்டார் நுட்பமதாய்
இலங்கினார் சீடர்களின் குருவாயும் விளங்கிட்டார்

ஒளிப்பதிவாளராய்த் திரையுலகில் கால்பதித்தே நிமிர்ந்திட்டார்
அழியாத கோலங்கள் இயக்குநராய்த் தான்மிளிர்ந்தார்
களிப்புடனே செம்மையாக்கல் எனும் கலையில் மேலானார்
அளித்தார் தலைமுறைகள் நடிகருமாய்த் திகழ்ந்தார்

கண்ணாலே காட்சிகளைக் கண்டாலும் போதும்
கருத்தாழம் மனக்கண்முன் நீங்காமல் மோதும்
மண்வாசம் சிந்தைதனில் உணர்வலைகள் மீட்டும்
மொழிவளமும் அதற்கிணையாய் உயர்ந்து மெருகூட்டும்

நீயின்றி மறைந்தாலும் உன்திரையுலக சாதனைகள்
திராவிடத்துச் சரித்திரத்தில் என்றென்றும் நிலைத்திடுமே
உன்பட்டறையில் கூர்செய்த போர்வாள்கள் முன்மிளிர்ந்து
உன்மதிநுட்பம் தனைக் கொண்டு தாயகத்தில் உயர்ந்திடுமே

- வி.எஸ்.தனபாலசிங்கம் **(J.P.W.I)**-
பார்க்குழி லேன்
தோணிக்கல்

# அரியான் பொய்கை (திரு.கை.செல்லத்துரை)

- திருமதி-புவனா-ஐயம்பிள்ளை-

வன்னிப்பிரதேச ஒளிக்கீற்றாகத் தோன்றி,வளர்ந்து வாழ்ந்து அமரத்துவமடைந்த உயர்திரு.கை.செல்லத்துரை அவர்கள் பிறந்த இடம் வவுனியா மாவட்டத்தின், மேற்பற்று கிழக்குப்பிரிவில், நெடுங்கேணியிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள அரியாடு எனும் அழகிய,செழிப்பான,வயல் நிறைந்த வளம் கொழிக்கும் கிராமமாகும்.

அவர் திரு.க.கைலாயர், மற்றும் திருமதி கை.வள்ளியம்மை. ஆகியோக்கு 1923 மார்கழி 25ம் நாள் பிறந்தார். முள்ளியவளை இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்று 1943இல் (முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம்) சிரேஸ்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் பெற்றார். கல்வி கற்ற காலம் தொடக்கம் சைவசீலராகவும், சைவ உணவுண்பவராகவும், இலக்கிய, புராண இதிகாசங்களில் மிகுந்த ஈடுகொண்டவராகவும், கலையார்வம் கொண்டவராகவும் விளங்கினார்.

இவரின் ஆழ்ந்த தமிழறிவுக்கும், சைவ ஆசார சீல வாழ்வுக்கும், புராண இதிகாச, இலக்கிய அறிவுக்கும் வளம் கொடுத்தவர், முள்ளியவளை பிரதேசத்தில் பௌராணிக வித்தகராக விளங்கிய சிவஸ்ரீ.சுப்பையர் (இப்போதைய கல்யாண வேலவர் ஆலய குருக்கள் அவர்களின் பாட்டனார்) ஆவார்.

அறிவு நூல்களைக் கற்றறிதலும், புராண நூல்களுக்கு விரிவுரை செய்தலும், செய்வித்தலும் சமூக கலை, கலாசார, சமயப்பணிகளில் ஆர்வமுடன் பங்கு கொள்வதும் அவரது செயற்பாடுகள். அவர் தபாலக, அஞ்சல் விநியோகப் பணியாளராகப் பணிபுரிந்தார்.

முல்லைத்தீவுக் கரைதுறைப்பற்றுப் பிரிவில், புதுக்குடியிருப்பு எனும் கிராமத்தில், இளையதம்பி-சுந்தரம் தம்பதியரின் மகள் சிவபாக்கியம் என்பவரைத் தன் துணைவியாகக் கொண்டார். வளர்ப்புப் பிள்ளைகள் ஆக பரராசசிங்கம், கோபாலகிருஷ்ணன், சரஸ்வதியம்மா ஆகியோர் விளங்கினர்.

அவரது நண்பர்களாக முள்ளியவளை காட்டு விதானையார் மு.ஆ.சின்னத்தம்பி (சின்னக்குட்டி) அவர்களின் சிரேஸ்ட புதல்வன் டாக்டர்.சி.திருநாவுக்கரசு அவர்களும், அவர்தம் சகோதரன் முல்லைவெளி சி.நடராசா அவர்களும் கணுக்கேணியூர் சரவணமுத்து-இராமலிங்கம் (சோதிடப் பேராசான்)அவர்களுமாவார்கள்.

ஆக்கங்கள், கவிதைகள்

வற்றாப்பளை கற்பரசி தோத்திரப்பதிகம் மழைக்காவியம் (சுமார் பதினைந்து பாடல்கள் கொண்ட காவியம்), வற்றாப்பளைக் கண்ணகையம்மன் பதிகம், சிலம்பு கூறல் காவியம். (வெற்றிவேற்புலவர் பாடியருளிய இக் காவியத்தை வசன நடையில் எழுதி இலகுவாக்கினார்.) திருவூஞ்சற்பாக்கள், உதிரிக் கவிதைகள், இரங்கற் பாடல்கள், வரவேற்புப்பாடல்கள் போன்ற பல கவிதைகளை ஆக்கியுள்ளார்.


இவரது நாடகங்கள், பாலகாண்டம் (இராமாயணம்), அரிச்சந்திரன் நாடகம், அரியாத்தை, மார்க்கண்டேயர், பாஞ்சாலி சபதம், கண்ணகி வழக்கு "வேலப்பணிக்கன் ஒப்பாரி" (இது வன்னிப் பிரதேசத்தில் வாய்வழியாக வழங்கிய பாடல் வடிவம். இதனை "வேழம் படுத்த வீராங்கனை" எனும் நாட்டுக்கூத்தாக ஆக்கினார். அரியாத்தை எனும் வீரப் பெண்ணின் சாதனையை நாட்டுக்கூத்தாக ஆக்கிய சிந்தனையாளர், வில்லுப்பாட்டுக்கள், இடையண்ணன் கதை, மண்ணும் மனமும், சிவனே சக்தி, சக்தியே சிவம்.

*பாராட்டுக்கள் விருதுகள்*

காரைநகர் மணிவாசகர், சபையினரால் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றமைக்காக, கவிசேகரன்" எனும் பட்டமும் விருதும் வழங்கப்பட்டன. வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது 10-10-2004 இல் வழங்கப்பட்டது. தமிழ்சமயப் பணிகளுக்காக "தமிழ்மணி பட்டமும் "கலாபூஷணம்" பட்டமும் இந்து கலாசார அமைச்சு, கலாசார அமைச்சு என்பவற்றால் வழங்கப்பட்டன. இந்துக்கோயில் அமைப்புக்கள் "பௌராணிக கலாநிதி" பட்டத்தையும் வழங்கின. இவரின் சேவைக்காக மக்கள் மத்தியில் பெருவிருப்புடன் முழுநாள் பெருவிழாவொன்று "அமுதவிழா"வாகக் கொண்டாடப்பட்டது. 09.09.2011 இல் அமரராகிய இவரின் திருவுருவச்சிலை 04.02.2015 இல் நிறுவப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




தமிழ்த்தூது
வண.பிதா.தனிநாயகம் அடிகளார்



கலாநிதி அகளங்கன்

மொழிபெயர்ப்புக்கவிதை

# நட்சத்திரங்களும் நானும்

நட்சத்திரங்களும் நானும்
கிளர்ச்சியூட்டாத
அவயங்களின் பங்காளிகளாக
வீதிகளில் தனித்தனியாக
ஒவ்வொருநாளும்
உறங்குகின்றோம்
இருந்தும்
மற்றவர் தூக்கத்துள்
ஊடுருவத் தயங்குகின்றோம்

விடியல் வேளைகளில்
பத்திரிகை விற்கும் பையன்
என்னை எழுப்புகிறபோது
எனக்கு நன்கு தெரியும்
சூரியன் எனது வீட்டை
துயில் எழுப்பி விட்டானென்று.
எல்லா நட்சத்திரங்களும்
துடைக்கப்பட்டு விட்டன
நான் எனது முறைக்காக
காத்திருக்கிறேன்

வீதிபெருக்குவோர்
குறுக்கே வரும்போது
எனக்கு நன்கு புரிந்து விட்டது
வீதி சவாரிக்கு
தயாராகி விட்டதென்று !

நான் எழுந்து விட்டேன்
இல்லாவிட்டால்
தூள்தூளாக
சிதறடிக்கப்பட்டுவிடுவேன்.
நான் எழுந்து விட்டேன்
இல்லாவிட்டால்
யாரும் சுவைக்கமுடியாத
அரை அவியல்
மாமிசத் துண்டு போல
கூரிய திரிசூல நுனியில்
சிலுவையிற் போல
அறையப்பட்டுவிடுவேன்
நான் எழுந்து விட்டேன்
இல்லாவிட்டால்
சூலத்தைக் கழற்றவும் முடியாது

ஒரு கொட்டாவி போல்
எனது கதவு திறக்கின்றது.
வீதியில் இருந்து
என்னை நானே
பொறுக்கி எடுத்து
உள்ளே எறிகின்றேன்.
அந்த மூடிய உட்பகுதியில்
பாதுகாப்பாக என்னை
நிலைநிறுத்திக் கொண்டேன்
கிழக்குத் திசையில்
ஆனால் நிர்வாணத்துடன்

எனது மனைவி
வீட்டைக் கூட்டி
குப்பையை அள்ளி
தெருவில் எறிகிறாள்
எனக்குப் பயமாக இருக்கிறது.
என்னை அந்த குப்பைக்குள்
கண்டு விடுவாளே என்று

பஞ்சாபி மூலம்ஹபர்ஜன்சிங்
ஆங்கிலத்தில் :எஸ்.சி.நருல்லா
தமிழில் : கந்தையாஸ்ரீகணேசன்

# இலிங்கத் திருமேனி

அருட்கலைவாரிதி
ஸ்தபதி.சு.சண்முகவடிவேல்

தனக்கு மேலான பொருள் இல்லாததாய், குணம் குறி அற்றதாய், மனம் வாக்குகளால் அறிய முடியாததாய். ஆனந்த சொரூபியாய், பேரொளியாய் எங்கும் நிறைந்து விளங்குகின்றார் கடவுள். இத்தகைய சிறப்புப் பொருந்திய கடவுள் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு திருமேனி கொள்கிறார். அவையாவன அருவம், உருவம், அருவுருவம், இவற்றை நிஷ்களம், சகளம், சகளநிஷ்களம் என சிற்ப, ஆகம நூல்கள் சிறப்பித்துக் கூறும்.

கண்ணுக்குப் புலப்படுவதும், அவயங்கள், உறுப்புக்கள் பூரணமாக அமையப் பெற்றதுமான நடராஜ மூர்த்தம், சந்திரசேகர மூர்த்தம் உருவத்திருமேனியாகும். அவயங்கள், உறுப்புக்கள் அற்ற இலிங்கம் அருவத்திருமேனி ஆகும். அவயவ உறுப்புக்கள் இணைந்ததும் உருவமற்றதுமான இலிங்கத்துடன் சேர்ந்திருக்கும் முகலிங்கம் அருவுருவத்திருமேனியாகும்.

*இலிங்க தத்துவம்*

இலிங்கம் தத்துவக்கருத்துக்கள் நிறைந்துள்ள கடவுளின் சின்னமாகும். சிவத்தின் அடையாளமாகக் கொள்ளப்படுவதால் சிவலிங்கம் எனப்படும். இலிங்கம் என்பதில் லிங் என்பது ஒடுக்கத்தையும், கம் என்பது தோற்றத்தையும் குறிக்கின்றது. ஆகவே சிவலிங்கம் தோற்ற ஒடுக்கத்தின் சின்னமாகும். இது இப்பிரபஞ்சத்தைப் படைக்கும் தன்மை வாய்ந்தமையால், சிருஷ்டியின் சின்னமாகவும் கருதுவர்.

பேரொளியான கடவுளிடமிருந்து பல தத்துவங்கள் தோன்றின. சிருஷ்டி (லிங்கம்) காலத்தில் சாந்தி தத்துவமும், சாந்தியிலிருந்து சக்தி தத்துவமும், நாதமும் பிந்துவும் தோன்றின. நாதம் - சத் என்றும் பிந்து – மனோன்மணி என்றும் சொல்லப்படும். மனோன்மணியிலிருந்து ஈஸ்வரன் தோன்றினான். ஈஸ்வரனிலிருந்து மகேஸ்வரனும், மகேஸ்வரனிடமிருந்து விஷ்ணுவும், விஷ்ணுவிடமிருந்து பிரம்மாவும், பிரம்மாவிடமிருந்து தேவர்கள், தானவர்கள், ஜீவராசிகள் தோன்றினார்கள். இவை ஒவ்வொன்றும் தத்துவங்களே.

உருவமற்ற முதல் மூன்று தத்துவங்களான இலிங்கம், சாந்தி, சக்தி வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதன, பேரருள் உடையன. இதை நிஷ்களம் என சிற்ப ஆகம நூல்கள் சிறப்பிக்கும். சிவமே சகளம் என்ற உருவமாகும். நாதம், பிந்து சகளநிஷ்களம் என்ற அருவுருவமாகும். நாதம் லிங்க வடிவமாகும். பிந்து பீடம் என்ற ஆவுடையார் ஆகும்.

இலிங்கம் என்ற தண்டு சிவரூபம், யோனி என்ற ஆவுடையார் சக்தி ரூபம். இவ் இரண்டும் ஓசையும் ஒலியும் போல, நெருப்பும் சூடும் போல பிரிக்க முடியாமல் என்றும் இணைந்தே இருக்கும்.

*இலிங்க அமைப்பு*

இலிங்கம் என்ற தண்டுப் பகுதியும், யோனி என்ற ஆவுடையார் பகுதியும் இணைந்ததே இலிங்கத்திருமேனி ஆகும். தண்டுப்பகுதி மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கும். சதுரமாக அமைந்த கீழ்ப்பகுதி பிரம்ம பாகம் எனப்படும்.

எட்டுப்பட்டமாக அமைந்த நடுப்பகுதி விஷ்ணு பாகம் எனப்படும். உருளையாக அமைந்த மேல் பகுதி ருத்ர பாகம் எனப்படும். இதுவே பூஜா பாகம் ஆகும். இப் பகுதிகள் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களைக் குறிக்கும்.


யோனியாகிய ஆவுடையார், வட்டமாக அமைந்து நடுவில் ஒடுங்கி கோமுகத்துடன் கூடியதாக அமையும். ஆவுடையாரின் நடுவில் துளையிட்டு, இலிங்கத்தை செருகி ஒன்றாக்கப்படும். இது கிரியா இலிங்கமாகும்.

சுயம்பு, பாண லிங்கங்களில் பிரம்ம, விஷ்ணு பாகம் இருக்கமாட்டாது. இவை ஆவுடையாருடன் இணைந்ததாக பூசிக்கப்படும். *முகலிங்கம்*

இலிங்க நாளத்தின் ருத்ர பாகத்தில் புடைப்புச்சிற்பமாக, சதாசிவ மூர்த்தியின் நான்கு முகங்கள் அமைக்கப்படும். அருவுருவத்திருமேனியை உணர்த்துவதற்காக ஐந்தாவது முகம் காட்டப்படுவதில்லை. மேற்படி அமைப்புடன் கூடிய இலிங்க நாளத்துடன், ஆவுடையார் என்ற யோனிப் பகுதியும் சேர்ந்ததே முக லிங்கமாகும். இதுவே அருவுருவத் திருமேனியாகும்.

மேலும் இலிங்கத்திருமேனி சலம் (அசைவது), அசலம் (அசையாதது), சலாசலம் (அசைவதும் அசையாததும்) என முப்பெரும் பிரிவுகளில் அடங்கும்.

கல், செம்பு, இரத்தினம், மரம், ஸ்படிகம், மணல், மண், அரிசி, சாணம், வெண்ணெய், சந்தனம், ருத்திராஷம், பூ, வெல்லம் என எல்லாப் பொருள்களிலும் இலிங்கம் அமைத்து வழிபடலாம். எனினும் கல்லாலான சிவலிங்கமே பிரதிஷ்டைக்கு ஏற்றது, என்றும் நிலையானது. துன்பங்களிலிருந்து விடுபட்டு இன்பமடைய இலிங்க வழிபாடு ஏற்றது. இலிங்க வழிபாட்டால் சிவத்தின் ஞான அருளைப்பெறலாம். அத்துடன் பிறவிப்பிணி நீங்கி இறைவனை அடையலாம். ஆகவே பெருமை பொருந்திய வழிபாட்டை மேற்கொண்டு பரம பதி அடைவோமாக.



# வண்மை மிகு வவுனியா

சிவநெறிப் புரவலர் சி. ஏ. இராமஸ்வாமி

1) வடக்கின் வாயிலாய் அமைந்திருக்கும்
வவுனியா பெருமையை யாரறிவார்.
நடக்கக் கூடாதவை நடந்திடவே
நாடி வந்தார்பலர் தானுமிங்கே
மிடுக்கிற் குறையா மேன்மக்களும்
மிடியால் உழன்ற மனிதர்களும்
அடக்க முடியா வேதனையை
அடக்கிக் கொண்டே ஓடிவந்தார்

2) வளமுள்ள வயல்கள் வாவிகளும்
வளத்தைச் சேர்த்திடும் மண்ணிதுவாம்
குளமொடு கோவில் குவிந்திருக்கும்
குறிப்பிடத் தக்க மண்ணிதுவாம்
களம்பல கண்ட காலத்திலும்
கவனத்தை ஈர்த்த மண்ணிதுவாம்
அளவில் செல்வம் இருந்தாலும்
ஆரும் அள்ளிக் கொடுப்பதுண்டோ

3) வண்மையி னால்உயர் வானவரும்
வாடி வருந்திய போதினிலே
உண்மை நிலையை உணர்ந்தவரும்
ஊன்உடை உறையுள் உதவினராம்
பெண்மை கண்டஅச் சீரழிவை
பெரிதும் நினைந்தே உதவிநின்றார்
அண்மைக் காலத்தின் அழிவதனை
ஆரும் தாங்கவும் ஒண்ணாதே

4) அவித்த உணவை எடுத்துச்சென்று
ஆலயத் தாரெலாம் உதவி நின்றார்
குவித்த செல்வம் உள்ளவர்க்கும்
கூனிக் குறுகி வாழ்ந்தவர்க்கும்
தவித்த வாய்க்குத் தண்ணீரும்
தந்தே உதவி செய்துநின்றார்
பவித்திர மான பணியொன்றாய்ப்
பாரோர் போற்றிப் புகழுகின்றார்.

5) சிவனுறை கோவில் கோவிற்குளம்
சிறுவர் காப்பகம் முதியோர்இல்லம்
நவமெனும் நல்லார் உளக்கருத்தில்
நலம்பெறும் பசுக்கள் பராமரிப்பு
தவமெனக் கருதித் தாம்செய்யும்
தகைமைகண் டுலகம் வியக்கிறது
அவனியில் எங்கும் காண ஒண்ணா
அற்புத மாக விளங்கிடுமாம்.

6) ஆலைக ளோடுபள்ளிச் சாலைகளும்
அறிவொடு உணவும் அளிக்குமிடம்
வாலைக ளும்வடி வானவரும்
வலம்வந்து மகிழ்ந்து வாழுமிடம்
மாலைகளில் மஞ்சள் வேளைகளில்
மாங்குயில் சோலையில் கூவிநிற்கும்
பாலைக் கறந்திடும் பசுஇனங்கள்
பழவகை மரங்களும் நிறைந்தமண்ணாம்

சிறுகதை

# கற்பூரம்

மாணிக்கம் ஜெகன்

வெள்ளிக்கிழமை போயா விடுமுறை மூன்று நாட்கள் தொடர்ந்து விடுமுறை. நதி இதை நினைத்துக் கொண்டே நித்திரை விட்டெழுந்தான். அம்மா எரிந்து கொண்டிருந்த சிமிலி விளக்கை குறைத்து இறுதியில் அணைத்து விட்டாள். தங்கச்சி இன்னும் நித்திரை விட்டு எழும்ப இல்லை. எழும்பினால் பசிக்குது என்டு அழத்தொடங்குவாள். நதி மனதிற்குள் நினைத்துக் கொண்டான். இன்னும் அம்மா தேத்தண்ணி ஊத்த ஆயத்தம் செய்ய இல்லை. சீனியோ தேயிலையோ சிலவேளை அந்த ரெண்டுமே இல்லாமல் இருக்கலாம்.

கடந்த சில வருடங்களுக்கு முன் வேலைக்கு போன அப்பா இன்னும் தன் வீட்டுக்கு வரவில்லை. கனபேர் கண்டபாட்டுக்கு சொன்னவை. அம்மாவும் எவ்வளவோ இடங்களுக்கு போய் பார்த்தவ. ஒண்டும் சரி வர இல்லை. கடைசியில் கச்சேரீல காணமல் போனோர் பதிவு செய்து போட்டு அம்மா வேலைக்கு போக தொடங்கிட்டா. இப்ப ரெண்டு நாளா வேலை இல்ல. வீட்டிலையும் ஒண்டும் இல்லை. இந்த ரெண்டு நாளும் ஒரு நேர சாப்பாடுதான். இண்டைக்கு அதுவும் இல்ல.

'தம்பி இண்டைக்கு என்னடா செய்யிறது' அம்மா அழுவாரைப் போல நதியிடம் கேட்க, நதி என்ன நினைத்தானோ தெரியாது விருட்டென எழும்பி பின்பக்கம் ஓடினான். பின்பக்கம் ஓடின நதி காலைக்கடனை முடித்து உள்ள வந்து சாமி கும்பிட்டிட்டு சொன்னான். 'அம்மா இண்டைக்கு சிந்தாமணி பிள்ளையார் கோயிலில அன்னதானமாம். நேரத்தோட போய் ஏதும் உதவி செய்து கொடுத்தா இந்த சிவல ஐயா, வீட்டுக்கு கொண்டு போக சொப்பிங் பாக்கில சோறு தருவார். அங்கதான் போகப் போறன்' என்று சொல்லிக் கொண்டே காற்சட்டை பக்கற்றில 2,3 சொப்பிங் பாக்கை திணித்தான்.

'கவனமா போ நதி. ஓரமா போ. நெருப்புகளுக்கு கிட்ட போகாதே' எண்டு அம்மா சொல்லிக் கொண்டு இருக்கும் போது நதி படலைக்கு வெளியே வந்து விட்டான்.

நதி கோயிலுக்கு கிட்ட வந்து விட்டான். பள்ளிக்கூடம் விடுமுறை எண்டதால கோயிலுக்கு பக்கத்தில் கொஞ்சப் பொடியள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நதி அதை கொஞ்சம் வேடிக்கை பார்த்துக் கொண்ட போது உயர்த்தி அடிக்கப்பட்ட பந்து வீதியில் நதியையும் தாண்டி வர அந்தப் பந்தைப் பிடிக்க ஓடினான் நதி.

நதி பந்தை பிடிக்கவும் ஒரு புதுக்கார் கோயிலுக்கு அருகே உள்ள கடைக்கு எதிரே நின்றது. காரைக் கண்டவுடன் அருகே சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி காரின் கதவருகே போய் கையை நீட்டினாள். அதேவேளை கார்க் கதவும் திறக்கப்பட கை நீட்டிய சிறுமி பரிதாபகரமாக கார் கதவினால் தள்ளப்பட்டு நிலத்திலே வீழ்வதை நதி கண்டான். அந்தப் பார்வையை மாற்றுவதற்கு நதிக்கு கன நேரமாயிற்று.

காரை திறந்த கனவான் போன்றவர் கீழே கிடந்த சிறுமியை கண்டு கொள்ளவில்லை. காரை விட்டு இறங்கியவுடன் நேராக அருகில் இருந்த கடைக்கு சென்று காசை கொடுக்கவும் கடைக்காரன் மூன்று கற்பூரக் கட்டிகளை மிக மரியாதையோடு கொடுக்க மீண்டும் காரை நோக்கி நடந்துவந்து காரில் ஏறி சென்றுவிட்டார். நடந்த அத்தனை விசயங்களையும் பார்த்துக் கொண்டிருந்த நதி

கையில் எடுத்த பந்தை விளையாடிக் கொண்டிருந்தவர்களை நோக்கி எறிந்து விட்டு கோயிலை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

நாதஸ்வர ஒலியும் மேளச்சத்தமும் கலந்து ஒலிக்க 'பூசை தொடங்கி விட்டது போல' என மனதில் எண்ணிக் கொண்டு கால்களைக் கழுவி கோயிலின் முன்புறத்தில் உடைக்கப்பட்ட தேங்காய் சில்லொன்றை எடுத்து கடிக்கத் தொடங்க மீண்டும் அதே கார். ஏழைச் சிறுமியை தள்ளி விழுத்திய கார் கோயிலுக்குள் வருவதை ஆச்சரியத்துடன் பார்த்தான் நதி.

உள்ளே வந்த கார் ஓரமாக நிறுத்தப்பட்டது. காரில் வந்தவர், அந்தக் கடையில் கற்பூரம் வாங்கியவர் தான். கோயில் கோபுரத்தை நோக்கி தனது இரு கரங்களையும் உயர்த்தி கண்களை மூடி கும்பிட்டார். சில நிமிடங்கள் அவர் கண்களைத் திறக்கவில்லை. இதை வைத்த கண் வாங்காமலே நதி திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

கண்களைத் திறந்த கார்க்காரர் கற்பூரம் கொழுத்துவதற்கு கற்பூரச் சட்டியைத் தேடவே, கற்பூரச் சட்டி கோயிலின் உள்ளே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. கார்க்காரரும் கற்பூர சட்டியை நோக்கி ஓரடி முன் வைத்தார்.

கார்க் காரரின் கையில் கற்பூரம். கற்பூரச் சட்டி உள்ளே. என்ன நினைத்தாரோ தெரியாது அருகிலே நின்ற நதியை சைகை காட்டி அழைத்து கற்பூரத்தை அவன் கையில் கொடுத்து உள்ளே எரியும் கற்பூரச் சட்டியில் போட்டு விடும்படி சைகை மூலமாகவே சொல்லி விட்டு நின்றார்.

கற்பூரத்தை கையில் வாங்கிய நதி கற்பூரச் சட்டியை நோக்கி நடந்தான். கற்பூரச்சட்டியை நோக்கி நதி போவதை பார்த்துக் கொண்டிருந்த கார் கனவான் மெல்ல திரும்பி காரை நோக்கி நடந்தார்.

கற்பூரச்சட்டிக்கு அருகே சென்ற நதி கையில் கிடந்த கற்பூரத்தையும், எரியும் கற்பூர சட்டியையும் மாறி மாறி பார்த்தான். இடையே கார் கதவால் தள்ளப்பட்ட சிறுமியையும் நினைத்துக் கொண்டான். ஒரு முடிவுடன் திரும்பி கார்க் கனவானை பார்க்க அவர் காரை நோக்கி நடந்து கொண்டிருந்தார். இதுதான் சமயம் என எண்ணிய நதி ஆலய கதவருகே மறைந்து கொண்டான்.

கதவின் இடுக்கு வழியாக கார் போவதை உறுதிப்படுத்தியபின் கற்பூரத்தோடு தலை தெறிக்க ஓடினான் நதி. ஓடி வந்த நதி கடையின் ஓரத்தில் சிறுமி சொக்கட்டான் விளையாடுவதைக் கண்டான். நேராக கடைக்காரனிடம் கொண்டுவந்த கற்பூரக் கட்டியை கொடுக்க 'கடைக்காரரோ காசு தரமாட்டன். சாமான் தான் தருவன். என்ன வேணும்' என்று கேட்க நதி ஒரு பணிஸ் பக்கற்றை கையில் எடுக்க 'சரி கொண்டு போ' எனக் கடைக்காரன் கூறினான்.

துணிவுடன் வெளியே வந்த நதி சிறுமியைத் தேடவே, சிறுமி குழாய்க் கிணற்றில் தண்ணி குடித்துக் கொண்டிருந்தாள். சிறுமியை நோக்கி நதி நடந்து போய் 'தங்கச்சி இந்தா' என்று பணிஸை நீட்டியவுடன் ஆவலுடன் பணிஸை வாங்கினாள் சிறுமி. சிறுமியிடம் பணிசை கொடுத்து விட்டு திரும்பி 2,3 அடி நடந்திருப்பான் 'அண்ணா..' என்று அந்த சிறுமி கூப்பிடுவது நதிக்குக் கேட்டது. சிறுமியை நோக்கி நதி திரும்பவே, சிறுமி நதி கொடுத்த பணிசை இரண்டாகப் பிய்த்து ஒரு துண்டு பணிசை தன்னிடம் வைத்துக் கொண்டு மற்றைய துண்டு பணிசை நதியை நோக்கி

நீட்டினாள். நதி ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனான். தன்னை சுதாரித்துக் கொண்ட நதி சிறுமியிடம் இருந்த பணிசை பெற்றுக் கொண்டு ஆலயத்தை நோக்கி நடந்தான். ஆலயத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த நதியை சிறுமி நன்றிப் பெருக்குடன் பார்த்துக் கொண்டிருந்தாள். இப்போது ஆலயத்தின் கற்பூரத்தட்டு சுடர் விட்டு பிரகாசித்து எரிந்து கொண்டிருந்தது.

## ஈழத்தமிழ் வாழ்வை மொழிபெயர்ப்பினூடாக உலக இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்த ஆங்கிலப் பேராசிரியர் செல்வா கனகநாயகம்



ஓர் ஆசிரியராய், இரு மொழி அறிஞனாய், மொழி பெயர்ப்பாளராய், உலக இலக்கியத் தரத்திலும், தமிழிலக்கியத் தளத்திலும் இயங்கிய ஆங்கிலப் பேராசிரியர் செல்வா கனகநாயகம் அவர்கள் கனடா றோயல் சொசைட்டி வழங்கிய அதியுயர் இலக்கியப் பரிசு பெற்ற கடந்த டிசம்பர் 23ம் திகதி மாலை காலமானார்.

தமிழ் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களின் வழித்தோன்றலான கனகநாயகம் அவர்கள் எழுபதுகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தைப் படித்து 1979 இல யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகி கனடா பிரிட்டிஷ் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் 1985 இல் கலாநிதி பட்டமும் பெற்று ரொறொன்ரோப் ப்ல்கலைக்கழகத்தில் 1989 இல் விரிவுரையாளராகி 2002 இல் ஆங்கில பேராசிரியராகவும் மிளிர்ந்தார் பேராசிரியர் கனகநாயகம் அவர்கள். மிலேனியம் ஆண்டில் தென்கிழக்காசிய கற்கைகளின் பணிப்பாளர் ஆகிய பெருமைக்குரியவர்.

உலகளாவிய ரீதியில் இயங்கும் பல்வேறு ஆங்கில தமிழ் சஞ்சிகைகளில் எழுதியும், மொழிபெயர்ப்பு ஆக்கங்களை வெளியிட்டும் சர்வதேச தரத்தில் தமது பணிகளை நிறைவேற்றி வந்தார். பேராசிரியர் செல்வா கனகநாயகம் அவர்கள் Lute song and Lament (2001) எனும் தொகுதியில் இலங்கை தமிழர் சார்ந்த படைப்புக்களை சக நண்பர்களுடன் இணைந்து (பத்மநாப ஐயர், சேரன்) மொழிபெயர்த்தும் தொகுத்தும் வெளியிட்ட பெருமைக்குரியர். இலங்கை தமிழ்க் கவிஞர்களில் முக்கியமாக போற்றப்படும், ஜெயபாலன், சேரன், புதுவை ஆகியோரது கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் தொகுத்தும் 'Wilting Laughter: Three Tamil Poets'(2009) எனும் தொகுதியாகவும், சேரனின் கவிதைகளை ஆங்கிலத்தில் தொகுத்து You cannot Turn Away (2011) எனும் தொகுதியாகவும் எஸ். பொ. வின் சடங்கு நாவலை Ritual எனும் தலைப்பிலும் வெளியிட்டார். அண்மையில் தமிழ் சார்ந்த உலக இலக்கிய வெளிப்பாடாக அமையக் கூடிய இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மலேசியா மற்றும் புலம்பெயர் தமிழ் கவிதைகளைத் தொகுத்து ஆங்கிலத்தில் In our translated world (2013) எனும் தலைப்பில் நூலாக தந்துள்ளார்.

ஆங்கிலத்தில் Commonwealth Literature மற்றும் Post-colonial Literature எனும் பாடங்களில், 'Counter realism and Indo Anglican Fiction' (2002), 'A History of South Asian Writing'. 'Configuration of Exile: South Asian Writers and Their World'(1995), Dark Antonyms and Paradise: The Poetry of Rienzi Crusz (!997), Structures of Negation: The Writings of ZulfikarGhose (1993) போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவருக்கு வட்டத்தின் அஞ்சலி.

பேராயிரவர்

# வாழ்த்து

**இசை இளவரசன் கந்தப்பு ஜெயந்தன்**

2013ம் ஆண்டின் சிறந்த கிராமிய நவீன இசைக்கான தேசிய இசை விருதும், சிறந்த கிராமிய பாடகருக்கான விருதும் பெற்றவர். தொடர்ந்தும் 2014ம் ஆண்டில் இரண்டு தேசிய இசை விருதுகள், முறையே சிறந்த இசையமைபாளருக்கான விருதும் சிறந்த நவீன கிராமிய இசை வடிவத்துக்கான விருதும் பெற்றுள்ளார். மேலும் 2014ம் ஆண்டில் சுடர் விருது சிறந்த பாடகருக்காகவும் வேல் சினிமா விருது வழங்கும் விழாவில் சிறந்த இசையமைப்பாளருக்கான விருதும் பெற்றவர். அவருக்கு வட்டத்தின் வாழ்த்து.








## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

29.03.2015

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும் தீவிர கம்யூனிஸ்ட்வாதியும் ஆகிய அமரர்.சூடாமணி இ.கா.கணபதிப்பிள்ளை அவர்களுக்கு எமது அஞ்சலிகள்.

# விருதுகள் - 2014

## எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்

## தமிழியல் விருது 2014 முடிவுகள்

டாக்டர் ஓ.கே.குணநாதன்

(மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்புமையம்)

*உயர் தமிழியல் விருது – டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுதீன்*

*தமிழியல் விருது (ரூபா 15000/=) பெறும் 5 மூத்த படைப்பாளிகள்*

பேராசிரியர் வே.அந்தனிஜான் அழகரசன் (அமெரிக்கா),

பேராசிரியர் கு.கலாமணி (யாழ்ப்பாணம்),

நுணாவிலூர் கா.விஜயரத்தினம் (லண்டன்),

ஆ.தங்கராசா (மட்டக்களப்பு),

நந்தினி சேவியர் (திருகோணமலை)

*தமிழ்ப்பணியாளர் தமிழியல் விருது - ரூபா 15000/= பெறும் அயல்நாட்டுப் படைப்பாளி* – நாவலாசிரியர் கு.சின்னப்பாரதி (நாமக்கல் தழிழ்நாடு)

*இனநல்லுறவு தமிழியல் விருது ரூபா 10000/= பெறும் சிங்கள மொழிப் பணியாளர்* – எஸ். கொடகே

*ஓவியருக்கான தமிழியல் விருது ரூபா 10000/= பெறுபவர்*

– என். எஸ். ஞானகுருபரன்

சிறந்த வடிவமைப்புக்கான தழிழியல் விருது -ரூபா10000/= பெறுபவர்

– கே.எம்.மஸாஹிம்

*சிறந்த சஞ்சிகைக்கான தமிழியல் விருது – ரூபா 10000/=*

– தாய்வீடு (கனடா)

*சிறந்த நூலுக்கான தமிழியல் விருது (2013)*

*ரூபா 10000.00 பெறும் நூல்கள்.*

| | | |
|---|---|---|
| சிறுகதை | – | கோ.சேனாதிராஜா (குதிரைகளும் பறக்கும்) |
| நாவல் | – | தமிழ்க்கவி (ஊழிக்காலம்) |
| கவிதை | – | த.ஜெயசீலன் (எழுதாத ஒரு கவிதை) |
| | | த.உருத்திரா (ஆண்கோணி) |
| சிறுவர் இலக்கியம் | – | சபா சுப்பிரமணியம் (உத்தமன் கதைகள்) |
| நாடகம் | – | பாலு மகேந்திரா (கதை நேரம் - தொலைக்காட்சிநாடகங்கள்) |
| காவியம் | – | டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுதீன் (எல்லாள காவியம்) |
| சமயம் | – | என்.கே.எஸ்.திருச்செல்வம் (பாரம்பரியமிக்க கதிர்காம யாத்திரையும் கந்தசாமிக் கடவுளின் புனித பூமியும்) |
| கட்டுரை | – | கே.ஜீ.மகாதேவா (நிஜங்களின் பதிவுகள்) |

வரலாற்று ஆய்வு – ஞா.ஜெகநாதன் (நாகர் எழு வன்னி)

ஆய்வியல் – எம்.சி.றஸ்மின் (போர்க்கால சிங்கள இலக்கியங்கள்)

பயணக்கட்டுரை – ஞா. பாலச்சந்திரன் ('அங்கோர்' உலகப் பெருங்கோயில்)

அறிவியல் – கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் (சுதேச மருத்துவம் பற்றிய இலங்கை தமிழ் நூல்கள்)

தேசிய சாஹித்திய விருதுகள் (தமிழ் மொழி) 2014

அதியுயர் சாஹித்திய ரத்னா விருது – தெளிவத்தை ஜோசப் –

| | | |
|---|---|---|
| சிறந்த நாவல் | 'குடிமைகள்' | தெணியான் |
| சிறந்த இளைஞர் நாவல் | 'அட்டாதொட்டி' | ஓ.கே.குணநாதன் |
| சிறந்த சிறுகதை நூல் | 'வெந்துதணிந்தது காலம்' | மு.சிவலிங்கம் |
| சிறந்த கவிதை நூல் | 'ஆண்கோணி' | த.உருத்திரா |
| சிறந்த சிறுவர் இலக்கியம் | 'அமைதிப் பூங்கா' | யோ.யோன்சன் ராஜ்குமார் |
| சிறந்த புலமைத்துவஆய்வு | 'சுதேச மருத்துவம் பற்றிய தமிழ் நூல்கள்' | கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் |
| சிறந்த நானாவிதஇலக்கியம் | 'அங்கோர் உலகப் பெருங்கோயில்' | ஞா.பாலச்சந்திரன் |
| சிறந்த மொழிபெயர்ப்புநூல் | 'சிறுகதைகள் தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு' | சோ.பத்மநாதன் |

**16ஆவது கொடகே தேசிய சாகித்திய விருதுகள் - 2014**

| | | |
|---|---|---|
| சிறந்த நாவல் | 'குடிமைகள்' | தெணியான் |
| சிறந்த சிறுகதைகள் | 'இது நித்தியம்' | மு.பஷீர் |
| சிறந்த சிறுகதைகள் | 'வெந்து தணிந்தது காலம்' | மு.சிவலிங்கம் |
| சிறந்த கவிதை நூல் | 'சிவப்பு டைனோசர்கள்' | சு.தவச்செல்வன் |

முதல்நூலை படைத்த படைப்பாளிக்கான விஷேட பரிசு

'இரவின் மழையில்' ஈழக்கவி (ஏ.எச்.எம்.நவாஸ்)

**கு.சின்னப்ப பாரதி இலக்கிய அறக்கட்டளை (நாமக்கல்)**

**விருதுகள் 2014**

முதன்மை விருது மற்றும் ரூபா 1,00,000 பெறுபவர் - பேரா.அருணன்

'காலந்தோறும் பிராமணீயம்' மற்றும் இலக்கிய ஆய்வுக்காக

சிறப்பு விருது மற்றும் ரூபா 10,000 பெறுபவர்கள்

| | | |
|---|---|---|
| நாவல் | 'குடைநிழல்' | தெளிவத்தை ஜோசப் (இலங்கை) |
| சிறுகதை | 'தவிக்கும் இடைவெளிகள்' | உஷா தீபன் (தமிழ்நாடு) |
| சிறுகதை | 'இப்படியுமா' | ரி.இளங்கோவன் (பாரிஸ்) |
| சிறுகதை | 'வெந்து தணிந்தது காலம்' | மு.சிவலிங்கம் (இலங்கை) |
| மொழிபெயர்ப்பு | 'நள்ளிரவின் குழந்தைகள்' சல்மான் ருஷ்டி<br>தமிழில் கா.பூரணச்சந்திரன் (தமிழ்நாடு) | |
| மொழிபெயர்ப்பு | 'பாலைநில ரோஜா'<br>சிங்களத்தில் உபாலி லீலாரத்ன (இலங்கை) | கு.சின்னப்ப பாரதி |
| கட்டுரை | 'நூல் தேட்டம்' | என்.செல்வராஜா,<br>நூலகவியலாளர் (இலண்டன்) |
| சமூகப்பணி | அந்தனி ஜீவா (இலங்கை) | |
| சமூகப் பணி | பெங்களூர் தமிழ்ச் சங்கம் (தமிழ்நாடு) | |

## வடமாகாண இலக்கிய விழாவில் சிறந்த நூல் விருது பெறுவோர் (2014)

உயர்கல்வி - திரு.த.கலாமணி

மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல்

கவிதை - திருமதி.செல்வமனோகரி சிவானந்தன்

மழுங்கடிக்கப்பட்ட அடையாளங்கள்

ஆய்வு - பேராசிரியர் நா.சண்முகலிங்கம்

அறிவின் சமுகவியல் சிந்தனைகள்.

சிறுகதை

1. திருமதி.சந்திரலட்சுமி தனபாலசிங்கம். (பிறந்து விட்ட புதுயுகத்தில்)
2. திரு.மு.இராதாகிருஷ்ணன் (உள்மனச்சித்திரம்)

பல்துறை - பேராசிரியர் மா. சின்னத்தம்பி

புதிதாக சிந்திப்போம். - சமுதாயத்திற்கான கல்வி.

நாடகம் - திரு யோ.ராஜ்குமார் (அமைதிப்பூங்கா)

நாவல் - திரு.எஸ்.ஏ. உதயன். (சங்குமுள்ளு)

சிறுவர் இலக்கியம் - திரு.ப.றமேஸ் (அன்புப் பிள்ளைகளே)

மொழிபெயர்ப்பு - திரு.சோ. பத்மநாதன் (Tamil short stories from sri lanka)

இலங்கை இலக்கியப் பேரவையின் (யாழ் இலக்கிய வட்டம்)

சிறந்த நூற்பரிசு (2013)

1. காவியம் :- எல்லாள காவியம் டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுதீன்

2. கவிதை :- எழுதாத ஒருகவிதை த. ஜெயசீலன்

3. சிறுகதை :- அம்மாவின் உலகம் த. கலாமணி

4. நாவல் :- வேப்பமரம் கலையார்வன். அ. இராயப்பு

5. பல்துறை :- ஜன்னலைத்திற அ. ஸ. அகமட் கியாஸ்

6. சமயம் :- திருத்தலங்கள் பதினாறு. பொ. சிவப்பிரகாசம்

7. அறிவியல் :- சுதேச மருத்துவம் பற்றிய இலங்கைத்தமிழ் நூல்கள்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்.

8. ஆய்வு :- போர்க்கால சிங்கள இலக்கியங்கள் ஏம். சி. ரஸ்மின்

9. சிறுவர் இலக்கியம் :- அமைதிப் பூங்கா ஜோன்சன் ராஜ்குமார்.

10. நாட்டிய நாடகம் :- சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

திருமதி. ஜெயக்குமாரி கந்தவேள்

11. மொழிபெயர்ப்பு :- சந்தன மரம் அ. மு. பாருக்

வடக்குமாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் கலை இலக்கியப் பணிக்காக முதலமைச்சர் விருது பெற்றோர் - 2014

திரு.க. சட்டநாதன். (இலக்கியம்)

திரு.சு.வெ. அரியநாயகம். (இலக்கியம்)

திருமதி. கோகிலா மகேந்தின். (இலக்கியம்)

திருமதி. தமயந்தி சுந்தரலிங்கம் - தமிழ்க்கவி (இலக்கியம்)

திரு. ஆ.க.கருணாகரன் (இசை)

திருமதி. கருணாதேவி அற்புதராஜா (இசை)

திரு. ச.புவனேஸ்வரன் (இசைநாடகம்)

திரு. அ.வல்லிபுரம் (இசைநாடகம்)

திரு. மு.அருட்பிரகாசம் (நாட்டுக்கூத்து)

திரு. ஆ.முருகப்பிள்ளை (நாட்டுக்கூத்து)

திரு. அ.செபமாலை (நாட்டுக்கூத்து)

திரு. செ.பிலிப்பு (நாட்டுக்கூத்து)

திரு. மு.செல்லத்துரை (சித்து நடைக் கூத்து)

திரு. மா.சீவரத்தினம் (நாடகம்)

திரு. இ.யேசுதாசன் (நாடகம்)

திரு. வ.ஏழுமலைப்பிள்ளை (நாடகம்)

திரு. சி.அமரசிங்கம் (சிற்பம்)

திருமதி. லீலாம்பிகை செல்வராசா (நடனம்)

திரு சி.மகேந்திரம் (மிருதங்கம்)

செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம் (பல்துறை)

திரு. மு.சிவப்பிரகாசம் (கிராமியக் கலைகள்)

திரு. க.சந்திர சேகர (கைவினை)

அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் - வட்டம்

# 5ம் ஆண்டு நினைவஞ்சலி 20-12-2015



வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட பொருளாளர் ஆக கடமையாற்றி அமரத்துவம் அடைந்த அமரர் கனகசபாபதி ரணேஷ் (மல்ரிவிஷன் அச்சுக்கலையக நிர்வாக பணிப்பாளரும் பாடசாலை அதிபரும்) அவர்களுக்கு வட்டத்தின் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வ/கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**

## வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாதாந்த முழுநிலா கருத்தாடல் நிகழ்வுகள் (2014)

*து.நந்தீஸ்வரி*

நிகழ்வு – 165 (15.01.2014)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் பதினாறாண்டு நிறைவு விழா வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசாரமண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றுது. தமிழறிஞர் கலாநிதி அகளங்கன் அவர்கள் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக சிறப்பித்தவர், யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் திரு.க.அருள்வேல் அவர்கள். இவ் விழாவானது வழமைபோல் மூன்று நிகழ்வுகளாக இடம் பெற்றது. நூல் வெளியீடு சான்றோர் கௌரவிப்பு, கலைநிகழ்ச்சிகள் என்பவையே அவை.

நிகழ்வில் “மாருதம்” சஞ்சிகை இதழ் 14 வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் முருகேசு – நந்தகுமார் எழுதிய இருட்டு மனிதர்கள் நாவல், கலாநிதி தந்தையா ஸ்ரீகணேசன் அவர்களின் பேராசிரியர் சி.மௌனகுரு நேர்காணல்கள், தொகுப்பும் வெளியிட்டு வைக்கப்பட்டன. கவியளிக்கை, நடனம், நாடகம் முதலிய நிகழ்ச்சிகளோடு தமிழ்த்தூது. வண.பிதா தனிநாயகம் அடிகளார் நினைவுப் பேருரையும் இடம் பெற்றது. நினைவுரையினை மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்பணி தமிழ்நேசன் அடிகளார் வழங்கினார். இவ் விழாவில் வவுனியா ஆங்கில மொழித்துறையில் சேவையாற்றிவரும் திரு. சு.பூபாலசிங்கம், திருமதி.புவனநாபகி ஐயம்பிள்ளை ஆகிய இருவருக்கும் ஆங்கில கல்விச் செல்வர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. கௌரவிப்பு உரையினை கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள் நிகழ்த்தினார். வரவேற்புரை செல்வி து.நந்தீஸ்வரி, நன்றியுரை த.பிரதாபன்.

நிகழ்வு – 166 (14.02.2014)

மாருதம் இதழ் 14 பற்றிய விமர்சனமும், 16 ஆண்டு நிறைவு விழா பற்றிய கலந்துரையாடலும் கலாநிதி அகளங்கன் அவர்கள் தலைமையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ்த்தாப் வாழ்த்து திரு.ஞா.வசந், வரவேற்புரை திரு.த.தனசீலன், விமர்சன உரை திரு.ஆ.லோகேஸ்வரன் அவர்கள் நன்றியுரை திரு.மாணிக்கம் ஜெகன்

நிகழ்வு – 167 (16.03.2014)

திரு.கந்தைபா ஸ்ரீ கந்தவேள் அவர்கள் தலைமையில் மறைந்த திரைக்கலை மேதை பாலுமகேந்திராவின் நினைவுக் கருத்தாடல் நிகழ்வு, சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெற்றது. வித்யாரத்தினா ந.பார்திபன் அவர்கள் அமரர் கே.எஸ்.பாலச்சந்திரன், மூத்த எழுத்தாளர் அமரர்.ந.பாலேஸ்வரி ஆகியோரை நினைவு கூர்ந்தார். திரைப்பட இயக்குனர் பாலு மகேந்திரா அவர்களிற்கான நினைவுரையினை இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாஸன் அவர்கள் வழங்கினார்கள். வரவேற்புரை திரு.மாணிக்கம் ஜெகன். நன்றியுரை து.நந்தீஸ்வரி.

நிகழ்வு – 168 (15.04.2014)

பொன்வீடியோ உரிமையாளர் இயக்குனர் கே.சுபாஸ்சிங்கம் அவர்களால் இயக்கப்பட்ட கொல்லாதே, நாளைய உலகம், குறும்படங்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமை தாங்கிய இந்

நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் திரு.கா.உதயராசா அவர்கள் பிரதம விருத்தினராகக் கலந்து கொண்டார். கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் அவர்கள் வெளியீட்டுரையினை வழங்க, திரு.கந்தையா ஸ்ரீ கந்தவேள் அவர்கள் விமர்சன உரையினை வழங்கினார்.

நிகழ்வு – 169 (14.05.2014)

வித்தியா ரத்தினா ந.பார்த்திபன் அவர்களின் தலைமையில் திறனாய்வுக்கலை என்ற தலைப்பிலான கருத்தாடல் இடம்பெற்றது. தொடக்க உரை வித்தியா ரத்தினா சி.வரதராஜன். சிறப்புரை கலாநிதி தமிழ்மணி அகளங்கன், வரவேற்புரை திரு.மாணிக்கம் ஜெகன், நன்றியுரை த.தனசீலன். இடம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்.

நிகழ்வு – 170 (12.06.2014)

இலக்கியச் சுடர், வித்தியா ரத்னா ஐ.கதிர்காமசேகரன், அவர்கள் தலைமையில் போட்டிகளும் நடுவர்களும் எனும் தலைப்பில் அமைந்தது. தொடக்கவுரையினை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மூத்த விரிவுரையாளர் திரு.பொ.சத்தியநாதன் அவர்கள் வழங்கினார். கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தனது நடுவர் அனுபவங்களை எடுத்துக் கூறினார். வரவேற்புரை சி.நாகராஜா. நன்றியுரை த.பிரதாபன். இடம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்.

நிகழ்வு 171 (12.07.2014)

செட்டிகுளம் "பசுந்திரா சசி" யின் கட்டடக்காடு நாவல் வெளியீடு கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் பாக்கியம் றெஸ்ட் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக கௌரவ வடமாகாண சுகாதார சுதேசிய வைத்திய அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்தார். நூல் உரையினை வித்தியா ரத்னா திரு.ந.பார்த்திபன் அவர்களும் இன் தமிழ் இனிபன் எஸ்.எஸ்.வாஸன் அவர்களும் வழங்கினர். கட்டடக்காடு நாவலின் சிறப்பு கருத்துரையினை கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள் வழங்கினார் நன்றியுரை இலக்கியச் சுடர் த.பிரதாபன்.

நிகழ்வு – 172 (08.09.2014)

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் திரையில் ஒலித்த பாடல்கள் என்ற தலைப்பில் கலந்துரையாடப்பட்டது. அறிமுகவுரையினை திரு.நா.தியாகராசா அவர்கள் வழங்க, இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாஸன் அவர்களால் சிறப்புரை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சுவாரஸ்யமான கருத்தாடல்களும் இடம் பெற்றன. மறைந்த சிற்பக்கலைஞர் கலாபூசணம் பொ.கனகரெத்தினம் அவர்களுக்கு அஞ்சலி நிகழ்வும் இடம் பெற்றது. வரவேற்புரை திரு.நாகராஜா, நன்றியுரை திரு.மாணிக்கம். ஜெகன். இடம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்.

நிகழ்வு- 173 (08.10.2014)

கலாநிதி அகளங்கன் அவர்களின் தலைமையில் நவராத்திரி தின கவிதை நிகழ்வு சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெற்றது. செல்வி.நந்தீஸ்வரி துரைராசாவின் கவிதை பற்றிய அறிமுக உரையினைத்தொடர்ந்து கவிதைக்களம் நிகழ்வு நடைபெற்றது. 13 கவிஞர்கள் கலந்து சிறப்பித்தனர். கவிஞர் த.ஐங்கரன்

கவிதை தொடர்பான கருத்துரை வழங்கினார். வரவேற்புரை த.பிரதாபன்.நன்றியுரை மாணிக்கம் ஜெகன்.

நிகழ்வு- 174 (06.11.2014)

பட்டிமன்றமும் பயன்பாடும் என்ற தலைப்பில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் அறிமுக உரை வித்தியா ரத்தினா.சி.வரதராஜன், சிறப்புரை இலக்கியச்சுடர் ஐ.கதிர்காமசேகரன், வரவேற்புரை செல்வி.து.நந்தீஸ்வரி.

நிகழ்வு- 175 (06.12.2014)

கலாநிதி தமிழ்மணி அகளங்கள் அவர்கள் தலைமையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர்சங்க மண்டபத்தில். “கலை இலக்கிய வெளிப்பாடும் சமூகமும்” எனும் தொனிப்பொருளில் கலந்துரையாடல் இடம் பெற்றது. இவ் நிகழ்வில் விளையாட்டுத்துறையில் சாதனையின் உச்சத்தைத் தொட்ட முல்லை நகரை பிறப்பிடமாகவும், வ.இறம்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சி.அகிலத்திருநாயகி அவர்களின் அறிமுக நிகழ்வும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. வ.புதுக்குளம் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் திரு ஆ.லோகேஸ்வரன் அவர்கள் உரையாடலை நிகழ்த்தினார். கருத்தாடலை தொடர்ந்து டிசெம்பர் நான்கினை பிறந்ததினமாகக் கொண்ட அகளங்கன் அவர்களுக்கு கவிமாலை சூட்டப்பட்டமை நிகழ்வை மேலும் சிறப்புப்படுத்தியது. வரவேற்புரை- நந்தீஸ்வரி, நன்றியுரை- மாணிக்கம் ஜெகன்.

நிகழ்வு - 176 (28.12.2014)

செல்வி அ.கோபிகாவின் துளிர்க்கும் தளிர்கள் கவிதை நூல் வெளியீடு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் கலாநிதி அகளங்கன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினர் - செல்வி உமா இராசையா (அதிபர்.வ/சைவப்பிரகாச மகளி கல்லூரி)

## 2014இல் வவுனியா மாவட்டத்தில் நடந்த முக்கியமான கலை இலக்கிய நிகழ்வுகள் சில

*த.பிரதாபன்*

❖ 01.02.2014 வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. கயித்தான் பேர்னாட் அவர்களின் மணிவிழா. தலைமை : திரு.கு.சிதம்பரநாதன் (தலைவர், மணிவிழாக்குழு, உபபீடாதிபதி) இடம் : வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

❖ 08.02.2014 வவுனியா பிரதேச செயலக கலை இலக்கிய விழா. தலைமை:திரு.கா.உதயராஜா. பிரதேச செயலாளர், வவுனியா.
பிரதம விருந்தினர் : திருமதி.சரஸ்வதி மோகநாதன். (மேலதிக அரசாங்க அதிபர். வவுனியா) இடம் : வவுனியா நகரசபை கலாசார மண்டபம்

❖ 23.02.2014 பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம் அவர்களின் “இலக்கண மரபுகளும் மொழிவரலாறும்” நூல் வெளியீடு தலைமை : திரு.இ.கிருபா மூர்த்தி.

(தலைவர், ஸ்ரீகாளியம்மன் தேவஸ்தானம், குருமன்காடு,) பிரதம விருந்தினர் : திரு.கா.உதயராஜா, (பிரதேச செயலாளர். வவுனியா.) சிறப்பு விருந்தினர் : கலாபூஷணம்,தமிழ்மணி, கலாநிதி அகளங்கன், கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்.இடம் : ஸ்ரீகாளியம்மன் தேவஸ்தான கலாசார மண்டபம்.குருமன்காடு.

❖ 22.03.2014 வே.முல்லைத்தீபனின் "கடவுளிடம் சில கேள்விகள்" கவிதைநூல் வெளியீடு. தலைமை : கலாநிதி தமிழ்மணி அகளங்கன்.பிரதம விருந்தினர் : திரு.தட்சணாமூர்த்தி கெங்காதரன். (சட்டத்தரணியும், சமாதான நீதவானும், உத்தியோகப்பற்றற்ற நீதிபதியும், வவுனியா) இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்

❖ 29.03.2014 கந்தையா ஸ்ரீகந்தவேளின் "குட்டி முயலும் வேட்டை நாயும்" நாடக நூல் வெளியீடு. தலைமை : கலாநிதி தமிழ்மணி அகளங்கன். பிரதம விருந்தினர் : திரு.க.பரந்தாமன். (பிரதேச செயலாளர். வவுனியா வடக்கு) இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்

❖ 12.06.2014 வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் 20ஆண்டு நிறைவு சிறுவர் கலைவிழா. தலைமை : கலாநிதி தமிழ்மணி அகளங்கன் பிரதம விருந்தினர் : திரு.கா.உதயராஜா (பிரதேச செயலாளர், வவுனியா) இடம் : வவுனியா நகரசபை கலாசார மண்டபம்.

❖ 06.07.2014 முல்லை கலைஞர்கள் வழங்கும் வன்னி மன்னன் பண்டாரவன்னியன் நாடகவிழா. தலைமை : கௌரவ, வைத்திய கலாநிதி சி.சிவமோகன் (வடமாகாணசபை உறுப்பினர்) பிரதம விருந்தினர் : கௌரவ மாவை சோ.சேனாதிராசா (பாராளுமன்ற உறுப்பினர்,யாழ்) கௌரவ, சிவசக்தி ஆனந்தன். (பாராளுமன்ற உறுப்பினர்,வன்னி) இடம் : வவுனியா நகரசபை கலாசார மண்டபம்.

❖ 12.07.2014 செல்விகள் சாம்பவி ஸ்ரீசுப்ரமணியம், காயத்திரி தர்மானந் ஆகியோரின் வீணை அரங்கேற்றம், பிரதம விருந்தினர் : சங்கீத கலாவித்தகர், திருமதி.யசோதா பாலேஸ்வரன், இடம் : றோயல் கார்டின் மண்டபம் வவுனியா.

❖ 17.07.2014 ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம். தலைமை : திரு.கா.உதயராஜா (பிரதேச செயலாளர் வவுனியா.) பிரதம விருந்தினர் திரு.எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர (அரச அதிபர் வவுனியா,) வடமாகாண கல்வி பண்பாட்லுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா பிரதேச செயலகம் நடாத்தியது. இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்

❖ 20.07.2014 தமிழறிஞர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் மணிவிழா. தலைமை : கலைஞர் திருமிகு உடுவை.சி.தில்லை நடராஜா.இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்

❖ 27.07.2014 மாணிக்கம் ஜெகனின் "கூவாதே!கூடுகட்டு"கவிதை நூல் வெளியீடு. தலைமை : கலாநிதி தமிழ்மணி அகளங்கன், பிரதம விருந்தினர்

: கௌரவ.த.குருகுலராஜா. (கல்வி. பண். அமைச்சர். வடக்கு மாகாணம்)

இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்.

❖ 16.08.2014 சர்வதேச இந்து இளைஞர் பேரவை,வவுனியா நடாத்திய முத்தமிழ் சங்கமம் -2014. தலைமை : சைவ சித்தாந்த முதுமாணி,சி.வ.கஜேந்திரகுமார், முதன்மை விருந்தினர் கலாநிதி, ஆறு திருமுருகன். பிரதம விருந்தினர் : பேராசிரியர் வ.மகேஸ்வரன் (பேராதனைப் பல்கலைக்கழகம்) சிறப்பு விருந்தினர் : பேராசிரியர்.கி.விசாகருபன் (யாழ்ப் பல்கலைக்கழகம்) இடம் : சிந்தாமணிப்பிள்ளையார் கோவில் திருமண மண்டபம்.

❖ 17.08.2014 சிவராணியின் பிருந்தாவனம் சஞ்சிகை வெளியீடு. தலைமை : கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள். பிரதம விருந்தினர் : கௌரவ.ந.சிவசக்தி ஆனந்தன். (வன்னி-பாராளுமன்ற உறுப்பினர்,கௌரவ செல்வம், அடைக்கல நாதன் (வன்னி பாராளுமன்ற உறுப்பினர்) இடம் : சிந்தாமணிப்பிள்ளையார் கோவில். திருமண மண்டபம்.

❖ 25.08.2014 தேசிய வீரன் பண்டார வன்னியன் ஞாபகார்த்த விழா. தலைமை : கலாபூஷணம், இரத்தினசிங்கம் சிவசோதி.(சமா, நீதி). பிரதம விருந்தினர் : திரு.எம்.கே.பந்துல ஹரிச்சந்திர, அரச அதிபர்,வவுனியா) இடம் : நகரசபை கலாசார மண்டபம் வவுனியா.

❖ 15.09.2014 "என்ன தொழில் செய்யலாம்" மாத இதழ் வெளியீடு. தலைமை : திரு.எஸ்.ஸ்ரீநிவாசன் பிரதம விருந்தினர் : திருமதி.சரஸ்வதி மோகநாதன் (மேலதிக அரசாங்க அதிபர் - வவுனியா) இடம் : வெங்கடேஸ்வரா மஹால் மன்னார் வீதி, வேப்பங்குளம்.

❖ 21.09.2014 மைதிலி தயாபரனின் "வாழும் காலம் யாவிலும்"சொந்தங்களை வாழ்த்தி" ஆகிய நாவல்கள் வெளியீடு. தலைமை : கலாநிதி தமிழ்மணி அகளங்கன். பிரதம விருந்தினர் : கௌரவ திருமதி.க.சிவபாதசுந்தரம் (நீதிபதி.மேல் நீதிமன்றம் வவுனியா) இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்.

❖ 21.09.2014 யாழ் இந்திய துணைத் தூதரகமும், வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியும் இணைந்து வழங்கிய "நர்த்தனாஞ்சலி" மாபெரும் நடன நிகழ்ச்சி. தலைமை : கலாநிதி தமிழ்மணி அகளங்கன், பிரதம விருந்தினர் : வைத்திய கலாநிதி .ப.சத்தியலிங்கம் (சுகாதார அமைச்சர் - வடக்கு மாகாணம்) கௌரவ விருந்தினர் : திரு.சு. தட்சணாமூர்த்தி.(இந்திய பிரதித் துணைத் தூதுவர்) இடம் : வவுனியா நகரசபை கலாசார மண்டபம்.

❖ 23.09.2014 மாவட்ட இலக்கிய கலை விழா. தலைமை : திரு.எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர (அரச அதிபர் வவுனியா) பிரதம விருந்தினர் : கௌரவ அப்துல் ரிஷாட் பதியுதீன் (கைத்தொழில்,வணிக அமைச்சர்) இடம் : வவுனியா நகரசபை கலாசார மண்டபம்

❖ 25.09.2014 நெடுங்கேணி பிரதேச இலக்கிய விழா. தலைமை : திரு,க.பரந்தாமன். (பிரதேச செயலாளர் நெடுங்கேணி) பிரதம விருந்தினர் திருமதி உஷா சுபலிங்கம் (பிரதிப்பணிப்பாளர், பண். அமைச்சு) இடம் : நெடுங்கேணி பிரதேச செயலகம்

❖ 05.10.2014 சைவ சித்தாந்த வித்தகர் பண்டிதர் அமரர் செ.சிவலிங்கம் அவர்களின் "கந்தபுராணச் சுருக்கம்"நூல் அறிமுகம். தலைமை : திரு.மிகு.பொ.சிவஞானம் (இளைப்பாறிய அதிபர்) பிரதம விருந்தினர் : வைத்திய கலாநிதி.ப.சத்தியலிங்கம் (சுகாதார அமைச்சர், வடக்கு மாகாணம்) திருமிகு.ந.சிவசக்தி ஆனந்தன். (வன்னி பாராளுமன்ற உறுப்பினர்) இடம் : வ/ஓமந்தை மத்திய கல்லூரி.

❖ 02.11.2014 வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா - 2014
தலைமை : திரு.சி.சத்தியசீலன் (செயலாளர். கல்வி. அமைச்சு, வடமாகாணம்,) பிரதம விருந்தினர் : கௌரவ.சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சர். வடக்கு மாகாணம்) இடம் : வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயம் (கருத்தரங்குகள்). வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் (கலை நிகழ்ச்சிகள் - பரிசளிப்பு)

❖ 29.11.2014, வவுனியா நகரசபையின் தேசிய வாசிப்பு மாதம். பரிசளிப்பு, தலைமை : திரு.க.சத்தியசீலன் (செயலாளர் நகரசபை) பிரதம விருந்தினர் : திரு.எஸ்.திருவாகரன் (வடமாகாண முதலமைச்சர், மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்) இடம் : வவுனியா நகரசபை ,கலாசார மண்டபம்.

❖ 03.12.2014 வவுனியா மாவட்டச் செயலகமும்,மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம், ஓகான், வரோட், தமிழ் விருட்சம், இணைந்து நடாத்திய சர்வதேச விசேட தேவை உடையோர் தின விழா. பிரதம விருந்தினர்கள் : திரு.எம்.கே.பந்துல ஹரிச்சந்திர (அரச அதிபர் வவுனியா) தலைமை : திரு.செ.ஸ்ரீநிவாசன் (மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்) இடம் : வவுனியா நகரசபை கலாசார மண்டபம்.

❖ வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கம், வவுனியா சேக்கிழார் மன்றம், வவுனியா மணிவாசகர் சபை, வவுனியா அறநெறிப்பாடசாலைகளின் ஒன்றியம், வவுனியாவரியிறுப்பாளர் சங்கம், வவுனியா தமிழ்ச் சங்கம், வவுனியா திருமறைக் கலாமன்றம் ,முதலான அமைப்புக்களின் நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன. பாடசாலைகளிலும், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் தமிழ்விழாக்கள் நடைபெற்றன.

## *வாழ்த்து - 01*

இந்தியப் புதுச்சேரி மாநிலத்தில் செம்பணிச் சிகரம் எனும் வாழ்நாட் சாதனையாளர் விருது பெற்ற டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், கலாநிதி தமிழ்மணி அகளங்கன், டாக்டர் ஓ.கே.குணநாதன் ஆகியோரை வட்டம் வாழ்த்துகிறது.




## *வாழ்த்து - 02*

*2014ல் கலாசார அமைச்சின் கலாபூஷணம் விருது பெற்றோர். (வவுனியா மாவட்டம்)*

(1) சிவஸ்ரீ.க.கந்தசாமிக் குருக்கள்
(2) செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்
(3) திருமதி. புவனநாயகி ஐயம்பிள்ளை
(4) திரு.இராமசாமி சுப்பிரமணியம்
(5) திரு.ஆழ்வாப்பிள்ளை பத்மநாதன்
(6) திரு.முத்துராஜா குமாரசிங்கம்

## *வாழ்த்து - 03*

*2014இல் வடமாகாண முதலமைச்சர் விருது பெற்றோர் வவுனியா மாவட்டம்*

திருமதி.தமயந்தி சுந்தரலிங்கம் (தமிழ்க்கவி) - இலக்கியம்
செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம் - பல்துறை
ஆகியோர்க்கு வட்டத்தின் வாழ்த்துக்கள்





வவுனியா
திருமறைக்கலாமன்றத்தின்
எங்கள் தோள்களில்
வீதி நாடகம்
வவுனியா பிரதேச
செயலகத்தில்

மாசி மாமழையா 1997

## வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடாத்தும் பதினேழாண்டு நிறைவு விழா - நிகழ்வு 178

**காலம் : 05.03.2015 வியாழக் கிழமை காலை 09.30 மணி**
**இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்**

**தலைமை**
**கலாநிதி.தமிழ்மணி அகளங்கன்** அவர்கள்
(தலைவர், வ.க.இ.ந.வட்டம்)

**பிரதம விருந்தினர்**
**திரு.க.அருள்வேல்** அவர்கள்
(வவுனியா வளாக முதல்வர், யாழ் பல்கலைக்கழகம்)

**விசேட விருந்தினர்**
**திரு.ஜி.ரி.லிங்கநாதன்** அவர்கள்
(வடக்கு மாகாணசபை உறுப்பினர்)

**சிறப்பு விருந்தினர்கள்**
**திருமதி.சரஸ்வதி மோகநாதன்** அவர்கள்
(மேலதிக அரசாங்க அதிபர், வவுனியா)
**திரு.கா.உதயராஜா** அவர்கள்
(பிரதேச செயலாளர், வவுனியா)
**திரு.க.சத்தியசிலன்** அவர்கள்
(செயலாளர், நகரசபை, வவுனியா)
**திரு.இ.நித்தியானந்தன்** அவர்கள்
(மாவட்டக் கலாசார உத்தியோகத்தர், வவுனியா)

**கௌரவ விருந்தினர்கள்**
**மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராசா** அவர்கள்
(தலைவர், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா)
**சைவசிரோமணி சி.சுப்பிரமணியம்** அவர்கள்
(தலைவர் பல.நோ.கூ.சங்கம், வவுனியா)
**சிவநெறிப்புரவலர் சி.ஏ.இராமஸ்வாமி** அவர்கள்
(செயலாளர், இந்துமாமன்றம், வவுனியா)
**டாக்டர்.ஓ.கே.குணநாதன்** அவர்கள்
(மேலாளர். எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்)
**நயினை கி.கிருபானந்தா** அவர்கள்
(செயலாளர், யாழ் இலக்கிய வட்டம்)
**பிரம்மஸ்ரீ.மஹா.தர்மகுமார சர்மா** அவர்கள்
(தலைவர், மன்னார் மாவட்ட சைவ கலை இலக்கிய மன்றம்)

## நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்
தமிழ் வணக்கப் பாடல் : **செல்வன்.ஜெயசீங்கம் ஷதுசன்** அவர்கள்
வரவேற்பு நடனம் : **நிருத்தியவாணி திருமதி.சூரியயாழினி வீரசிங்கம்** அவர்களின் நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி மாணவிகள்.
வரவேற்புரை : **வித்தியாரத்தினா.ந.பார்த்திபன்** அவர்கள்
(உபதலைவர் வ.க.இ.ந.வட்டம்)
தலைமை உரை

**மாருதம் சஞ்சிகை இதழ் 15 வெளியீடு**
**முதற்பிரதி பெறுபவர்**
**அருட்கலைவாரிதி**
**கலாபூஷணம், ஸ்தபதி சு.சண்முகவடிவேல் அவர்கள்**

**அறிமுக உரை**
**திரு.ஆ.லோகேஸ்வரன் அவர்கள்**
(ஆசிரியர், புதுக்குளம் மகாவித்தியாலயம்)

**நூல் வெளியீடு**
**திருமதி நெலோமி அன்ரனி குரூஸ் அவர்களின்**
(விரிவுரையாளர், வ.தே.கல்வியியற்கல்லூரி)

**"கூடிக்குதிப்போம்"**
[சிறுவர் நாடகம்]

**அறிமுக உரை**
**திரு.பொ.சத்தியநாதன் அவர்கள்**
(விரிவுரையாளர் வ.தே.கல்வியியற் கல்லூரி வவுனியா)

## உரை அரங்கு

கல்வியும் சமூகமும்
**வித்தியாரத்தினா.சி.வரதராஜன் அவர்கள்**
(ஆசிரியர், வ/பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயம்)

சமயமும் சமூகமும்
**இன்தமிழ் இனியன்.எஸ்.எஸ்.வாசன் அவர்கள்**
(மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்)

கலையும் சமூகமும்
**இலக்கியச்சுடர்.ஐ.கதிர்காமசேகரன் அவர்கள்**
(ஆசிரியர், வ/இ.தி.த.ம.வி)

## கௌரவிப்பு நிகழ்வு

சான்றோர் விருது வழங்கும் வைபவம்

**கௌரவிப்பு உரை**
**கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன்** அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளரும், மொழிபெயர்ப்புக்கற்கைகள் இணைப்பாளரும், யாழ் பல்கலைக்கழகம், செயலாளர், வவுனியா க.இ.நு.வ)

**"கலை இலக்கியச் செல்வர்"** விருது பெறுபவர்
செல்வி.மேரி அன்ரோனியா ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள்
(ஓய்வுநிலை பிரதி அதிபர் வ/இற.மக.மகா.வித்தியாலயம்)

**"இயற்றமிழ்ச் செல்வர்"** விருது பெறுபவர்
பண்டிதை செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம் அவர்கள்
(ஓய்வுநிலை ஆசிரியை வ/த.ம.ம.வி)

**"ஆடற்கலைச் செல்வர்"** விருது பெறுபவர்
திருமதி.சூரியயாழினி வீரசிங்கம் அவர்கள்
(ஆசிரிய ஆலோசகர், நடனம், வவுனியா தெற்கு வலயம்)

**சிறப்பு விருந்தினர் உரை**

**விசேட விருந்தினர் உரை**

**பிரதம விருந்தினர் உரை**

## கலை நிகழ்ச்சிகள்

வில்லுப்பாட்டு
**தீயவை செய்து தீமையைத் தேடாதே**
(வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகள்)
ஆக்கம் - நெறியாள்கை
திருமதி.சத்தியபாமதி தனபால் அவர்கள்
(பிரதிஅதிபர். வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

நாடகம்
வவுனியா திருமறைக் கலா மன்றத்தின்
**பச்சை மேகம்...**

**கூத்து**
(முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தின்
**கூத்துவழி நடனம்**

கவி அளிக்கை
**கவிஞர்கள்.** மாணிக்கம்ஜெகன்
த.தனசீலன்
த.பிரதாபன்
து.நந்தீஸ்வரி
நா.தியாகராசா
மைதிலி தயாபரன்
த.சந்திரமோகன்

நன்றியுரை
**நாடக சிரோமணி கந்தையா ஸ்ரீகந்தவேள் அவர்கள்**
(அதிபர் பாவற்குளம் கலைமகள் வித்தியாலயம்)

நிகழ்ச்சித் தொகுப்பாளர்
**சித்திரக்குரலோன்.சி.நாகராஜா அவர்கள்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**விளம்பர உதவி:**


**அறிவாலயம்**
(பாடசாலை உபகரணங்கள்,
புத்தகங்கள் விற்பனை செய்வோர்)
**190B, புகையிரத நிலைய வீதி,**
**வைரவபுளியங்குளம்,**
**வவுனியா.**


# METO TRADERS

*Dealers in*
*Electrical Goods & Plumbing Items*

*35A, Bus Stand Shopping Complex,*
*Vavuniya.*
*Phone : 024 - 2222572*

# L S Communication

*Dealers in Imitation Jewellery, Fancy Goods, Cosmetics, Cycle Parts, Flowers, Electrical Items, Gift Items & etc*






*324, Mannar Road, Vavuniya.*
*Tel : 024 2223180, Fax : 024 2223181*

# செந்தில் நாதன் நற்பணி மன்றம்

*1ம் குறுக்குத்தெரு,*
*வவுனியா.*

# N.S.RATNAM & BROS

***Dealers in***
***all kinds of electronic items and spares***

**HONDA**

***No.6, 1st Cross Street,***
***Vavuniya.***
***Tel / Fax : 024 - 2221237***

# வெங்கடேஸ்வரா

பல்பொருள் வாணிப நிலையம்

இல.15, பஸாரவீதி,

வவுனியா.

தொ.பே.இல : 024 2222418



# ஈசன்



இரசாயன உரங்கள், கிருமி நாசினிகள்

விற்பனையாளர்.

இல : 27, பசார்வீதி, வவுனியா.

# இராசையா மருந்துக்கடை



**கோயில் அபிஷேகப்பொருட்கள், வாசனைத்திரவியங்கள்,**

**இந்திய ஊதுபத்திகள், சில்லறையாகவும்**

**மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**


**இல.202, பஸார்வீதி, வவுனியா.**

**இல.53, நவீனசந்தை, வவுனியா.**

# Akash

024 2224965

111 Bus Stand Complex, Vavuniya.
024 2224965, 077 4820023 akashgraphics.lk@gmail.com



THIRUMAHAL BOOK CENTER

திருமகள் புத்தக நிலையம்

*Stationery, Greeting & Invitation Cards,*
*Diaries, Calendars*
*& Fancy Goods.*





*No : 14, Tharmalingam Road,*
*Vavuniya.*





*For Genuine*
*22ct Gold Jewellery*

Ambal Jewellers



WESTERN UNION

FAST, RELIABLE, WORLDWIDE MONEY TRANSFER



*T.p & Fax : 024 2222 421*
*# 09, Horawapothana Road, Vavuniya.*

மாருதம் சிறப்புற வாழ்த்துகிறோம்,

ஜீ.எச்.ஏ.டீ.சில்வா அன் கோ.

பஜார் வீதி, வவுனியா.

Printed by multivision - 024 2223669